


# புரட்சிப் பெரியார் முழக்கம்

**பெரியார் திராவிடர் கழக வார ஏடு**

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | **periyardk.org** | திருவள்ளுவர் ஆண்டு 2042 | பிப்ரவரி 03, 2011 | புரட்சி 10 | முழக்கம் 3 | **விலை: ரூ.2.50**


## தமிழக மீனவர் தொடர் படுகொலைக்கு பதிலடி

# சிங்கள புத்த மடத்தை தாக்கியதாக 7 கழகத் தோழர்கள் கைது

சிங்கள கடற்படை 500-க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களை நடுக்கடலில் படுகொலை புரிந்த நிலையில், கடந்த ஜனவரி மாதத்தில் அடுத்தடுத்து இரண்டு தமிழக மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இதில் வேதாரண்யம் புஷ்பவனம் கிராமத்தைச் சேர்ந்த ஜெயக்குமார் என்பவர் மிகவும் கொடூரமான முறையில் கயிற்றால் கழுத்தை இறுக்கி கடலில் வீசி கொல்லப்பட்டார். இப்படுகொலை தமிழக மக்களிடையே கடுமையான அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இதன் காரணமாக சென்னையிலுள்ள சிங்கள புத்த போதி சங்கத்தின் மீது கடந்த 24.1.2011 அன்று இரவு 9.30 மணியளவில் எதிர்வினை தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் அம்மடத்தில் உள்ள பொருட்கள், வாகனம் ஆகியவை சேதப்படுத்தப்பட்டதாகவும், ஒரு சில சிங்களவர்கள் காயம் அடைந்ததாகவும் காவல் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதன் எதிரொலியாக கழகத்தைச் சேர்ந்த 7 பேர் 27 ஆம் தேதியன்று எழும்பூர் காவல் நிலையத்தில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் அன்று மாலையே நேர் நிறுத்தப்பட்டனர். அப்போது எழும்பூர் நீதிமன்றத்தில் இருந்த 100-க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யக் கோரியும், தமிழக மற்றும் இந்திய அரசைக் கண்டித்தும் முழக்கங்கள் எழுப்பி கைது செய்யப்பட்ட தோழர்களுக்கு தேநீர் விருந்து அளித்தனர். மேலும் வழக்கு விசாரணையின் போது தாமாகவே முன் வந்து கழகத் தோழர்களுக்காக, அவர்களை கைது செய்தது சட்ட விரோதம் என அரை மணி நேரத்திற்கும் மேலாக நீதிபதியிடம் வாதம் செய்தனர்.

இவ்வழக்கில் காஞ்சி மாவட்ட அமைப்பாளர் டேவிட் பெரியார், இரவிக்குமார் (திருவல்லிக்கேணி), பாஸ்கர் (பொன்னேரி), நாத்திகன், அப்பு (மயிலாப்பூர்), சுகுமார், சம்பத் (எ) அங்காடி (இராயப்பேட்டை) ஆகியோர் கைது செய்யப்பட்டு 15 நாள் காவலில் புழல் சிறைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்களுடன் ஓர் ஆட்டோவும் காவல் துறையால் கைப்பற்றப்பட்டது. வழக்கறிஞர் குமாரதேவன் கழகத் தோழர்களுக்காக நீதிமன்றத்தில் நேர் நின்றார். வழக்கறிஞர் அமர்நாத் மற்றும் ஜான் ஆகியோர் காவல் நிலையத்திலும் நீதி மன்றத்திலும் தோழர்களுக்கு ஆதரவாக உதவி புரிந்தனர். சென்னை மாவட்ட நிர்வாகிகளும், தோழர்களும் திரளாக எழும்பூர் நீதிமன்றத்தில் கூடி நின்று கைது செய்யப்பட்ட தோழர்களுக்கு ஆதரவாகவும், மத்திய மாநில அரசுகளைக் கண்டித்தும் முக்கங்கள் எழுப்பி தோழர்களை வழியனுப்பி வைத்தனர். கைது செய்யப்பட்டவர்களை பிணையில் விடுதலை செய்யக் கோரும் மனு திங்கள் அன்று 31.1.11 விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அடுத்த நாள் 1.2.11 செவ்வாய் கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டது. செவ்வாய் கிழமை அனைவருக்கும் பிணை வழங்கப்பட்டது.

### தாக்குதல் குறித்து ஏடுகள் கருத்து

சென்னையில் சிங்களர்களின் மகாபோதி சங்கம் தாக்கப்பட்டதால் ஏற்பட்ட தாக்கம் என்ன ? இப்படி ஒரு தாக்குதல் நடந்த பிறகே, இலங்கை தூதர் இனி மீனவர்களை தாக்க மாட்டோம் என்று உறுதி கூறினார் என்று, 'தினமணி' நாளேடு கட்டுரை வெளியிட்டுள்ளது. 28.1.2011 அன்று 'தினமணி' வெளியிட்ட கட்டுரையின் ஒரு பகுதி :

"தமிழக மீனவர்கள் ஒவ்வொருமுறை சுடப்படும் போதும் மத்திய அரசின் மென்மையான கண்டிப்பும், கடிதம், தந்தி மட்டுமே அனுப்பும் தமிழக அரசின் நடவடிக்கைகளும் ஜன.12 ஆம் தேதியும், ஜன.22 ஆம் தேதியும் நடந்த படுகொலைச் சம்பவங்களின் பின்பு மாறியிருக்கிறது. இருமுறையும் சற்றே வேகம் காட்டியுள்ள மத்திய, மாநில அரசுகளைப் போன்று இலங்கை அரசும் துரிதமாகச் செயல்பட்டிருக்கிறது.

இந்த நிகழ்வுகளில் கவனிக்க வேண்டியது 3 விஷயங்கள். முதலில், இம்முறை மீனவர் ஜெயக்குமார் என்பவர் சுடப்படவில்லை. கயிற்றால் கழுத்து இறக்கிக் கொல்லப்பட்டிருக்கிறார். அதாவது, தெரியாமலோ அல்லது தவறுதலாகவோ சுடப்படவில்லை என்பது தெளிவாகிறது. இரண்டாவது ஜன.12 ஆம் தேதி மீனவர் சுட்டுக் கொல்லப்பட்டபோது இலங்கைத் தூதரை அழைத்துக் கண்டனம் தெரிவித்த பின்னும் கவனத்தில் கொள்ளாமல் மீண்டும் படுகொலை செய்ததற்கு மத்திய அரசு மீண்டும் கடும் கண்டனம் தெரிவித்திருக்கிறது (எச்சரிக்கை அல்ல !). மூன்றாவது, இலங்கை அரசு இதற்கு பதிலளிக்கும் விதமாக இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் பிரசாத் கரியவாசம் மூலம் இனி மேல் சுடமாட்டோம் என உறுதி அளித்திருக்கிறது. அதாவது 'இது வரை சுட்டது நாங்கதான்' என்பதை எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்பதைப்போல ஒத்துக் கொண்டிருக்கிறது.

**மீனவர் கொல்லப்பட்டதை அடுத்து சென்னையில் உள்ள இலங்கை மகாபோதி சங்கத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் சிலர்காயமடைந்தது குறித்து விளக்கம் அறிய வந்தபோதுதான், தமிழக அரசு தலைமைச் செயலரிடம் மேற்கண்ட உறுதியைக் கூறியிருக்கிறார் இலங்கைத் தூதர்.**

**முதலில் ஒரு மீனவர் கொல்லப்படுகிறார். பிறகு ஒரு கும்பல் இலங்கை சங்கத்தின் மீது தாக்குதல் நடத்துகிறது. ஆனால், தூதரோ தாக்குதல் நடத்தப்பட்டதை முதன்மைப்படுத்தி மாநில அரசைச் சந்திக்கிறார். ஒரு தாக்குதலுக்கே இலங்கை அரசு தூதரை அனுப்பி விளக்கம் கேட்கிறது. ஆனால், 400-க்கும் மேலான தமிழக மீனவர்கள் கொல்லப்பட்ட போதும் மத்திய அரசு எடுத்த உறுதியான நடவடிக்கை என்ன என்பது தான் தெரியவில்லை. எப்படிச் சொன்னாலும் இலங்கையில் யாரும் கேட்க மாட்டார்கள் என்று மென்மையான கண்டிப்புடன் நிறுத்தி விட்டார்கள் போலும்"** - என்று 'தினமணி' கட்டுரை வெளியிட்டுள்ளது.

### டைம்ஸ் ஆப் இந்தியா

மகாபோதி சங்கம் தாக்கப்பட்டதால் சிங்களர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். ஆனாலும் சென்னையில் வாழ பயப்பட மாட்டோம் என்று சிங்களர்கள் கூறுவதாக 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேடு (ஜன. 28) செய்தி வெளியிட்டுள்ளது. சிரோமி அலெக்சாண்டர் என்ற சுற்றுலா வழிகாட்டியாக பணியாற்றும் சிங்களப் பெண் கூறுகையில், "தாக்குதல் வேதனைக்குரியது; சிங்களர்களுக்கு எதிரான இந்த உணர்வு ஒட்டு மொத்த தமிழர்களின் உணர்வாக கருத முடியாது; ஆனாலும் தமிழகத்துக்கு சுற்றுலா வரும் சிங்களர்களின் எண்ணிக்கை குறையும்" என்று கவலை தெரிவித்தார். தாக்குதலுக்கு உள்ளான மகாபோதி சங்கம் 80 ஆண்டு பழமையானது. 40 ஆண்டுகளுக்கு முன்பு புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டன. சென்னையில் 500 சிங்கள குடும்பங்கள் வாழ்கின்றன. பெரும்பாலோர், இலங்கை தூதரக ஊழியர்கள்.

சென்னையிலுள்ள இலங்கை துணை தூதர் வடிவேல் கிருட்டிணமூர்த்தி கூறுகையில், "ஒரு சிறிய குழு ரகசியமாக இத்தாக்குதலை நடத்தியுள்ளது" என்று கூறினார். ஆனால், சிங்கள மாணவர் தினந்து என்பவர், "சிறிய குழுவின் தாக்குதல் என்று கூறி, பிரச்சினையை அலட்சியப்படுத்தக் கூடாது; யுத்த பூமியாகிவிட்ட இலங்கையில் தமிழர்கள் கடும் துயரத்துக்கு உள்ளாகியுள்ளனர். இலங்கையில் அகதிகளாக புலம் பெயர்ந்துள்ள தமிழர்களின் அவலமான வாழ்க்கையால் இங்கே தமிழர்கள், மிகவும் கொதிப்படைந்துள்ளனர். அதனால் உருவான பாதிப்புதான் இந்தத் தாக்குதல். எனவே இலங்கை அரசு பிரச்சினைக்கு தீர்வு காண முன்வர வேண்டும். ஏதோ சிறிய குழுவினரின் தாக்குதல் என்று கூறி, பிரச்சினையை திசை திருப்பக் கூடாது" என்று கூறியுள்ளார்.

# கேரளாவில் பொங்கலுக்கு விடுமுறை: கழகம் எடுத்த முயற்சி வெற்றி




இந்திய துணைக் கண்டத்தில் மொழி வழி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட பிறகு பாலக்காடு, இடுக்கி, பத்தனம் திட்டை, திருவனந்தபுரம் ஆகிய மாவட்டங்களில் அதிக நெருக்கமாக தமிழர்கள் வசிக்கின்றனர் என்று கேரள அரசே அறிவித்துள்ளது. தமிழகத்தில் எவ்வாறு கல்லூரிகள், பள்ளிகளில் மலையாளம் விருப்பப் பாடமாகவும், சில பள்ளிகளில் பயிற்சி மொழியாகவும் உள்ள தோ, அதேபோல கேர ளாவில் மேற் சொன்ன மாவட்டங் களில் பல பள்ளி, கல்லூரிகளில் தமிழ் விருப்பப் பாடமாக வும், பயிற்சி மொழி யாகவும் உள்ளது. மேலும், மேற்கண்ட மாவட்டங்களிலுள்ள கல்லூரிகளில் தமிழ்த் துறை தனியாக இயங்கி வருகின்றது. ஆனால், மொழி வழி மாநிலமாக கேரளா பிரிக்கப்பட்டபின் தமிழர் திருநாளான அறுவடை திருநாளாகவும், தமிழ்ப் புத்தாண்டு தினமாகவும் கொண்டாடப் படுகின்ற பொங்கல் நாளை விடுறை நாளாக அறிவிக்காதது கேரள அரசின் தமிழர்களுக்கு எதிரான போக்காகவே இருந்தது. ஆனால், தமிழக அரசு மொழி வாரி மாநிலமாக பிரிக்கப்பட்ட 1956-க்குப் பின் தமிழகத்தில் கணிசமாக மலையாளிகள் வாழ்கின்ற நீலகிரி, கோவை, திருப்பூர், கன்னியாகுமரி, சென்னை ஆகிய மாவட்டங்களுக்கு ஓணம் பண்டிகையை ஒட்டி விடுமுறை அளித்திருக்கிறது. தமிழர் திருநாளாம் தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாளான

(4 ஆம் பக்கம்)

**தலையங்கம்**

# ஒப்புதல் வாக்குமூலம்

“பொன்னம்பலமேட்டில் மகர ஜோதியை மனிதர்கள் தான் ஏற்றுகிறார்கள். இது எல்லோருக்கும் தெரியும். அதை திருவாங்கூர் தேவஸ்வம் போர்டும் (அறங்காவலர் குழு) அங்கீகரித்து உள்ளது. மகர ஜோதி ஏற்றப்படும் பிரச்சினையில் இந்துக்களிடையே ஒரு நம்பிக்கை உள்ளது. அந்த நம்பிக்கையில் தேவஸ்வம் போர்டு தலையிட விரும்பவில்லை. மனிதர் களால்தான் மகர ஜோதி ஏற்றப்படு கிறது என்று பிரச்சாரம் செய்யவும் தேவஸ்வம் போர்டு விரும்பவில்லை” (தினத்தந்தி பிப்.1)

– என்று திருவாங்கூர் ‘தேவஸ்வம் போர்டு’ கூட்டத்துக்குப் பிறகு அதன் தலைவர் எம். இராஜ கோபால் நாயர் செய்தியாளர்களிடம் உண்மையை ஒப்புக் கொண்டுள்ளார். மக்களிடம் உண்மையை விளக்கி அவர்களைத் திருத்த வேண்டும் என்பது இவர்களின் நோக்கமல்ல; மாறாக கேரள உயர்நீதிமன்றம் இது பற்றிய உண்மையை மக்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்று கண்டிப்பாக ஆணையிட்டதால், உண்மைகளை கூற வேண்டிய நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

கேரளாவில் மார்க்சிஸ்ட் கட்சியைச் சார்ந்த அச்சுதானந்தன் தலைமையில் இடதுசாரி அணியின் ஆட்சி நடக்கிறது. உயர்நீதிமன்றத்தின் கேள்விக்கு பதில் சொல்ல முடியாது என்றும், மக்களின் நம்பிக்கையில் தங்களது ஆட்சி குறுக்கிடாது என்றும், இது குறித்து எந்த விசாரணையும் தமது ஆட்சி நடத்தாது என்றும் அச்சுதானந்தன் கூறிவிட்டார்.

மூடநம்பிக்கைகளில் மக்களை மூழ்க வைத்து அவர்களை சுரண்டுவதற்கு துணை போவது தான் கேரளாவின் ‘மார்க்சியம்’ போலும்.

பேய், பில்லி, சூன்யம் என்பதுகூட மக்களின் நம்பிக்கைதான். அதற்காக மக்களின் நம்பிக்கை யில் தலையிட மாட்டோம் என்ற கூறி இந்த நம்பிக்கைகளின் அடிப்படையில் நிகழும் மனித விரோதச் செயல்களை ஒரு அரசு வேடிக்கை பார்க்க முடியுமா என்று கேட்கிறோம்.

பாபர் மசூதி இருந்த இடத்தில்தான் ராமன் பிறந்தான் என்று பக்தர்கள் நம்புகிறார்கள் என்று அலகாபாத் நீதிமன்றம் கூறிய தீர்ப்புக்கும், கேரள மார்க்சிஸ்ட் முதல்வரின் கருத்துக்கும் எந்த வேறுபாடும் இருக்க முடியாது.

‘மகர ஜோதி புனித நட்சத்திரமல்ல; அது மனிதர்களால் ஏற்றப்படும் தீ’ என்ற உண்மையை வெளிக்கொண்டு வர 103 அய்யப்ப பக்தர்கள் மரணமடைய வேண்டியிருக்கிறது.

“கடவுள் சக்தி என்று ஒன்றுமில்லை; அது மக்களிடமிருந்து காசைப் பறிக்க நாங்கள் ஏற்படுத்திக் கொண்டுள்ள ஒரு நிறுவனம்” என்று அறங்காவலர் குழு கூறும் காலம் ஒன்று வரத்தான் போகிறது. அந்தக் காலம் வருவதற்கு இன்னும் எத்தனை மனித உயிர்கள் பலியாக வேண்டுமோ தெரியவில்லை.

இந்த மோசடிகளை மக்களிடம் எடுத்துக் கூறி பகுத்தறிவைப் பரப்புவதற்கு பெரியார் இயக் கத்தைத் தவிர, வேறு எந்த ‘புரட்சிகர முற்போக்கு’ அமைப்புகளும் முன் வருவதில்லையே!

பகுத்தறிவைக் கூடப் பரப்ப வேண்டாம்; மூடத்தனத்துக்கு துணைப் போகாமலாவது இருக்கக் கூடாதா?

தனது வறுமைக்கும், சாதி இழிவுக்கும், கடவுளும் மதமும் காரணம் என்று நம்பிக் கொண்டு துன்ப துயரங்களுக்கு விரதங்களையும், பரிகாரங்களையும், தரிசனங்களையும் நோக்கி ஓடிக் கொண்டிருக்கிற மனிதர்களிடம், எப்படி புரட்சியையும் சமூக மாற்றத்தையும் கொண்டு வர முடியும்?

பெரியார் இயக்கம் நீண்டகாலமாக கேட்கும் இந்தக் கேள்வியையே மீண்டும் கேட்கிறோம்!

# திருமங்கலக்குடி கோவிந்தராசனின் மகத்தான தொண்டு (2)

பெரியார் இயக்கத்துக்காக உழைத்து உள்ளூர் மட்டத்தில் போராடி சாதனைகள் புரிந்த எத்தனையோ சுயமரியாதை வீரர்கள் அடையாள மின்றி புதைந்து போய்விட்டார்கள். அவர்களின் இறுதிக்கால வாழ்க்கை இரத்தக் கண்ணீர் வரவழைக் கிறது. மாற்றுப் பண்பாட்டை நோக்கி பயணித்து எதிர் நீச்சலில் வாழும் பெரியாரியலாளர்களுக்கு சோகமான இறுதிக் காலங்கள் நிகழ்ந்து விடாமல் அவர்களின் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்யும் உன்னத முயற்சி தான் “கருஞ்சிணை”. அந்த அமைப்பு பற்றி வெளிவந்த வெளியீட்டில் திருமங்கலக்குடி கோவிந்தராசன் என்ற கறுப்பு ‘மெழுகுவர்த்தி’யின் தொண்டுகள் விவரிக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதியை வாசகர் களுடன் கனத்த இதயத்துடன் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ பகிர்ந்து கொள்கிறது. (சென்ற இதழ் தொடர்ச்சி)

### புரோகிதர் மானியம் ஒழிப்பு

ஒரு கிராமத்தில் ஒரு சலவைத் தொழிலாளரின் மகன் தானும் சலவைத் தொழிலையே மேற்கொண்டால் அந்த மகனுக்கு கிராம விளைச்சலில் ஒரு குறிப்பிட்ட பங்கு நெல் மானியமாக வழங்கப்படும். அதுபோல் ஒரு செருப்புத் தைக்கும் தொழிலாளரின் மகன் தானும் செருப்புத் தைத்தால்தான் அந்தக் குடும்பத்துக்கு நெல் மானியம் வழங்கப்படும். ஆனால் ஒரு பார்ப்பானின் மகன் கோயிலில் மணி அடித்தாலும் அடிக்காவிட்டாலும் கலெக்டர் ஆனாலும், மந்திரி ஆனாலும் அந்த பார்ப்பனக் குடும்பத்திற்கு மட்டும் எந்த வேலையும் செய்யாமல் மானியம் வழங்கப்பட் டிருக்கிறது. அதை எதிர்த்துப் போராடி வென்றவர் தோழர் கோவிந்தராசன்.

### பெரியார் சாலை

திருமங்கலக்குடி, வளைய வட்டம், சாத்தனூர் ஆகிய மூன்று கிராம பஞ்சாயத்துக்களை இணைக்கும் வகையில் தற்போது ஒரு தார்ச் சாலை போகிறது. அது அந்தக் காலத்தில் வெறும் இரண்டு அடி அகலம் கொண்ட வரப்பாக மட்டுமே இருந்திருக்கிறது. அதை 20 அடி அகலமுள்ள சாலையாக மாற்ற வேண்டுமானால் அந்த வரப்புகள் அமைந்துள்ள கோவில்களின் மடங்களின் அனுமதி வாங்க வேண்டும். மடாதிபதிகள் அனுமதிக்க மறுத்தனர். அப்பகுதியிலுள்ள பார்ப்பனர்களும் படையாச்சி களும் ஒன்று சேர்ந்து கொண்டு சாலை வசதி கேட்டவர்களை எதிர்த்தனர். கோவிந்தராசன் தலைமையில் ஆயிரக்கணக்கான தோழர்கள் கையில் கடப்பாரை, சம்மட்டி, மண்வெட்டிகளுடன் புறப்பட்டு கோயில் நிலங்களின் வரப்புகளை உடைத்தெறிந்து 20 அடி அகல கப்பிச் சாலையை ஒரே வீச்சில் உருவாக்கினர். இதற்காக உயர்நீதிமன்றத்தில் பல தோழர்கள் வழக்குகளைச் சந்தித்தனர். இறுதியில் வென்றனர். அந்த சாலை இப்போது தார்சாலையாக மாற்றப்பட்டு பெரியார் சாலை என்ற பெயரிலும் இருக்கிறது.

தோழர் கோவிந்தராசன் அவர்களைப் பற்றியும் திராவிடர் இயக்க வரலாற்றையும் அவருடன் நேரில் பேசிய ஒரு நாளில் கிடைத்த செய்திகளில் ஒரு சில மட்டுமே இவை. மேலும் பல்வேறு தகவல்கள் தேடி பெ.தி.க.வின் தலைவர் தோழர் கொளத்தூர் மணி அவர்களும் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் அவர்களும் மீண்டும் ஒரு முறை அவரை நேரில் சந்தித்து உரையாடி வந்தனர். ஓராண்டுக்குப் பிறகு கடந்த ஜூலை 26 ஆம் நாள் தோழர்களுடன் அவரைச் சந்திக்க திருமங்கலக்குடிக்கு சென்றோம். அவரை வைத்து பயிற்சி வகுப்புகள் நடத்த வேண்டும். அவரது அனுபவங்கள் இளம் தலைமுறைக்குப் பாடங்களாக வேண்டும் என்ற நோக்கில் அவரிடம் அனுமதி பெறச் சென்றோம். மிகப் பெரும் அதிர்ச்சிகள் காத்திருந்தன. அவர் இந்த 2009 ஆம் ஆண்டு பொங்கல் அன்று மறைந்து விட்டார் என்ற செய்தி எங்களைத் தாக்கியது. எங்களது குடும்பத்தில் ஒருவரை இழந்து விட்டதைப் போன்ற ஆழ்ந்த வருத்தத்தை அனைவரும் உணர்ந்தோம். ஒரு பெரும் ஏமாற்றம் என்ற அளவில் இருந்தோம். அதன் பிறகு அவரது மகளும் மருமகனும் சொன்ன செய்திகள்தான் எங்களுக்கு கண்ணீரை வரவழைத்தன.

அவர் மறைவுக்கு முன்பு **எனக்கு எந்த மதச் சடங்கும் செய்யக் கூடாது என்றும் கழகத்துக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்** எனவும் கூறியுள்ளார். அவரது மருமகன் கும்பகோணத்தில் தி.க.வின் அறக் கட்டளையின் பொறுப்பில் உள்ள பெரியார் மாளிகைக்குச் சென்று அதன் பொறுப்பாளரிடம் செய்தி தெரிவித் திருக்கிறார். தலைமைக்கும் ஃபேக்ஸ் அனுப்பியுள்ளார். நீங்கள் வந்தால் தான் உடலை எடுப்போம் எனக் கூறி யுள்ளார். அந்த தி.க. பொறுப்பாளரோ தானும் வரவில்லை; எந்த முறையான பதிலும் சொல்லாமல் காலையிலிருந்து மாலை வரை அலுவலகத்திலேயே காத்துக் கிடக்க வைத்து விட்டு தனி ஆளாகவே திருப்பி அனுப்பியுள்ளார். தி.க. தலைமையிலிருந்தும் யாரும் வரவில்லை. அதனால் அடிமட்டத் தோழர்களும் வரவில்லை.

**இயக்கம், இயக்கம், இயக்கம் என வாழ் நாளெல்லாம் உழைத்த அந்த போராளி - கும்ப கோணத்தில் இருந்த வசதியான தன் சொந்த வீட்டை விற்று, நிலபுலன்களை விற்று இயக்கப் பணியாற்றிய அந்தக் கடமைவீரர் - சாதி, மத பேத மற்ற சமுதாயத்தை உருவாக்க போராட்டம், காவல்துறை, நீதிமன்றம், சிறைச்சாலை என சுழன்று சுழன்று கடமையாற்றிய அந்த கருஞ்சட்டைத் தோழர் - தன் மகளிடம் பெரியார் புத்தகங்களையும், கூட்டங்களில் தான் எடுத்த குறிப்புகளையும், நைந்து போன தாள்களையும் சொத்தாகக் கொடுத்துவிட்டு, துணைவியாரையும் அனாதையாக விட்டுவிட்டு இயக்கத் தோழர்கள் எவருமே இல்லாமல் இறுதிப் பயணத்தை முடித்துள்ளார் தோழர் கோவிந்தராசன்.**

மறுபடியும் அவருக்கு படத்திறப்பு விழா நடத்த வேண்டும் என்ற கோரிக்கையுடன் தி.க. அலுவலகத்திற்குச் சென்றுள்ளார் அவரது மருமகன். தலைவர் வீரமணிக்கு 5000 ரூபாய் வழிச் செலவு தர வேண்டும். மண்டப வாடகை, உணவு செலவு, அறை செலவு எல்லாம் சேர்ந்து 20 ஆயிரம் ரூபாய் கொண்டு வாருங்கள் நடத்தலாம் என்றார்களாம். அடுத்த வேளைக் கஞ்சிக்கு நாளெல்லாம் நெசவு நெய்ய வேண்டும் என்ற அன்றாடங்காய்ச்சி வாழ்க்கை வாழும் அவரது மகளுக்கு இது நடக்காத காரியம். தந்தையின் கடைசி ஆசையை விருப்பத்தை நிறைவேற்ற இயலாத தன் நிலையை நொந்து அவர் கண் கலங்கியபோது தோழர்கள் அனைவரும் கண்ணீர்விட்டு அழுதே விட்டோம். அவரது துணைவியாரும் எந்த ஆதரவும் இல்லாமல் எந்த பொருளாதார வரவும் இல்லாமல் வறுமையில் உள்ளார். காதும் சரியாகக் கேட்கவில்லை. மருமகன் வீட்டில் எத்தனை நாள் நிம்மதியாக வாழ முடியும் ?

இவர் ஒருவரைப் பற்றித்தான் நமக்கு ஓரளவாவது தெரிந்தது. இன்னும் இதுபோல் பல தோழர்கள், போராளிகள் கவனிக்கப்படாமல் புதைந்து கிடக்கின்றனர்.

**இளமையில் துடிப்புடன் கொள்கைப் பணியாற்றி விட்டு அளப்பரிய செயல்களைச் செய்துவிட்டு முதுமையில் வறுமையில் தன் அடையாளங்களை இழந்து கொள்கைகளை ஒதுக்கி வைத்துவிட்டு சாதிக்காரனிடமும் சொந்தக்காரனிடமும் மானங் கெட்டு சமரசம் செய்து கொள்ளும் கட்டாயத்தோடு இறுதிக் காலத்தை வேதனையுடன் கடத்தும் தோழர்கள் பலரை நாம் அறிவோம். அப்படிப் பட்டவர் களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.** சாதியற்ற சமுதாயத்தை அவர்களால் காண முடியா விட்டாலும் சாதி கடந்த ஒரு குழுவினரோடு கொள்கைகளைப் பேசி பெரியாரியலை சாவிலும் நடைமுறைப்படுத்தும் வகையில் தமது கடைசி காலத்தை அவர்கள் அனுபவிக்க வேண்டும். அவர்களது பணிகள் நமக்கும் அடுத்த தலைமுறைக்கும் பாடங்களாக வேண்டும். அவர்களை ஒருங்கிணைக்க வேண்டும். அவரவரது சக்திக்கு ஏற்றபடி மீண்டும் சமுதாயப் பணிக்கு அவர்களை பயன்படுத்த வேண்டும்.

எளிய தோழர்களின் உழைப்பை மதிக்காத தி.க. தலைமையை விமர்சித்து நேரத்தை வீணாக்குவதைவிட ஏதாவது சிறிய அளவிலாவது நமது செயல்பாட்டைத் தொடங்க வேண்டும் என விரும்புகிறோம்.

**(நிறைவு)**

### நன்கொடை

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் கேப்டன் அண்ணாதுரை பரிமளம் இணையரின் பெண் மகளுக்கு ஈழம் கனி மலர் என்று பெயர் சூட்டப்பட்டது. அதன் மகிழ்வாக கழக ஏட்டுக்கு ரூ.100 நன்கொடை வழங்கப்பட்டது.

சென்னை இராயப்பேட்டையைச் சேர்ந்த கழகத் தோழர் க. ஆனந்தன் - ஆ. பவானி ஆகியோரின் பத்தாம் ஆண்டு திருமண நாளையொட்டி (29.1.2011) ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வளர்ச்சி நிதிக்காக ரூ.1000/- நன்கொடையாக வழங்கியுள்ளனர். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

# ‘நாடு கடந்த தமிழீழ அரசு தோழமை மையம்’ சென்னையில் தொடக்கம்!

‘நாடு கடந்த தமிழீழ அரசு தோழமை மையம்’ என்ற அமைப்பு சென்னையில் உருவாகியுள்ளது. இந்த அமைப்பின் சார்பில் “நாடு கடந்த தமிழீழ அரசு ஏன்?” என்ற விளக்கக் கூட்டம், பேராசிரியர் சரசுவதி தலைமையில் பிப்.4 ஆம் தேதி சென்னையில் நடக்கிறது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இயக்குனர் மணிவண்ணன், எஸ்.எம். பாக்கர் (இந்திய தவ்ஹீர் ஜமாத்), சி. இராஜன் (கருநாடக தமிழ் மக்கள் இயக்கம்), அய்யநாதன் (இதழாளர்), மருத்துவர் எழிலன், இதழாளர் தெ.சீ.சு. மணி ஆகியோர் உரையாற்றுகின்றனர். நாடு கடந்த தமிழீழ அரசு ஏன்? என்ற தலைப்பில் தோழமை மையம் விடுத்துள்ள அறிக்கை:

தங்கள் தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து உலகின் பல்வேறு நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்கள், குறிப்பாக ஈழத் தமிழர்கள் ஒருங்கிணைந்து, ஜனநயாக முறையில் உருவாக்கியுள்ள அமைப்பு தான் **நாடு கடந்த தமிழீழ அரசு.** இதன் உறுப்பினர்கள் அந்தந்த நாட்டில் தேர்தல் நடத்தப்பட்டு, வாக்குகள் போடப்பட்டு முறையாகத் தேர்வு செய்யப்பட்டவர்கள். இது வரை 85 நாடுகளில் தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. 26 நாடுகளில் தேர்தல் நடைபெற உள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அமெரிக்காவின் நியூயார்க் நகரில் கூடி பிரதமர், துணைப் பிரதமர், பேரவைத் தலைவர் மற்றும் அமைச்சர்களைத் தேர்வு செய்துள்ளனர்.

விடுதலை வேண்டிப் போராடும் மக்கள் தங்கள் போராட்டத்தின் ஒரு அங்கமாக புகலிட அரசாங்கமாக (Government in Exile) செயல்படும் வரலாறு புதிதல்ல. உதாரணம் திபெத்தின் தலாய்லாமா அரசு. ஆனால் புகலிட அரசாங்கத்தை அறிவிக்க ஏதேனும் ஒரு நாட்டின் அங்கீகாரம் அவசியமானது. அந்த நாட்டிலிருந்து புகலிட அரசாங்கத்தை அறிவித்து பின் விடுதலை கிடைத்தவுடன் தங்கள் சொந்த நாட்டுக்குத் திரும்புவார்கள். ஆனால் நாடு கடந்த தமிழீழ அரசு “புகலிட அரசாங்கம்” அல்ல. இதற்கு எந்த ஒரு நாட்டின் அங்கீகாரமும் தேவையில்லை. இது ஒரு புதிய முயற்சி. ஈழத்தமிழர்களின் சுய நிர்ணய உரிமைக்காக கடந்த பல ஆண்டுகளாகவே புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் வலிமையான கட்டமைப்புகளோடு தங்களது பங்கை செலுத்தி வந்துள்ளனர். இவர்கள்தான் நாடு கடந்த தமிழீழ அரசின் ஆற்றலாளர்கள்.

தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் பின்னடைவைச் சந்தித்துள்ள சூழலில் தமிழீழப் பிரச்சினை சர்வதேச அரசியல் தளத்திற்கு நகர்ந்துள்ளது. இதை அரசியல் ரீதியாக முன்னெடுத்துச் செல்ல அதற்கான கருத்துருவாக்க சக்தியாக செயல்படுவதே நாடு கடந்த தமிழீழ அரசின் முதன்மைக் குறிக்கோள். ஈழத்தில் சொல்லொணா கடுந்துயரத்தில் வாழும் தமிழர்களின் சமூகம், பண்பாடு, பொருளாதார முன்னேற்றத்திற்கும் இந்த அரசு உதவும்.

ஈழத் தமிழர்களுக்கான சுய நிர்ணய உரிமையை முன்னெடுப்பதற்கு அரசியல் தளத்தில் வெளிப்படையாக அந்தந்த நாடுகளின் சட்டங்களுக்கு உட்பட்டு ஜனநாயக வழிகளில் நாடு கடந்த தமிழீழ அரசின் செயல்பாடுகள் அமையும். புலம் பெயர்ந்துள்ள ஈழத் தமிழர்கள் மட்டுமின்றி இந்திய மரபு வழித் தமிழர்களும் இதில் உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதை குறிப்பிட வேண்டும்.

புலம் பெயர்ந்த இனங்கள் தங்கள் நாடுகளின் விடுதலைக்கு வழங்கியிருக்கும் பங்களிப்பு குறித்து வரலாறு நெடுகிலும் பல சான்றுகள் உண்டு. வட அயர்லாந்து விடுதலைக்கு அமெரிக்காவிலும், கனடாவிலும் வாழும் ஐரிஷ் இன மக்கள் உதவினர். உலகமெங்கும் சிதறிக் கிடந்த யூதர்கள் தங்களுக்கான இஸ்ரேல் நாட்டை உருவாக்கினர். புலம் பெயர்ந்து வாழும் இத்தாலியர்களுக்காக இத்தாலி அரசு தனது நாடாளு மன்றத்தில் நான்கு இடங்களை ஒதுக்கி வைத்துள்ளது. உலகில் பாதிக்கும் மேற்பட்ட நாடுகள் இரட்டைக் குடியுரிமையை (Dual Citizenship) வழங்கியுள்ளன. நாடு கடந்த தமிழீழ அரசு புலம் பெயர்ந்து தமிழகத்தில் வாழும் ஈழத் தமிழர் மற்றும் தமிழ் நாட்டுத் தமிழர்கள் சார்பாக ஐந்து உறுப்பினர்களை நேரடியாக நியமிக்க முடிவு செய்துள்ளது.

- 1976 ஆம் ஆண்டு ஈழத் தமிழர்கள் தமிழீழ விடு தலைக்கு நிறைவேற்றிய வட்டுக்கோட்டைத் தீர்மானம்....
- வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு ஏற்பு வழங்கி 1977 ஆம் ஆண்டு தமிழீழ மக்கள் தேர்தலில் தந்த வாக்களிப்பு...
- திம்புவில் போராளிகள் அமைப்புகளுடன் இந்திய அரசின் முயற்சியில் நடந்த பேச்சு வார்த்தைக்கு தயாரிக்கப்பட்ட அடிப்படை ஆவணம்....
- அரசியல் தீர்வுக்காக நார்வே சமரசப் பேச்சு வார்த்தையில் தமிழர்களின் சார்பில் 2003 ஆம் ஆண்டு முன் வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி சபைக்கான திட்டம்...

ஆகியவற்றில் தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைக் கொள்கை ஏற்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசின் போர்க் குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் அய்.நா.விலும், அய்ரோப்பிய நாடுகளிலும் விவாதங்களுக்கு வந்துள்ளன. உலகப் புகழ் பெற்ற “டப்ளின் மக்கள் நிரந்தர தீர்ப்பாயம்” இலங்கை அதிபரை போர்க் குற்றவாளியாக அறிவித்திருக்கிறது. சர்வதேச அரசியல் தளத்தில் இந்த பிரச்சினைகளை நகர்த்திச் செல்ல நாடு கடந்த தமிழீழ அரசு தளம் அமைத்துத் தரும்.

அண்மையில் சுதந்திரம் பெற்றுள்ள தெற்கு சூடான் நாடு முதன்முதலாக நாடு கடந்த தமிழீழ அரசுக்கு ஏற்பு வழங்கியுள்ளது. அதன் பிரதமருக்கு தெற்கு சூடான் நாட்டின் சுதந்திர விழாவில் பங்கேற்க அழைப்பு விடுத்திருப்பதும் ஒரு வரலாற்றுத் திருப்புமுனை யாகும்.

இந்தச் சூழலில் நாடு கடந்த தமிழீழ அரசு தோழமை மையம். இந்த அரசியல் முயற்சிகளுக்கு ஆதரவாகவும் அதன் குறிக்கோள்களுக்கு உறுதிதுணையாகவும் தனது பங்களிப்பை வழங்க முன் வந்திருக்கிறது.

தமிழினத்தின் பல்துறைச் சான்றோர் பெருமக்கள் தமிழின உணர்வாளர்கள் இந்த மையத்தின் பார்வை யாளர்களாக இல்லாமல் பங்கேற்பாளர்களாக கடமையாற்ற தோழமை மையம் உரிமையுடன் அழைக்கிறது.

# திருவரங்கம் பெரியார் சிலையை அவமதிக்கும் காவல்துறைக்கு எதிராகப் போராட்டம்

திருச்சி மாவட்டம் திருவரங்கத்தில் 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பெரியாரின் சிலை திராவிடர் கழகத்தின் சார்பில் நிறுவப்பட்டது, அதே 2006 ஆம் ஆண்டு, டிசம்பர் 7 ஆம் தேதி சமூக விரோதிகளால் பெரியாரின் சிலை உடைக்கப்பட்டது. அதன் பிறகு திராவிடர் கழகத்தின் சார்பில் மீண்டும் பெரியாரின் வெண்கல சிலை அதே இடத்தில் வைக்கப்பட்டது. கடந்த நான்கு ஆண்டுகளாக அந்த சிலையை மறைக்கும் விதமாக, அந்த சிலைக்கு பாதுகாப்பு என்கிற பெயரில் அதன் முன்பாக காவல் துறைக்குச் சொந்தமான பழுதடைந்த வாகனம் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் அந்த சிலையும், அதனைச் சுற்றி பொறிக்கப்பட்டுள்ள பெரியாரின் பொன்மொழிகளும் பொது மக்கள் பார்க்க முடியாத வண்ணம் மறைக்கப்பட்டுள்ளது. திட்டமிட்டே திருவரங்க பார்ப்பனர்கள் ஏற்பாட்டின் பேரிலேயே சிலை மறைக்கப்பட்டுள்ளது.

திருவரங்கம் கோயில் எதிரே பெரியார் சிலை உள்ளதால் சிலையை மறைப்பதற்கு காவல்துறை இப்படி ஒரு சூழ்ச்சியை பின்பற்றி வருகிறது. வாகனத்தை மார்ச் 6 ஆம் தேதிக்குள் அப்புறப்படுத்தாவிடில், 7 ஆம் தேதி, பெரியார் திராவிடர் கழகத் தோழர்களே வேனை அப்புறப்படுத்துவார்கள் என்று திருச்சி மாவட்ட பெரியார் திராவிடர் கழகம், 12.1.2011 அன்று நடந்த மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டத்தில் முடிவு செய்துள்ளது. திருச்சிராப்பள்ளி சகிலா விடுதியில் மாவட்டத் தலைவர் எஸ்.எஸ்.முத்து தலைமையில், தோழர்கள் ஜெகநாதன், ஆரோக்கியசாமி, இளந்தாடி துரைராசன் முன்னிலையில் மாவட்டக் கழகக் கூட்டம் நடந்தது. காவல்துறை வேனை அப்புறப்படுத்தும் போராட்டத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடத்த முடிவு செய்யப்பட்டது.

# தமிழக மீனவர்களுக்காக ‘நாடு கடந்த தமிழீழ அரசு’ குரல் கொடுக்கிறது

இந்தியா மீதான தனது நீண்டநாள் வெறுப்பை தமிழர்களைத் தாக்குவதன் மூலம் தீர்த்துக் கொள்கிறது இலங்கை அரசு. இதை இந்தியா புரிந்து கொள்ள வேண்டும் என்று நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் ருத்ரகுமாரன் கூறியுள்ளார். இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை:

தமிழக மீனவர்கள் மீது இலங்கை படையினர் கட்டவிழ்த்து விட்டு வரும் கொலை வன்முறையின் தொடர்ச்சியாக ஜெயக்குமார் எனும் நமது சகோதரன் இலங்கை கடற்படையினரால் கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டுள்ளார் எனும் செய்தி நம்மை யெல்லாம் கடும் கோபத்திலும் பெருந்துயரத்திலும் ஆழ்த்தியுள்ளது.

இலங்கை படையினரின் இக்காட்டு மிராண்டித் தனத்தை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் வன்மையாகக் கண்டனம் செய்வதுடன், கொலை செய்யப்பட்ட சகோதரனின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்கிறோம்.

ஈழத் தமிழ் மக்களின் அரசியல் பெருவிருப்பான சுதந்திரத் தமிழீழ நாட்டை தமிழீழத் தாயகத்தில் அமைத்துக் கொள்வதனை முதன்மை இலக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், உலகில் எந்தப் பாகத்திலும் தமிழர்கள் மீது எவரால் இன்னல் இழைக்கப்பட்டாலும், கொடுமைகள் நிகழ்த்தப்பட்டாலும் அவற்றை எதிர்த்து அனைத்துலக ரீதியாகக் குரல் கொடுக்கும்.

உலகில் தமிழர்களுக்கென்றொரு அரசும், அதற்கான அரசாங்கமும் இதுவரை அமையாத சூழலில், உலகத் தமிழ் மக்களின் நலன்களுக்காகவும் தன்னால் இயன்றவரை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் போராடும். இந்த வகையில் தமிழ்நாட்டு மீனவர்களுக்கெதிராக இலங்கை அரசு மேற்கொண்டு வரும் பயங்கரவாத நடவடிக்கைகளை அனைத் துலகின் கவனத்துக்கு கொண்டு வரும் வழிவகைகள் தொடர்பாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது.

இன்று தமிழக மீனவர்களுக்கு எதிராக சிங்களம் நடத்தும் போரும்கூட உண்மையில் தமிழகத்துக்கும் இந்தியாவுக்கும் எதிராக சிங்களம் நடத்தும் போரின் ஓரங்கமே. இலங்கைத் தீவில் இந்திய ஆதிக்கத்தை குறியீட்டு வடிவில் எதிர்ப்பதும் இப்போரின் ஒரு நோக்கம்.

இந்தியாவுக்கு எதிராக சீனாவை அரவணைத்து வைத்துக் கொண்டு இந்திய ஆட்சியாளர்களுடன் சதுரங்க விளையாட்டைத் தற்போது விளையாடிக் கொண்டிருக்கிறது சிங்களம்.

சிங்களத்துக்கு உதவி செய்வதன் மூலம் இலங்கைத் தீவில் தமது செல்வாக்கினை நிலைநிறுத்த முடியும் என இந்திய ஆட்சியாளர்கள் நினைக் கின்றனர். ஆனால், இந்தியாவின் பிடியிலிருந்து இலங்கைத் தீவினை எவ்வாறு விடுவிப்பது என்பது குறித்து சிங்களம் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. இதற்காகத் திட்டமிட்டுச் செயலாற்றுகிறது. இலங்கைத் தீவில் ஈழத் தமிழரை இனக் கபளீகரம் செய்யும் முயற்சியில் சிங்களம் இறங்கியிருப்பதும் இத் திட்டத்திற்குட்பட்டுத்தான் நிகழ்கிறது.

ஆனால், இவையெல்லாவற்றையும் தமிழக ஆட்சியாளர்களோ, இந்திய ஆட்சியாளர்களோ சரிவரப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. சிறிய நாடான இலங்கையை எப்படியும் தம்மால் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும் என இந்திய ஆட்சியாளர்கள் எண்ணக் கூடும்.

இலங்கை சிறிய நாடுதான். ஆனால் சீனாவுடன் சேரும் போது இலங்கையைச் சிறிய நாடாகப் பார்க்க முடியாது. இந்தியாவினை விட சீனாதான் சிங்கள மக்களின் இயல்பான தேர்வாக இருக்கும். காலம் தாழ்த்தி உண்மையினை இந்தியா உணரும்போது அது இந்தியாவுக்கு ஆபத்தானதாகவே அமையும்.

இலங்கை தொடர்பான இந்தியாவின் வெளி யுறவுக் கொள்கை மாற்றத்துக்குள்ளாக்கப்படுவது ஈழத் தமிழர் தேசத்துக்கு மட்டுமல்ல – தமிழக, இந்திய மக்களின் நலனுக்கும் அவசியமானது. இதனை இந்திய கொள்கை வகுப்பாளர்களது கவனத்துக்கு கொண்டு வருவற்கு ஆவன செய்யுமாறு தமிழக, இந்திய மக்களி டம் இத்தருணத்தில் வேண்டுகோள் விடுக்கிறோம்.

இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

# கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்ற நிகழ்ச்சிகள்

15.1.2011 சனிக்கிழமை அன்று மாலை 3 மணிக்கு, பெங்களூர் வசந்த நகர், அம்பேத்கர் பவனில், பெரியார் திராவிடர் கழகம் மற்றும் டாக்டர் அம்பேத்கர் நலச் சங்கம் இணைந்து, “சாதி எதிர்ப்பு, ஈழ ஆதரவு” மக்கள் விழிப்பணுர்வு மாநாடு நடைபெற்றது. பெங்களூர் கழகத் தலைவர் மா. இராவணன் வரவேற்றுப் பேசினார். பெங்களூர் கழக பொதுச் செயலாளர் இல. பழனி முன்னிலை வகித்தார். சிங்கள அமைச்சருக்கு எதிர்ப்பு தெரிவித்து சிறைச் சென்ற தோழர்களுக்கு, கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் பாராட்டு விழாவும் நடைபெற்றது. கர்நாடக மக்கள் இயக்கத் தலைவர் சி. ராசன், அம்பேத்கர் சட்டக் கல்லூரி தலைவர் பேராசிரியர் இராமமூர்த்தி, தமிழர் சங்கங் களின் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் பக்தவசலம், நாம் தமிழர் கட்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எஸ்.வி. செல்வம் ஆகியோரின் உரைகளை தொடர்ந்து, பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினர் தி. வேல் முருகன் (பா.ம.க.) பேசினார்.

### விழுப்புரம்

20.1.2011 வியாழன் அன்று மாலை 6 மணிக்கு கள்ளக்குறிச்சியில், விழுப்புரம் மாவட்ட கழகக் கலந்துரையாடல் கூட்டம் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட தலைவர் கண்ணன் முன்னிலை வகித்தார். சுமார் நாற்பது தோழர்கள் கலந்து கொண்டு, தங்களின் கருத்துகளை பகிர்ந்து கொண்டனர். அரசு செலவில் கட்டப்பட்ட இரட்டை சுடுகாடுகளின் பட்டியலை எடுத்தல், கழக ஏட்டிற்கு சந்தா சேர்த்தல், தொடர் கூட்டங்கள் நடத்துதல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. மாவட்ட கழகம் கலைக்கப்பட்டு, ஓராண்டிற்கு சோதனை முயற்சியாக எட்டு பேர் கொண்ட “மாவட்ட அமைப்புக் குழு” ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. மாவட்ட அமைப்புக் குழு உறுப்பினர்கள் திருமால் (கருங்குழி), வெற்றிவேல் (கருங்குழி), பிரபு (தொழுவந்தாங்கல்), சாக்ரடீஸ் (செஞ்சி), கணேசன் (விழுப்புரம்), இளையராஜா (நெடுமானூர்), சாமிதுரை (கடுவனூர்), வெங்கடேசன் (கடுவனூர்).

### ஏற்காடு

சேலம் மாவட்டம் ஏற்காட்டில் 2011 ஜனவரி 8, 9 ஆகிய இரண்டு நாட்களில், ஏற்காட்டின் சுற்றுச் சூழலை பாதுகாப் பதற்கான பயிலரங்கம் நடைபெற்றது. வன உரிமை பாதுகாப்புச் சட்டம் - 2006, மால்கோ நிறுவனம் மண் எடுப்பதால் ஏற்படும் பாதிப்பு ஆகிய தலைப்புகளில் வகுப்புகள் நடைபெற்றது. நித்தியானந்த் ஜெயராம், பிஜாய், பாபிகுன்னு ஆகியோர் வகுப்பெடுத்தனர். முதல் நாள் நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டார். மால்கோ என்ற தனியார் நிறுவனம், 2003 ஆம் ஆண்டோடு ஒப்பந்தம் முடிந்ததும் இன்னும் கனிமம் வெட்டி செல்கிறார்கள். ஒப்பந்தபடி மரங்கள் நட வேண்டும் என்ற நிலையில், இன்னும் அவர்கள் மரங்களை நடவில்லை. சட்டரீதியாகவும், மக்களை திரட்டி போராடுவது பற்றியும் ஆலோசனை செய்யப்பட்டது. பெரியார் திராவிடர் கழகம், சேலமே குரல் கொடு, ஏற்காடு மலைவாழ் மக்கள் ஆகியோர் இணைந்து இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தனர்.

### கோவை

25.12.2010 சனிக்கிழமை அன்று மாலை 6 மணிக்கு கோவை புதுசித்தாபுதூர் வி.கே.கே. சாலையில் (ஜெயா பேக்ஸ் அருகில்) கோவை கழகம் சார்பாக, பெரியார் - அம்பேத்கர் நினைவு நாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், சுயமரியாதை தலித் சக்தி அமைப்பைச் சார்ந்த கோலார் சிவலிங்கம், ஆதித் தமிழர் பேரவை நீலவேந்தன், தமிழ்நாடு மாணவர் கழகம் ந. பன்னீர்செல்வம் ஆகியோர் உரையாற்றினர். உள்நாட்டு அகதிகள் - மறுக்கப்படும் உரிமைகள், அருந்ததியர் உள் இடஒதுக்கீடு-சட்டப் பாதுகாப்பு ஆகியவைகள் குறித்து பேசப்பட்டது.

### ஆத்தூர்

26.12.2010 ஞாயிறு அன்று மாலை 6 மணிக்கு சேலம் ஆத்தூரில் பெரியார்-அம்பேத்கர் நினைவு நாளை யொட்டி, ஆதித் தமிழர் பேரவை சார்பாக சாதி இருப்பை தகர்க்கும், சமூக இழிவு ஒழிப்பு பிரகடன மாநாடு, இரா. அதியமான் தலைமையில் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி வாழ்த்துரை வழங்கினார்.

### திருச்சி

30.12.2010 வியாழன் மாலை 6 மணிக்கு திருச்சி மாவட்டம் திருவரங்கம் தேவி தியேட்டர் அருகில் கழக கொள்கை விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. திருச்சி மாவட்ட கழகத் தலைவர் டாக்டர் எஸ்.எஸ். முத்து தலைமையில் நடைபெற்ற இப் பொதுக் கூட்டத்தில், முதல் நிகழ்வாக சிற்பி இராசனின் ‘மந்திரமா தந்திரமா ?’ நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட செய லாளர் குமார் வரவேற்றுப் பேசினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பெரியார் பாசறை சீனி. விடுதலை அரசு ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

### முத்தூர்

31.12.2010 வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு திருப்பூர் மாவட்டம் முத்தூர் பேருந்து நிலையம் அருகில் ஆதிக்க சாதி வெறி எதிர்ப்புக் கூட்டியக்கம் சார்பாக நேர்மையான தலித் அதிகாரி சாமிதுரை மீது கொலைவெறித் தாக்குதல் மற்றும் பணி இடை நீக்கம் ஆகியவற்றைக் கண் டித்து, கண்டன ஆர்ப்பாட்டம் நடை பெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலை மையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், ஆதித் தமிழர் பேரவை நிறுவனர் இரா. அதியமான், ஆதித் தமிழர் விடுதலை முன்னணி அமைப்பாளர் கோவை ரவிக் குமார், மூத்த வழக்கறிஞர் ப.பா. மோகன், விடுதலை சிறுத்தைகள் மாவட்ட செய லாளர் விநாயகமூர்த்தி, புரட்சிகர இளைஞர் முன்னணி அகிலன், ஆதித் தமிழர் ஜனநாயக பேரவை ஆ.கு. பவுத்தன் உள்பட பலர் கண்டன உரையாற்றினர்.

ஈரோடு ப. ரத்தினசாமி, ஒருங் கிணைத்த இந்த ஆர்ப்பாட்டத்தில், பாட்டாளி மக்கள் கட்சி, தலித் விடுதலை கட்சி, தமிழ்த் தேச பொதுவுடைமை கட்சி, தமிழ் தேசிய விடுதலை இயக்கம், புரட்சிப் புலிகள், வீர அருந்ததியர் பேரவை, தமிழர் விடுதலை இயக்கம், தமிழக மக்கள் விடுதலை முன்னணி, சாதி ஒழிப்புப் பொதுவுடைமை முன்னணி, தமிழக தொழிலாளர் முன்னணி, நாம் தமிழர் கட்சி, மக்கள் சிவில் உரிமை கழகம், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம், மக்கள் கலை இலக்கியக் கழகம், மக்கள் வாழ்வுரிமை போராட்ட இயக்கம் ஆகிய அமைப்புகளை சார்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

சாமிதுரை மீதான பொய் வழக்கைத் திரும்பப் பெறு ! பணி இடை நீக்கத்தை ரத்து செய் ! மின் வாரிய அலுவலகமா ? ஆதிக்கசாதி வெறியர்களின் கூடாரமா ? கொலைவெறி தாக்குதலை மின்வாரிய அலுவலகத்திற்குள்ளேயே அரங்கேற்றிய சாதிவெறி பிடித்த ஊழல் அதிகாரிகளை கைது செய் - பணி நீக்கம் செய். நேர்மை யான தலித் அதிகாரி சாமிதுரைக்கு துணை நிற்போம் ! சாதி வெறி பிடித்த ஊழல் - திருட்டுக் கும்பலுக்கு முடிவு கட்ட அணி திரள்வோம் ஆகிய முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

### புதுவை

2.1.2011 ஞாயிறு மாலை 4.30 மணிக்கு (இராகு காலத்தில்) புதுவை மாநில கழக இளைஞரணி செயலாளர் சுரேஷ், ஆ. சுகந்தி ஆகியோரது வாழ்க்கை துணை ஏற்பு விழா கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது.

7.1.2010 வெள்ளி மாலை 6 மணிக்கு புதுவை அரியாங்குப்பம் பெரியார் திடலில், தேசிய பாதுகாப்புச் சட்டமும், தமிழர் உரிமையும் விளக்கப் பொதுக் கூட்டம் மற்றும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தை தகர்த்த மூத்த வழக்கறிஞர் துரைசாமிக்கு பாராட்டு விழாவும் நடைபெற்றது.

# தெற்கு சூடான் புதிய நாடு : ஜூலை மாதம் உதயமாகிறது

தெற்கு சூடான் தனிநாடாக பிரிவது குறித்து வாக்கெடுப்பில் 99 சதவீதம் மக்கள் தெற்கு சூடான் பிரிவினைக்கு ஆதரவு தெரிவித்து இருப்பதாக முடிவுகள் கூறுகின்றன. இதை அறிந்த மக்கள் மகிழ்ச்சியும் ஆனந்தமும் அடைந்தனர். அவர்கள் தெருக்களில் கூடி நின்று ஆடிப்பாடி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

தேர்தல் முடிவு காரணமாக அந்த நாடு தனிநாடாக மாற இருக்கிறது. இதைத் தொடர்ந்து வருகிற ஜூலை மாதம் 9 ஆம் தேதி தெற்கு சூடான் ஆப்பிரிக்காவின் 54 ஆவது நாடாக பிரகடனம் செய்யப்பட இருக்கிறது. 1990 ஆம் ஆண்டு முதல் 33 புதிய நாடுகள் உருவாக்கப்பட்டு உள்ளன. தெற்கு சூடான் தனிநாடாக அறிவிக்கப்படக் கோரி நடந்த போராட்டத்துக்கு தலைமை தாங்கிய சூடான் மக்களின் விடுதலை இயக்கத் தலைவர் சால்வா கீர் தெற்கு சூடானின் புதிய அதிபர் ஆகிறார். இந்த புதிய நாட்டில் 10 நிலங்கள் இருக்கும்.

## யோகா கடவுள் மறுப்புக் கொள்கையால் உருவானது

“ஒரு நோயாளிக்கு மருந்துச் சீட்டு எழுதிக் கொடுப்பதால் மட்டும் டாக்டர் களின் கடமை முடிந்து விடுவதில்லை. நோயாளியின் நோய்க்குக் காரணம் என்ன என்பதை டாக்டர்கள் கண்டறிந்து சிகிச்சை அளிக்க வேண்டும்.

தொற்று அல்லாத நோய்களுக்குப் பெரும்பாலான காரணம் உணவும், மனதும் தான். இது இரண்டும் சரியாக இருந்தால் பெரும்பாலான நோய்கள் மனிதனைத் தாக்காது. பொது மக்களில் பலர் புற மகிழ்ச்சியோடு காணப்படு கின்றனர். ஆனால் அவர்களுக்கு அகமகிழ்ச்சி இருப்பதில்லை.

மனதில் மகிழ்ச்சி இல்லாததால் உணவில் மாற்றம் ஏற்படுகிறது. காலப் போக்கில் இது பல்வேறு நோய்களுக்கு வழி வகுக்கிறது. **யோகா என்பது முதலில் “கடவுள் மறுப்புக் கொள்கை யிலிருந்து உருவாக்கப்பட்டது”**. யோகா மனதைச் செம்மைப்படுத்தும் பயிற்சி யாகும்.”

(ஆரோக்யா சித்த மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் டாக்டர்கு. சிவராமன் பேசியது)

**ஆதாரம் : “தினமணி” 24.1.2011**
**தகவல்: புலவர் தங்க சங்கர பாண்டியன்**

(முதல் பக்கத் தொடர்ச்சி)

அறுவடைத் திருநாளுக்கு தை மாதம் முதல் நாள், ஆங்கில மாதம் சனவரி 14 அல்லது 15 நாளில் விடுமுறை அளிக்க வேண்டி கேரள மாநில தமிழர்கள் சார்பில் கேரள மாநில தமிழ் பாதுகாப்பு இயக்கமானது கேரளா முதலமைச்சர் அச்சுதானந்தன் அவர்களை நேரில் சந்தித்து விண்ணப்பம் அளித்தனர். அதனை பெற்றுக் கொண்ட கேரள அரசு பொங்கலுக்கு விடுமுறை அளிக்க முடியாது என்று கடந்த இரண்டு ஆண்டுகளாக பதில் அளித்தது.


இதனைத் தொடர்ந்து கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, பா.ம.க, விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட அமைப்புகள் பங்கேற்றன. கோரிக்கையை வலியுறுத்தி அனைத்துக் கட்சி சார்பில் 8.1.2011 அன்று கோவையில் பொதுச் செயலாளர் கு. இராமகிருட்டிணன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி, கேரள முதல்வருக்கு தமிழர்கள் அதிகம் வாழும் பகுதியில், தமிழர் திருநாளுக்கு விடுமுறை அளிக்க வற்புறுத்தி கடிதம் எழுதினார்.

கோரிக்கையை ஏற்று கேரள முதல்வர், தமிழர் அதிகம் வாழும் பகுதியில் தமிழர் திருநாளுக்கு விடுமுறை அறிவித்தார். கோரிக்கையை வலியுறுத்தி போராடி வந்த கேரளா வாழ் தமிழர் இயக்கங்களுக்கும், கோவையில் போராட்டத்தில் பங்கேற்ற அனைத்துக் கட்சித் தோழர்களுக்கும், கேரள முதல்வருக்கு கடிதம் எழுதிய தமிழக முதல்வருக்கும் கோவை இராமகிருட்டிணன் நன்றி தெரிவித்து அறிக்கை விடுத்துள்ளார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 3rd February 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




# புரட்சிப் பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2042 | பிப்ரவரி 10, 2011 | புரட்சி 10 | முழக்கம் 4 | விலை: ரூ.2.50


## ● அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர் அலுவலகம் முற்றுகை!
## ● தாராபுரம் நல்லினி பொறியியல் கல்லூரி முன்பு சாலை மறியல்!

# தமிழ்நாடு மாணவர் கழகப் போராட்டம் வெற்றி!

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் உள்ள சுயநிதிப் பொறியியல் கல்லூரியான டாக்டர் நல்லினி பொறியியல் கல்லூரியில் வங்கிகள் மூலமாக கல்விக்கடன் பெற்று பொறியியல் படிக்கும் மாணவர்கள் 240 பேர் உள்ளனர். இப்படி வங்கிக்கடன் பெற்ற மாணவர்கள் அனைவரும் எல்.ஐ.சியில் மணி பேக் பாலிசி என்ற பெயரிலான திட்டத்தில் 1.50 இலட்ச ருபாய் பணம்செலுத்த வேண்டும். இத்தொகையை தவணைகளில் கட்டலாம். ஆனால் அவசியம் அனைத்து மாணவர்களும் எல்.ஐ.சி மணி பேக் பாலிசி எடுக்க வேண்டும் என கல்லூரி நிர்வாகம் மிரட்டியது. அப்படிப் பணம் செலுத்தாவிட்டால் விடுதியி லிருந்து மாணவர்கள் வெளியேற வேண்டும் என்று கட்டளையிட்டது. முதல் கட்டமாக 100 மாணவர்களை விடுதியிலிருந்து வெளியேற்றியது.

அண்ணா பல்கலைக்கழகம் பொறியியல் படிப்புக்காக தனியார் கல்லூரிகளில் 32000 ரூபாய்க்குமேல் செலுத்த வேண்டியதில்லை என்றும் அப்படி தனியார் கல்லூரிகள் வசூலித்தால் அக் கல்லூரிகளின் அங்கீகாரம் ரத்து செய்யப்படும் என்றும் அறிவுறுத்தி இருந்தும் தாராபுரம் நல்லினி பொறியியல் கல்லூரி அந்த அறிவுறுத்தல்களைக் கண்டுகொள்ளவில்லை. மேலும் கல்லூரி அங்கீகாரம் பெறுவதற்கு உரிய அடிப்படை வசதிகள் எதையுமே நிர்வாகம் மாணவர்களுக்குச் செய்துதரவில்லை. உரிய கல்வித்தகுதி பெற்ற போராசிரியர்கள் நியமிக்கப்பட வில்லை.

இவற்றைக் கண்டித்து கடந்த 20.01.11 அன்று தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்கள் கல்லூரி மாணவர்களுடன் இணைந்து போராட்டத்தில் இறங்கினர். இதனால் தாரபுரம் - பழனி சாலையில் சுமார் இரண்டு மணி நேரம் போக்கு வரத்து தடைபட்டது. ஆர்.டி.ஓ, மாவட்டத் துணைக் கண்காணிப்பாளர், கல்லூரி நிர்வாகம் ஆகிய மூன்று தரப்பும் மாணவர்களிடம் போராட்டத்தை நிறுத்தச் சொல்லி மிரட்டினர்.

- டாக்டர் நல்லினி பொறியியல் கல்லூரியில் படிக்க வங்கியில் கல்விக் கடன் பெற்று பொறியியல் பட்டம் படிக்கும் மாணவர்களிடம் 1.50 இலட்ச ரூபாய்க்கு எல்.ஐ.சி பாலிசி கட்டச் சொல்லி மிரட்டும் கல்லூரி நிர்வாகத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம்.
- கல்லூரி நிர்வாகமே! அண்ணா பல்கலைக் கழகம் பொறியியல் படிப்புக்காக நிர்ணயித்துள்ள கட்டணத்தை விட அதிகமாகக் கல்விக் கொள்ளை அடிக்காதே!

அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக்கழகம் (AITEC) தனியார் பொறியியல் கல்லூரிகளுக்கு நிர்ணயித்துள்ள விதிமுறைகளை மீறிய டாக்டர் நல்லினி பொறியியல் கல்லூரி அங்கீகாரத்தை ரத்துசெய்!

ஆகிய முழக்கங்களை முன்வைத்து போராட்டம் நடைபெற்றது. இதே நேரத்தில் தமிழ்நாடு மாணவர் கழகத்தின் கோவை பொறுப்பாளர்கள் தோழர் நேரு, சிலம்பரசன் உள்ளிட்ட பல தோழர்கள், நல்லினி பொறியியல் கல்லூரிக்கு அங்கீகாரம் வழங்கிய கோவை அண்ணா பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர் அலுவலகம் முன்பு முற்றுகையிடச் சென்றனர். போராடச் சென்ற மாணவர்களை துணைவேந்தர் கருணாகரன் நேரில் அழைத்துப் பேசி கோரிக்கைகளின் நியாயத்தைப் புரிந்துகொண்டு உடனடியாக நல்லினி பொறியியல் கல்லூரிக்கு பல்கலைக்கழக ஆய்வுக் குழுவை அனுப்பி வைத்தார். எனவே சாலை மறியல் கைவிடப்பட்டது.

இரண்டு நாட்கள் கழித்து அண்ணா பல்கலைக்கழகப் பதிவாளர் தலைமையிலான ஆய்வுக் குழு, வருவாய்த் துறை, காவல்துறை, கல்லூரி நிர்வாகம், பெரியார் தி.க, தமிழ்நாடு மாணவர் கழகம் ஆகிய அனைத்துத் தரப்பினரையும் கூட்டி அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

முதல் கட்டமாக மாணவர்கள் எல்.ஐ.சி. பாலிசி கட்டத் வேண்டியதில்லை என்றும், அதற்காக விடுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட மாணவர்களை மீண்டும் விடுதியில் சேர்த்துக்கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டது. அடிப்படை வசதிகள் அனைத்தையும் படிப்படியாக விரைவில் செய்து தருவது என்றும் முடிவுசெய்யப்பட்டது. தாராபுரம் வழக்கறிஞர் குமார், திருப்பூர் இராவணன், கோபி துரை, பழனி மருதமூர்த்தி, நல்லதம்பி உள்ளிட்ட பெரியார் தி.க தோழர்கள் அமைதிப் பேச்சுவார்த்தையில் பங்கேற்றனர்.

## கச்சத் தீவு அருகே எண்ணெய் கிணறுகள்: தமிழக மீனவர்களுக்கு மேலும் ஒரு அதிர்ச்சி

கச்சத் தீவு அருகே, இங்கிலாந்து நிறுவனம் அமைக்கும் பெட்ரோலிய கிணறுகளால், இயற்கை வளம் அழிவதோடு, தமிழக மற்றும் இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப் படும் சூழல் ஏற்பட்டுள்ளது. தமிழகத்திற்கு நேர் கிழக்கே உள்ள மன்னார் வளைகுடா பகுதி யுனெஸ்கோ அமைப்பால் கடல்சார் தேசிய பூங்காவாக அங்கீகரிக்கப்பட்டு, உயிர்க்கோள் காப்பகமாக பாதுகாக்கப்படும் பகுதி. இங்கு, பல்வேறு அரிய வகை பவளப் பாறைகள், கடல் தாவரங்கள், கடல் பசு, டால்பின், கடல் அட்டை உள்ளிட்ட உயிரினங்கள் உள்ளன.

எனவே, மன்னார் வளைகுடாவிலுள்ள 20-க்கும் மேற்பட்ட குட்டித் தீவுகளில் மீன்பிடிக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், இங்கிலாந்து நிறுவனம் ஒன்று, 10 ஆயிரத்து 500 சதுர கி.மீ. பரப்பளவுள்ள மன்னார் வளைகுடா பகுதியில், 1750 சதுர கி.மீ. பகுதியை தோண்டி, 450 கோடி ரூபாய் செலவில், மூன்று பெட்ரோலிய கிணறுகளை அமைக்க திட்டமிட்டுள்ளது. இதற்காக, அந்நிறுவனம், பூகம்பம் தொடர்பான முப்பரிமாண ஆய்வுகளை நடத்தி முடித்துள்ளது. அந்நிறுவனம், இந்தியாவில் தொழில் செய்ய, ‘கெய்ர்ன் இந்தியா’ என்றும், இலங்கையில் ஆதரவு பெற, ‘கெய்ர்ன் லங்கா’ என்றும் தனது கம்பெனிக்கு பெயரை வைத்துள்ளது. இரு நாட்டு அரசியல்வாதிகளையும் நமது நிறுவனத்தில் பங்குதாரர்களாக்கி, இந்திய கடல் எல்லையில் கால் பதிக்கிறது.

கிழக்கிந்திய கம்பெனி என்ற பெயரில் ஆங்கிலேயர்கள் நுழைந்ததுபோல, ‘கெய்ர்ன் இந்தியா மற்றும் கெய்ர்ன் லங்கா’ என்ற பெயரில் இந்திய - இலங்கை எல்லையில் நுழையும் இந்நிறுவனத்தால், தமிழக கடல் பகுதியின் சூழல் பாதிக்கப்படும். மன்னார் வளைகுடாவில் பெட்ரோலியம் எடுக்கும் முயற்சியில் இந்தியா - இலங்கை நாடுகள் கூட்டாக ஈடுபட வேண்டும் என, 1974 இல் இந்தியா - இலங்கை ஒப்பந்தத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதற்காகத் தான் கச்சத் தீவு இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்டது.

ஆனால், மன்னார் வளைகுடாவில் ஒரு பகுதியை எண்ணெய் கிணறு அமைக்க, சீனாவுக்கு குத்தகைக்கு விட்டுள்ள இலங்கை அரசு, இன்னும் மூன்று பகுதிகளைப் பிற நாடுகளுக்கு வழங்க, பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது. கடந்த 1974 ஒப்பந்தப்படி, இந்திய அரசுக்கு கிடைக்க வேண்டிய எண்ணெய் வளத்தின் லாபத்தை, இரு நாட்டு பெயர்களிலும் நிறுவனம் நடத்தும் இங்கிலாந்து நிறுவனம் சுரண்டப் பார்க்கிறது. இதற்கு, இந்திய எண்ணெய் இயற்கை எரிவாயு கழகமும் அனுமதி அளித்துள்ளது.

தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டு வரும் நிலையில், எண்ணெய் கிணறுகள் அமைந்தால், இனி, கச்சத் தீவு திசைக்கே தமிழக மீனவர்கள் போக முடியாத நிலை ஏற்படும். இலங்கை மீனவர்களுக்கும் இதேநிலை தான்.

## கோவையில் கழகத் தலைமை செயற்குழு பிப். 26, 27 இல் கூடுகிறது

பெரியார் திராவிடர் கழக தலைமை செயற்குழுக் கூட்டம் பிப். 26, 27 தேதிகளில் கோவையில் காலை 10 மணியளவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் கூடுகிறது.

பிப். 26 ஆம் தேதி முழுதும் கோவை தொடர்வண்டி நிலையம் எதிரிலுள்ள அண்ணாமலை அரங்கிலும், 27 ஆம் தேதி முழுதும் அதே பகுதியிலுள்ள திவ்யோதயா அரங்கிலும் கலந்துரையாடல் நடைபெறும்.

செயற்குழு உறுப்பினர்கள் இரு நாட்களிலும் பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

கழக அமைப்பு, செயல்பாடுகள், செயல் திட்டங்கள் பற்றி விரிவாக செயற்குழுவில் விவாதிக்கப்படும்.

செயற்குழு உறுப்பினர்கள் கழகத் தோழர்களுடன் இது பற்றி கலந்து பேசி, தங்களது கருத்துகளை எழுத்து வடிவில் கழகத் தலைவர் மற்றும் பொதுச்செயலாளர்களுக்கு பிப். 20 ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர்களுக்கு தனியாக அழைப்புகள் அனுப்பப்படும்.

– கோவை கு. இராமகிருட்டிணன்
விடுதலை இராசேந்திரன்
(பொதுச் செயலாளர்கள்)

# மீனவர் படுகொலை வழக்குகளில் அரசுகளின் அலட்சியம்

*கச்சத் தீவு இந்திரா காந்தி ஆட்சியில் இலங்கைக்கு 'தாரை' வார்க்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழக மீனவர்களை சிங்கள கப்பல் படை சுட்டுக் கொல்வது வழக்கமான நிகழ்வாகிவிட்டது. ஆங்கில நாளேடான 'டைம்ஸ் ஆப் இந்தியா' (பிப்.2) – தமிழக மீனவர்கள் கொல்லப்படுவது பற்றிய விரிவான கட்டுரை ஒன்றை வெளியிட்டிருக்கிறது. அதில் இடம் பெற்றுள்ள தகவல்கள்:*

- தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவலிலிருந்து 1983 ஆம் ஆண்டிலிருந்து 2005 ஆம் ஆண்டு வரை கொல்லப்பட்ட தமிழக மீனவர்கள் எண்ணிக்கை - 378.
- தமிழக மீனவர்கள் கடலில் கொல்லப்படுவது 1975 ஆம் ஆண்டே தொடங்கி விட்டது.
- கடலோர மாவட்டங்களிலுள்ள காவல் நிலையங்கள் மீனவர் கொல்லப்பட்டவுடன், முதல் தகவல் அறிக்கையைப் (எப்.அய்.ஆர்.) பதிவு செய்கின்றன. இந்திய ஆயுதச் சட்டம் மற்றும் இந்திய தண்டனைச் சட்டம் 307வது பிரிவின் கீழ் சிங்கள கப்பல் படையினருக்கு எதிராகவே பதிவு செய்யப்படுகின்றன. சம்பவம் நடந்த இடமும், கச்சத் தீவு அருகே உள்ள இந்திய கடல் பகுதி என்றே முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யப்படுகிறது.
- குற்றவாளி, சம்பவம் நடந்த இடம் தெளிவாகப் பதியப்பட்டிருந்தாலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அடுத்த சில மாதங்களிலேயே "நடவடிக்கை கைவிடப்படுகிறது" அல்லது குற்றம் சாட்டப்பட்டவரை கண்டறிய முடியவில்லை என்று கூறி வழக்குகள் முடிக்கப்பட்டுவிடுகின்றன.
- ராமேசுவரம் மீனவர் சங்கத் தலைவர் என்.தேவதாசு கூறுகையில்:

  "முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதால் ஒரே பயன், பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு இழப்பீடு கிடைப்பது தான். மற்றபடி தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு எந்த சிறுதுரும்பையும் அசைப்பதில்லை" என்று கூறினார்.
- மக்கள் கண்காணிப்பகம் என்ற தொண்டு நிறுவனத்தைச் சார்ந்த கி.ஜே. இராசன் கூறுகையில்:

  "மீனவர்கள் மீதான தொடர் தாக்குதல், மத்திய மாநில அரசுகளின் செயலிழந்து போன மலட்டுத்தனத்தையே காட்டுகின்றன. புதுடில்லிக்கு சிறீலங்கா நட்பு நாடு; பாகிஸ்தான் நாடுதான் எதிரி; ஆனால் பாகிஸ்தான் கடல் பரப்புக்குள் மீன் பிடித்த எந்த ஒரு இந்திய மீனவரையும் அந்த நாடு கொன்றதில்லை" என்று கூறினார்.
- இந்திய தேசிய பாதுகாப்புக் குழுவின் முன்னாள் ஆலோசகரான சூரிய நாராயணன் கூறுகையில்:

  "உலகம் முழுதும் மீனவர்கள் கடல் எல்லைகள் பற்றி கவலைப்படுவதில்லை. இலங்கை மீனவர்கள் இந்திய கடல் பரப்புக்குள்ளும் மாலத் தீவு கடல் பரப்புக்குள்ளும் மீன் பிடிக்கிறார்கள். இந்திய மீனவர்கள் இலங்கை, பாகிஸ்தான், கடல் பரப்புக்குள் நுழைகிறார்கள். வங்க தேச மீனவர்கள் மியான்மார் கடல் பரப்புக்குள் நுழைகிறார்கள். சர்வதேச கடல் எல்லைகளுக்கான அய்.நா. சட்டத்தின் 73 மற்றும் 145 வது பிரிவுகள் இப்படி எல்லை தாண்டுவதை சிவில் குற்றம் என்றே கூறுகின்றன. கிரிமினல் குற்றமாகக் கூறவில்லை.
- ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின்மீது மீண்டும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்று மனித உரிமை ஆர்வலர்கள் கூறுகிறார்கள்.
- காவல் துறை கோரிக்கையை மட்டும் ஏற்றுக் கொண்டு, புகார் கொடுத்தவர் ஒப்புதலைப் பெறாமல், முதல் தகவல் அறிக்கையை நீதிபதி முடக்கியிருப்பாரானால், மீண்டும் மேல் நடவடிக்கையை சட்ட ரீதியாக தொடர முடியும் என்கிறார், மனித உரிமை வழக்கறிஞர் வி. கண்ணதாசன்.
- பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு தங்களுக்கான உரிமைகள் பற்றி தெரிந்திருக்க வாய்ப்பில்லை. எனவே அரசு இலவச சட்ட உதவி மய்யம், தாமாக முன் வந்து பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உதவிட வேண்டும்.
- உதாரணமாக நடுக்கடலில் ஒரு மீனவர் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து வழக்கு பதிவு செய்து, காவல்துறை வழக்கை விசாரிக்காமல், மூடியிருக்குமானால், இறந்து போனவரின் நெருக்கமான உறவினர் மீண்டும் மறு விசாரணை நடத்துமாறு நீதிமன்றத்தை அணுக உரிமை உண்டு.
- முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து, பிறகு அதை முடக்குவதற்கு முன்பு பாதிக்கப்பட்டவரிடமோ அல்லது அவரது நெருங்கிய உறவினரிடமோ, சாட்சிகளிடமோ காவல்துறை இதுபற்றி கருத்து கேட்டு, பதிவு செய்ய வேண்டும். இந்த நடைமுறையை காவல்துறை பின்பற்றாத நிலையில் முடிந்து விட்டதாக அறிவிக்கப்பட்ட குற்றப் பதிவை மீண்டும் விசாரிக்கலாம் என்று வழக்கறிஞர்கள் கூறுகிறார்கள். ●

## 'செய்வினை' மிரட்டலுக்கு கழகத் தோழர் பதிலடி

*செய்வினை மிரட்டலுக்கு பதிலடி தந்து மக்களை சிந்திக்க வைத்தார் கழகத் தோழர் திருப்பூர் சு. பிரசாத். இதுபற்றி அவர் விடுத்துள்ள செய்தி:*



நான் வசித்து வருகின்ற திருப்பூர் திருவள்ளுவர் நகர், கல்லூரி சாலை பகுதி முற்றிலும் சோதிடர்கள் வசிக்கும் பகுதியாகும். மேலும் அனைத்து சோதிடர்களும் என் உறவினர்களும் ஆவர். நான் தந்தை பெரியாரின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டதனாலும், அக்கொள்கைகளை எனது பகுதி இளைஞர்களுக்கு பரப்பி வருவதனாலும் எனக்கு கடந்த சில வருடங்களாக பழமைவாதிகளிடமிருந்து எதிர்ப்பு வலுத்து வருகிறது. இந்நிலையில் என்னை எப்படியாவது பெரியாரின் கொள்கைகளில் இருந்து பிரிக்க வேண்டுமென்று பல முயற்சிகளை மேற்கொண்டனர். அவைகளில் ஒன்றாக என்னை அச்சுறுத்தலாம் என்று நினைத்து, என் வீட்டின் வாயிற்படி அடியில் செய்வினை வைப்பதாக பல பொருட்களை ஒரு புடவையில் கட்டி விபூதி, குங்குமம் போன்ற பொருட்களை மேலே பூசி, அதை புதைத்து வைத்தனர்; அதன் மேல் ஆணி ஒன்றை அடித்து அதற்குப் பொட்டு வைத்து பூசை போட்டு வைத்துவிட்டு சென்றுவிட்டனர். காலை என் தந்தை அதை பார்த்தவுடன் பயந்து, பக்கத்து வீட்டுக்காரர்களை அழைத்துக் காட்டியுள்ளார். கூட்டம் சேர்ந்துவிட்டது. சத்தம் கேட்டதால் உறங்கிக் கொண்டிருந்த நான் வெளியில் சென்று பார்த்தேன். உடனே அந்த ஆணியை பிடுங்கி வீட்டின் சுவரில் அடித்து தந்தை பெரியார் நாள்காட்டியை மாட்டினேன். பயத்திலும் பதட்டத்திலும் இருந்த மக்கள் இயற்கையாக சிரிக்க ஆரம்பித்தனர். சில மணி நேரத்தில் ஒரு பதாகையை தயார் செய்து அதில்,

"செய்வினை வைப்போர் கவனத்திற்கு" என்று ஒரு அறிவிப்பை எழுதினேன்.

*"இனிமேல் எங்கள் வீட்டில் செய்வினை வைப்போர், பணம் குறைந்தது 100 ரூபாயும், மற்றும் எலுமிச்சை, முந்திரி, திராட்சை போன்ற நல்ல சுவையான பொருட்களையும் சேர்த்து வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். முன்னரே அறிவித்தால் நாங்களே குழி தோண்டியும் வைக்கிறோம். குழி தோண்டுவதற்கு ரூ.50 கூடுதலாகும். செய்வினையை நேரடியாக கையிலும் கொடுக்கலாம். நீங்கள் வைத்த ஆணியை காலண்டர் மாட்ட பயன்படுத்திக் கொண்டேன். மிக்க நன்றி. தொடர்புக்கு : பிரசாத் (9952565571)"*

என்று எழுதி வீட்டின் முன் வைத்தேன். செய்வினை என்ற பயத்திலும், பதட்டத்திலும், கோபத்திலும் இருந்த மக்கள், இதனைப் படித்துவிட்டு, கேலியும் சிரிப்புமாக பேசினர். இதெல்லாம் பொய். செய்வினை வைப்பதாக இருந்தால் எத்தனை விஷயங்களை செய்யலாம் என்றும் அவர்களுக்குள்ளேயே பேசிக் கொண்டனர். பயம், பதட்டம் போய் சிரிப்பு வந்தது.

## இது வன்முறையல்ல! சினத்தின் வெளிப்பாடு!

இப்போதுதான் முதன்முதலாக, இனி ஒரு மீனவர் சுடப்பட்டாலும் அதற்கு இலங்கை அரசே பொறுப்பேற்க வேண்டும் என்று இந்தியா வெளிப்படையாக கூறியுள்ளது. நேரடித் தூதராக நிருபமா அனுப்பப்பட்டுள்ளார். எனினும், கடந்த கால கசப்பான அனுபவங்களினால் தமிழக மக்கள், குறிப்பாகத் தமிழக மீனவர்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். இந்த அவநம்பிக்கையிலுள்ள நியாயத்தை யாராலும் மறுக்க முடியாது.

அதன் விளைவாகவே, இதுவரை அமைதி காத்த தமிழக மக்கள் - உணர்ச்சிமிக்க சில இளைஞர்கள் - சில வன்முறைச் செயல்களிலும் இறங்கியுள்ளதை நாம் பார்க்க முடிகிறது. சென்னை, எழும்பூரிலுள்ள புத்த மடம் ஒன்றின் மீது நடைபெற்ற தாக்குதலும், அங்கிருந்த சில பிட்சுகள் தாக்கப்பட்டதும் அத்தகைய நிகழ்வுகளே ஆகும். இப்போது எகிறிக் குதிக்கின்றது, சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகம். அவர்களுக்கு வலிக்கிறதாம். சில பேர் படுகாயத்திற்கு உள்ளாகி இருக்கிறார்களாம். எங்கள் மீனவர்களை அடித்த போது, எங்கள் மீனவர்களைச் சுட்டுக் கொன்றபோது அவர்களுக்கு வலித்திருக்காதா ? அந்த வலியும், இரத்தமும், வேதனையும் எப்படி இருக்குமென்று சிங்களர்களுக்கும் சற்றேனும் புரிய வேண்டு மல்லவா ?

மேலே உள்ள வரிகள் வன்முறைக்கு வக்காலத்து வாங்குகின்றவை அல்ல. சரியாய்ச் சொன்னால், சென்னையில் நடைபெற்ற வன்முறைக்கு எதிரான வன்முறைதான். பாதிக்கப்பட்டவர்களின் எதிர்த் தாக்குதல். உலகம் முழுவதும் பாதிக்கப்பட்ட மக்களின் கொந்தளிப்பு இருந்தே தீரும். எந்த நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் வன்முறை இல்லை? எந்த சமூகம் தன் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராக ஆர்த்து எழவில்லை? இந்தி ஆதிக்க எதிர்ப்பு மொழிப் போரில்கூட அங்கும் இங்குமாக வன்முறைகள் இடம் பெறத்தானே செய்தன? எனவே இவற்றை வெறும் வன்முறை என்று பார்க்காமல், அடிபட்டவர்களின் சினத்தின் வெளிப்பாடு என்றே பார்க்க வேண்டும்.

***நன்றி: பேராசிரியர் சுப. வீரபாண்டியனின் 'கருஞ் சட்டைத் தமிழர்' ஏடு வெளியிட்டுள்ள கட்டுரையிலிருந்து ஒரு பகுதி.***

## கோவையில் பிப்.14— காதலர் நாள் விழா

கோவையில் வருகிற 14.2.2011 திங்கட் கிழமை மாலை 5 மணிக்கு காந்திபுரம் கமலம் துரைசாமி திருமண மண்டபத்தில் கழகத்தின் சார்பில் காதலர் நாள் விழாவும், சாதி மறுப்புத் திருமணம் புரிந்தோர் நலச் சங்க ஆண்டு விழாவும் நடக்கிறது.

விழாவில் கடந்த 2010-லிருந்து சாதி, மத மறுப்புத் திருமணம் புரிந்த இணையர்களுக்கு பாராட்டு விருது வழங்கப்படுகிறது. தமிழ்ப் பெயர்கள், முற்போக்கு, அறிவியல் பெயர் கொண்ட மழலையருக்கு பரிசு வழங்கப்படுகிறது. கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் தலைமையில் நடக்கும் இவ்விழாவில் இயக்குநர் வேலு பிரபாகரன் பங்கேற்று சிறப்பிக்கிறார்.

விழாவில் பங்கேற்க இணையர்கள் முன்னதாக பதிவு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# தலைநகரில் தமிழர் திருநாள் விழா மாட்சி!



















## சென்னையில் கழகம் எடுத்த பொங்கல் விழா: லியோனி பட்டிமன்றம்

சென்னை இராயப்பேட்டையில் கழக சார்பில் 13 ஆம் தேதி தமிழர் திருநாள் விழா எழுச்சியுடன் நடைபெற்றது. அதற்கு முன் ஒரு வாரகாலம் தொடர்ந்து விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

இயற்கை அழகு மிளிர அமைக்கப்பட்டிருந்த எழில் மிகு மேடையில் பெரியார் வடிவ ஒளி விளக்குகள் பளிச்சிட பெரும் மக்கள் கூட்டத்தின் முன் விழா நிகழ்ச்சிகள் தொடங்கின. விழாவுக்கு தலைமை, முன்னிலை வகித்தவர்கள் அனைவரும் பெண்கள் என்பது குறிப்பிடத் தக்கது. தோழியர் பனிமலர் தலைமையில், தோழியர் கு. கவுரி, க. அம்பிகா வரவேற்புரையாற்ற, தோழியர் பி.சுதா, அ. பவானி, மு. உமா முன்னிலையில் நிகழ்ச்சிகள் தொடங்கின. காஞ்சி மக்கள் மன்றக் குழுவினர் பறை இசை மற்றும் புரட்சிகரப் பாடல்களை வழங்கினர். தொடர்ந்து பகுதி இளைஞர்கள், சிறுவர்கள், பெண்கள் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகள், நடனங்கள், மாற்றுடைப் போட்டி நிகழ்ச்சிகள் நடந்தன. கலை நிகழ்ச்சிகளில் தமிழின எழுச்சி கருத்து களும், தமிழ் ஈழ விடுதலைப் போராட்ட வரலாறுகளுமே இடம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து திரைப்படப் பாடல்கள், முற்போக்கு கருத்துகளை வலியுறுத்துகிறதா ? வலியுறுத்தவில்லையா ? என்ற பட்டிமன்றம், திண்டுக்கல் லியோனியை நடுவராகக் கொண்டு நடந்தது. பட்டிமன்றத்தின் வழியாக பகுத்தறிவுக் கருத்துகளை இசையுடன், திண்டுக்கல் லியோனி எடுத்து வைத்தது கூட்டத்தினரை மிகவும் கவர்ந்தது. 2 மணி நேரம் பட்டிமன்ற நிகழ்ச்சி தொடர்ந்தது. தொடர்ந்து விழாவுக்கு வாழ்த்துரை வழங்கி, கழகத் தலைவர் கொளத்தூர் மணி, துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், ம.தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் மல்லை சத்யா, எழுத்தாளர் ஓவியா, விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த சைதை பாலாஜி, தே.மு.தி.க.வைச் சார்ந்த வி.என். இராஜன், தமிழ்நாடு திருநங்கை நலவாரிய உறுப்பினர் நூரி ஆகியோர் உரையாற்றினர். பெரியார் திராவிடர் கழகத்தின் செயல்பாடுகளை அனைவரும் தங்களது உரையில் உளம் திறந்து பாராட்டினர்.

தோழர் தமிழ்ச் செல்வன் நன்றி கூறினார். தொடர்ந்து மயிலாடுதுறை சங்கமம் குழுவினர் வழங்கிய இசை நிகழ்ச்சி நடைபெற்றது. வட்ட தி.மு.க. மாநகராட்சி உறுப்பினர் ஆர்.என். துரை தமது சொந்த செலவில் மிகச் சிறப்பாக மேடை அமைத்துத் தந்தார். நள்ளிரவு 1.30 மணியளவில் நிகழ்ச்சிகள் நிறைவடைந்தன. இராயப்பேட்டை பகுதி கழகச் செயல் வீரர்கள் ஒரு மாதம் கடுமையாக உழைத்து விழாவை சிறப்புடன் நடத்தி முடித்தனர்.





# பொள்ளாச்சியில் இரண்டு நாள் எழுச்சிமிகு நிகழ்ச்சிகள்



பொள்ளாச்சி ஆனைமலை பகுதிகளில் பெரியார் - அம்பேத்கர், முத்துக்குமார் நினைவேந்தல் பொதுக் கூட்டங்களும், ஒருநாள் பெரியாரின் பயிலரங்கு நிகழ்ச்சியும் எழுச்சியோடு நடத்தப்பட்டன.

சனவரி 29, சனி மாலை பொள்ளாச்சி திருவள்ளுவர் திடலில் மாவீரன் முத்துக்குமார் நினைவேந்தல் பொதுக் கூட்டம் நகர செயலாளர் வே. வெள்ளிங்கிரி தலைமையில் நடைபெற்றது. கோவை மாவட்ட கழகத் தலைவர் கலங்கல் வேலுச்சாமி, பொள்ளாச்சி நகர பொருளாளர் கலை இராசேந்திரன், ஆனைமலை நகர செயலாளர் வே. அரிதாசு ஆகியோர் முன்னிலையில் ஒன்றிய செயலாளர் சம்பத் வரவேற்புரையாற்றினார். தொடர்ந்து பகுத்தறிவாளர் பேரவை அமைப்பாளர்கள் சி. விஜயராகவன், ஆசிரியர் சிவகாமி, திருப்பூர் மாவட்ட தலைவர் சு. துரைசாமி, மாவட்ட செயலாளர் காசு. நாகராசன் ஆகியோரது உரைகளுக்குப் பின்னால் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் சிறப்புரையாற்றினார்.

தமிழகத்திலும் ஈழத்திலும் தமிழர்களுக்கு நேர்ந்த, நேர்கிற பேரபாயங்கள், பார்ப்பன - பனியா - பன்னாட்டு சக்திகளின் சதிகள், இவற்றிற்கெதிராக தமிழர்கள் செய்தாக வேண்டிய பணிகள் குறித்து ஒரு மணி நேரத்திற்கும் மேலாக பொதுச் செயலளார் விரிவான உரை நிகழ்த்தினார். அவரது உரை தமிழர்கள் முன் வைக்கப்பட்ட வேலைத் திட்டங்களாகவும், தமிழ்ப் பகைவர்களுக்கு விடுத்த அறைகூவல்களாகவும் அமைந்தது.

இந்நிகழ்வில் ம.தி.மு.க., நாம் தமிழர், ஆதித் தமிழர் பேரவை, ஆதித் தமிழர் விடுதலை முன்னணி, விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்டஇயக்கங்களைச் சேர்ந்த தோழர்கள் பெருமளவில் பங்கேற்றனர்.

மறுநாள் 30.1.2011 ஞாயிறு காலை ஆனைமலை ரோஸ் மகாலில் பொள்ளாச்சி வட்ட கழகத் தோழர்கள் பங்கேற்ற ஒரு நாள் சிறப்புப் பயிலரங்கம் நடைபெற்றது. பகுத்தறிவாளர் பேரவை அமைப்பாளர் சி. விசயராகவன், கடவுள் மறுப்பு முழக்கங்களைக் கூறி நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். பொள்ளாச்சி நகர செயலாளர் வே. வெள்ளிங்கிரி தோழர்களை அறிமுகம் செய்து வைத்தார். தொடர்ந்து, 'பெரியார் தொண்டர்களின் பெரும் பணி' எனும் தலைப்பில் திருப்பூர் மாவட்ட தலைவர் சு. துரைசாமி தொடக்க உரையாற்றினார்.

முதல் அமர்வின் இறுதியில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் 'பெரியாரின் தேவை - அன்றும் இன்றும்' எனும் தலைப்பில் நிறைவுரை ஆற்றினார். பயிற்சியாளர்கள் எழுப்பிய வினாக்களக்கு விரிவாக விளக்கமளித்தார். மதியம் தோழர்கள் அனைவருக்கும் அசைவ விருந்தளிக்கப்பட்டது.

பிற்பகலில் தொடங்கிய இரண்டாவது அமர்வில் ''களப்பணியில் தோழர்கள்'' எனும் தலைப்பில், மடத்துக்குளம் இரா. மோகன் தொடக்க உரையாற்றினார். தொடர்ந்து 'கடவுள் மறுப்பு கட்டாயம் - ஏன் ?' எனும் தலைப்பில் சிற்பி இராசன் சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து மாலை 7 மணியளவில் சுயமரியாதை போராளி ஆணைமலை நரசிம்மன் நகரில், பெரியார் அம்பேத்கர் நினைவேந்தல் பொதுக் கூட்டம் நகர செயலாளர் வே. அரிதாசு தலைமையில் நடைபெற்றது. சிற்பி இராசனின் மந்திரமல்ல தந்திரமே நிகழ்ச்சியைக் காண பெண்களும், சிறுவர்களும் பெருமளவில் திரண்டு வந்தனர். கடவுள், சாதி, மதம், மூடச் சடங்குகள் குறித்து சிற்பி இராசன் செயல்முறை விளக்கமாய் ஆற்றிய உரை கூடியிருந்த நூற்றுக்கணக்கான மக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. இறுதியில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் சிறப்புரையாற்றினார். அப்போது, அரசியல் கட்சிகள் சாதி மதவாத இயக்கங்கள், ரசிகர் மன்றங்கள் ஆகியவற்றில் தமது உழைப்பை வீணடிக்கிற தமிழ் இளைஞர்களால் அவர்களது சொந்த வாழ்வு மட்டுமின்றி, சமூக நலனும் எவ்வாறு பாதிக்கிறது என்பதையும் பெரியார் - அம்பேத்கர் கொள்கைகளைப் பின்பற்றுவதால் தமது சொந்த வாழ்வு நலனும், சமூக நலனும் எவ்வாறு பாதுகாக்கப்படும் என்பதையும் ஒப்பிட்டுக் காட்டி, பெண்கள், இளைஞர்கள், மாணவர்கள் அனைவரும் பெரியாரியலைப் பின்பற்றவும், பரப்பவும் முன் வரவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார். அவர் கேட்டுக் கொண்டபடியே கூட்ட முடிவில் பத்துக்கும் மேற்பட்ட புதிய இளைஞர்கள் முன் வந்து பெயர் முகவரிகளைக் கொடுத்துச் சென்றனர்.

சட்ட எரிப்புப் போராளியும், மூத்த பெரியார் தொண்டருமான ஆனைமலை ஆறுமுகம் மற்றும் ஆனைமலை நரசிம்மன் நண்பர்கள் வந்திருந்து கழகப் பணிகளைப் பாராட்டி பொதுச் செயலாளரிடம் பேசிக் கொண்டிருந்தனர். நிகழ்வுகளில் கோவை வடக்கு மாவட்ட செயலாளர் வெள்ளமடை நாகராசு, திருப்பூர் மாநகர செயலாளர் முகில் இராசு, ஒன்றிய பொறுப்பாளர்கள் பெரியார் மணி, இரா. சீனிவாசன், த. கண்ணன், ஆனந்த், நகர கழகப் பொறுப்பாளர்கள் பெரியார் மணி, இரா. சீனிவாசன், த. கண்ணன், ஆனந்த், நகர கழக பொறுப்பாளர்கள் த. இராசேந்திரன், அப்பாதுரை, கதிரவன், நிர்மல் மற்றும் தமிழ்நாடு மாவணவர்கழகப் பொறுப்பாளர்கள் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

இரண்டு நாள் நிகழ்ச்சிகளை பகுதித் தோழர்கள் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்தனர்.

**செய்தி: நல்லதம்பி**

# முத்துக்குமார் மரணத்துக்கு நியாயம் வழங்காத தமிழகம்!



## வடலூர் கூட்டத்தில் கோவை இராமகிருட்டிணன் வேதனை

29.1.11 சனி மாலை சரியாக 5.30 மணிக்கு வடலூர் பேருந்து நிலையம் அருகில் மாவீரன் முத்துக் குமார் வீர வணக்க நாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது. இன எழுச்சிப் பாடகர் தேனிசை செல்லப்பா பாடல்களோடு, நிகழ்ச்சி கடலூர் மாவட்ட அமைப்பாளர் கு. அழகிரி தலைமையில், புதுவை மாநிலத் தலைவர் லோகு அய்யப்பன் முன்னிலையில், தலைமை செயற்குழு உறுப்பினர் கலியமூர்த்தி வரவேற்புரையோடு தொடங்கியது.

முதலில் புதுவை மாநிலத் தலைவர் லோகு. அய்யப்பன் உரையாற்ற, அதைத் தொடர்ந்து, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் அரசியல் ஆய்வுக் குழு மாநிலத் துணைச் செயலாளர் தடா மு. முருகேசன், பாட்டாளி மக்கள் கட்சி மாநில துணைப் பொதுச் செயலாளர் தி. திருமால்வளவன், ம.தி.மு.க. அரசியல் ஆய்வு மையச் செயலாளர் மு.செந்திலதிபன் ஆகியோர் உரைக்குப் பின், இறுதியாக கழகப் பொதுச் செயலாளர் கு. இராமகிருட்டிணன் உரையாற்றினார். அவரது உரையில், நாம் அத்தனை பேரும் குற்றவாளிக் கூண்டிலே நின்று கொண்டிருக்கிறோம். காரணம் முத்துக்குமார் இந்த வீர வணக்க நாளை தமிழ்நாடு நடத்தும் என்று ஆசைப்படவில்லை. தன்னை தமிழ்நாடு முழுவதும் வீரவணக்கம் செலுத்தி வணங்குவார்கள். தன் படத்திற்கு மெழுகுவர்த்தி ஏற்றி மரியாதை செலுத்துவார்கள் என்று அவன் ஆசைப்படவிலலை. அவன் ஆசைப்பட்டதெல்லாம் லட்சக்கணக்கான தமிழீழ மக்களை, தமிழ்நாடு மக்கள் காப்பாற்ற வேண்டும் என்றுதான், தன்னுயிரை தானே நெருப்புக்கு இரையாக்கிக் கொண்டான்.

முத்துக்குமார் ஒன்றும் கோழையில்லை. அவன் தற்கொலை செய்வதற்கோ, தீக்குளிப்பதற்கோ அவன் மனநோயாளி அல்ல. அவன் 32 பக்கத்திற்கு தமிழ்நாட்டிற்கு, உலக மக்களுக்கு, அய்.நா. மன்றத்திற்கு, இங்குள்ள காவல் துறைக்கு, மருத்துவர்களுக்கு, மாணவர்களுக்கு என ஒவ்வொருவருக்குமான செய்திகளை பதிவு செய்து, அந்த ஆவணத்தை மக்களிடம் அளித்துவிட்டு தீக்கிரையாக்கிக் கொண்டான் என்று சொன்னால், அவன் எவ்வளவு மன உறுதி படைத்தவனாக இருந்திருப்பான். அவன் எவ்வளவு வேதனைப்பட்டிருந்தால் வேறு யாரும் தமிழ்நாட்டிலே, தமிழ்நாட்டு மக்கள், இந்திய அரசை தட்டிக் கேட்கவில்லை. இந்திய அரசை தடுத்து நிறுத்தவில்லையே, தமிழ்நாட்டு மக்கள் முன் வரவில்லையே என்ற ஆதங்கத்திலேதான் முத்துக்குமார் தன் உயிரை தீக்கிரையாக்கிக் கொண்டான்.


தமிழ்நாட்டில் நாம் அத்தனை பேரும் திரண்டு போயிருந்தால் அனைத்து அரசியல் கட்சிகளும், தமிழ் உணர்வு இயக்கங்களும் ஒன்றுபட்டு 2009 பிப்ரவரி மாதத்திற்கு முன்னர் குறைந்தது 10000 பேர் தெருவில் நின்றிருந்தால் முத்துக்குமார் இறந்திருக்க மாட்டார். நம்மோடு போர்க்களத்தில் நின்றிருப்பான். யாரும் போராடவில்லையே ! எல்லோரும் பதிவு செய்வதோடு அடையாளப்படுத்துவதோடு நிறுத்திக் கொண்டார்களே, முதலமைச்சர் கடிதம் எழுதுகிறார் என்று சொன்னால் மற்ற தலைவர்கள் அறிக்கை விடுவதோடு நிறுத்திக் கொள்கிறார்கள் என்ற வேதனையில் தான் தன் சாவுக்கு பின்னாலாவது இந்த செய்தியை தாங்கிக் கொண்டு தமிழ்நாட்டு மக்கள் ஒன்றாக திரள மாட்டார்களா, தெருவுக்கு வந்து போராட மாட்டார்களா என்று தன்னை அழித்துக் கொண்டான் என்று குறிப்பிட்டுப் பேசினார். கடலூர் மாவட்ட தலைவர் வெங்கடேசன் நன்றி கூறினார்.

கூட்டம் தொடங்குவற்கு முன் பா.ம.க. மாநில துணைப் பொதுச்செயலாளர் தி. திருமால்வளவன், மாவீரன் முத்துக்குமார் நினைவுச் சுடரை ஏற்றி வைத்தார். கூட்டத்திற்கு புதுவை மாநிலத்திலிருந்து 4 வாகனங்களில் தோழர்கள் வந்திருந்தனர். கோவையிலிருந்து கழக மாநகரத் தலைவர் கோபால், மாநகரப் பொருளாளர் இரஞ்சித் பிரபு, அலுவலகப் பொருப்பாளர் சா. கதிரவன், பொள்ளாச்சி பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு மாநாடு போல் கூட்டம் நடைபெற்றது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 10th February 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2042 | பிப்ரவரி 17, 2011 | புரட்சி 10 | முழக்கம் 5 | விலை: ரூ.2.50


## சர்வாதிகார, வாரிசுரிமை ஆட்சிகள் ஓட்டம்

# அடக்குமுறை அரசுகளுக்கு எதிரான மக்கள் புரட்சி

சர்வாதிகார அடக்குமுறை ஆட்சிகளை மக்கள் புரட்சி தூக்கி எறியத் தொடங்கியிருக்கிறது. 2011 ஆம் ஆண்டு அரபு உலகில் நடக்கும் நிகழ்வுகள் மக்கள் சக்தியே மகத்தானது என்பதை மீண்டும் உணர்த்தி வருகின்றன. ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான டுனீசியாவில் மக்கள் ஒன்று திரண்டு துப்பாக்கிக் குண்டுகளையும், அடக்குமுறைகளையும் எதிர்த்து நின்று அந்நாட்டின் அதிபர் சைன் எல் அபிடைன் பென் அலியை அதிகாரத்திலிருந்து விரட்டினர். அந்த எழுச்சி எகிப்தில் எதிரொலித்தது. 18 நாட்கள் தொடர்ந்த மக்கள் புரட்சியினால் 30 ஆண்டுகாலம் ஆட்சி நடத்திய ஹோஸ்னி முபாரக் பதவி விலகியுள்ளார். மன்னராட்சி முடிவுக்கு கொண்டு வரப்பட்டு அதிகாரம் இராணுவ உயர் மட்டக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. விரைவில் சுதந்திரமான வெளிப்படையான தேர்தலை நடத்தி 30 ஆண்டுகால அவசரகால ஆட்சி முறை முடிவுக்குக் கொண்டு வருவதாக ராணுவ உயர்மட்டக் குழு, மக்களிடம் உறுதியளித்துள்ளது. முபாராக்கின் ஆட்சிக்கு ஆதரவு காட்டி வந்த இஸ்ரேல், இப்போது, எகிப்துடன் நல்லுறவு தொடர வேண்டும் என்று அறிவித்துள்ளது. முபாரக் பதவி விலக வேண்டும் என்று அமெரிக்காவும் வலியுறுத்தியது.

எகிப்தில் இப்போது மக்கள் மதத்தின் அடிப்படையில் ஒன்று திரளவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இரட்டைக் கோபுர தகர்ப்பிலிருந்து இஸ்லாமியர்கள் மீது வெறுப்புணர்வைக் காட்டி வரும் மேற்குலக நாடுகள், முஸ்லீம்கள் மதத்துக்காக மட்டுமே ஒன்று சேர்ந்து போராடுவார்கள் என்று பரப்புரை செய்து வந்தன. எகிப்து இந்த பொய்யுரையை முறியடித்துக் காட்டியுள்ளது. மதங்களைக் கடந்து முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும் ஒருங்கிணைந்து அடக்குமுறை ஆட்சிக்கு எதிராகப் போராடினார்கள். ‘இது இஸ்லாமியருக்கான போராட்டமல்ல; எகிப்துக்கான போராட்டம்’ என்று எகிப்து முஸ்லீம்கள் போராட்டம் தொடங்கியதிலிருந்தே, மதச் சார்பற்ற நான்கு குழுவினரோடு இணைந்து, போராட்டத்தைத் தொடங்கினர். போராட்டக் குழுவுக்கு தலைமையேற்றவர் முகம்மது எல் பாராடே என்ற மதச்சார்ப்பின்மையை ஏற்றுக் கொண்ட மேலை நாட்டு விஞ்ஞானி.

அதேபோல் டுனிசியாவில் 20 ஆண்டுகளாக தடை செய்யப்பட்டிருந்த ‘இஸ்லாமிய மறுமலர்ச்சி கட்சி’ என்ற கட்சியின் தலைவர் ரேக்கிட் கான்னாவுச்சி தலைமையில் தான் மக்கள் புரட்சி நடந்துள்ளது. தமது கட்சி மீதான தடையை நீக்கி, நாட்டின் ஜனநாயகத்தில் பங்கேற்க அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையோடுதான் 20 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்து டுனிசாவுக்கு வந்த இந்தக் கட்சி, மக்களைத் திரட்டிப் போராடியது. தொழிலாளர் சங்கங்கள் - இடதுசாரி அமைப்புகளுடன் இணைந்து புதிய ஆட்சி அமைக்கும் முயற்சிகள் அங்கே தொடங்கியுள்ளன. அல்ஜீரியாவில் இப்போது மக்கள் எழுச்சி தொடங்கியிருக்கிறது. ஏமன் நாட்டில் மக்கள் போராட்டத்துக்கு பணிந்து அந்நாட்டின் அதிபர் அதிகாரத்தை, தனது மகனிடம் அளிக்க மாட்டேன் என்று உறுதி கூறியுள்ளார். ஜோர்டான் நாட்டின் மன்னர், அவசரமாக புதிய அரசாங்கம் ஒன்றை அறிவித்து சீர்திருத்தங்களை நடைமுறைப் படுத்துவதாக உறுதி கூறியிருக்கிறார். சர்வாதிகாரிகளும் ராணுவமும் மக்களிடம் மண்டியிடும். இந்த எதிர்ப்பு அலை இந்தியாவிலும் இலங்கையிலும் நெருங்கக் கூடிய காலம் விரைந்து வந்தே தீரும்.

## கழக இணையதளம்; தோழர்களுக்கு வேண்டுகோள்

தோழர்களுக்கு வணக்கம்.

பெரியார் திராவிடர் கழகம் வரும் ஜூன் மாதத்தில் 11 ஆவது ஆண்டில் நுழைய உள்ளது. இந்த நேரத்தில் பெரியார் திராவிடர் கழகத்தின் இணையதளத்தை முழுமையான தகவல் தொடர்புத் தளமாக மாற்ற முயற்சி செய்து வருகிறோம். இணையதள உலகில் பெரியாரின் கருத்துக்கள் முழுமையாக சுமார் பதினோராயிரம் (11000) பக்கங்களை இலவசமாகப் பதிவிறக்கம் செய்யும் வண்ணமும், யூனிகோட் முறையில் தேடுதல் வசதியோடும் உள்ள இணையற்ற - மாபெரும் பெரியார் கருத்துக் கருவூலமாக நமது பெரியார் தி.க.வின் இணையத்தளமான **www.periyardk.org** மட்டுமே இயங்குகிறது. குடிஅரசு, புரட்சி, பகுத்தறிவு, ரிவோல்ட் போன்ற ஏடுகளில் பெரியார் பதிவு செய்த எழுத்துக்களையும், பேச்சுகளையும் மக்கள் சொத்தாக்கியிருக்கும் அதே நேரத்தில் சிறு சிறு வெளியீடுகளையும் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதிகளையும் செய்துள்ளோம்.

ஆனால், பெரியார் திராவிடர் கழகத்தின் இலக்குகள், செயல்பாடுகள், செயல் திட்டங்கள், போராட்டங்கள், பிரச்சாரங்கள் போன்ற அமைப்பு குறித்த தகவல்கள் நமது இணையதளத்தில் எதுவும் இல்லை. புரட்சிப் பெரியார் முழக்கம் ஏடு மட்டுமே பதிவேற்றப்படுகிறது. உண்மையாகவே நாம் களத்தில் ஆற்றிய ஏராளமான பணிகளை ஆவணப்படுத்தி அனைவரும் அறியச் செய்ய வேண்டியது அவசியமான பணியாகும்.

இணையதளத்திற்காக மட்டுமல்லாமல், கழகப் பொறுப்பாளர்களின் உரைகள், செயல்பாடுகள், போராட்டங்கள் குறித்து சிறு சிறு நூல்கள் வெளியிடுவதற்காகவும், 11 ஆவது ஆண்டில் பெரியார் தி.க.வின் அனைத்துச் செயல்பாடுகளையும் தொகுத்து மலர் ஒன்றை வெளியிடுவதற்காகவும், ஆவணப் படம் - குறும்படம் வெளியிடுவதற்காகவும் ஆவணங்களைத் தொகுக்கும் பணி மிக மிக அவசியமாகி உள்ளது.

கழகத் தோழர்களிடமும் மாவட்டப் பொறுப்பாளர்களிடமும் இதுபற்றி நேரில் பேசியுள்ளோம். தமிழ்நாடு முழுவதும் பரவலாக உள்ள ஆவணங்களை முழுமையாகத் தொகுத்து, அவ்வாறு தொகுக்கப்பட்ட முழுமையான தகவல்களை மீண்டும் மிக அதிகமாக பரவலாக்க வேண்டும் என்ற எமது நோக்கத்திற்கு - எமது ஆவணத் தொகுப்புப் பணிக்கு கழகத் தோழர்களும், தலைவர்களும், இயக்கம் சாராத பெரியாரியல் ஆதரவாளர்களும், நண்பர்களும் உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

2001 ஆம் ஆண்டிலிருந்து கடந்த 10 ஆண்டுகளில் பெரியார் திராவிடர் கழகம் நடத்திய பொதுக் கூட்டங்கள், பிரச்சாரப் பயணங்கள், போராட்டங்கள் போன்றவற்றில் பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர்கள் கோவை இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன் போன்றோர் ஆற்றிய உரைகளின் ஆடியோ அல்லது வீடியோ பதிவுகள், சி.டி., டி.வி.டி.க்கள், நிகழ்வுகளின் புகைப்படங்கள், துண்டறிக்கைகள், பெரியார் தி.க. நிகழ்ச்சிகள் மற்றும் போராட்டங்கள் குறித்து பெரியார் முழக்கம் அல்லாத பிற ஏடுகளில் வெளியான செய்திகள், தினசரி, வார, மாத, ஏடுகளில் வெளியான செய்திகள், இணைய தளங்களில் வந்த செய்திகள் மற்றும் பெரியார் தி.க.வை விமர்சித்தும், எதிர்த்தும் பிற இயக்க ஏடுகளில் வெளியான செய்திகள், கட்டுரைகள் போன்றவை உங்களிடமோ, உங்கள் நண்பர்களிடேமோ இருந்தால் கீழ்க்கண்ட எமது முகவரிக்கு அஞ்சலிலோ, மின்னஞ்சலிலோ அனுப்பி உதவுங்கள்.

**– கொளத்தூர் மணி**
**தலைவர், பெரியார் திராவிடர் கழகம்**
**பெரியார் படிப்பகம், மேட்டூர் அணை 1**
**சேலம் மாவட்டம்.**

## விரிவுரையாளர்களின் நியாயமான கோரிக்கையை அரசு நிறைவேற்ற வேண்டும்

தமிழ்நாடு முழுதும் தற்காலிகப் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ள கல்லூரி விரிவுரையாளர்கள் கடந்த 8 நாட்களாக பணி நிரந்தரம் செய்யக் கோரி போராடி வருகிறார்கள். தமிழகம் முழுதும் 997 பேர் தற்காலிக விரிவுரையாளர்களாக உள்ளனர். இவர்கள் அனைவரையும் பணி நிரந்தரம் செய்வதாக கடந்த சட்டமன்ற தேர்தலின்போது தி.மு.க. வாக்குறுதி அளித்தது.

வாக்குறுதியை நிறைவேற்றாமல் குறைந்த ஊதியத்துக்கு வேலைக்கு அமர்த்தி, ஊதியமும் முறையாக வழங்கப்படாமல் அவர்களை அரசு அலைக்கழித்து வருகிறது.

வேலை வாய்ப்புகளை உருவாக்கித்தரவேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு. ஏற்கனவே வேலை வாய்ப்புகள் உள்ள துறைகளில் பணியாற்றும் விரிவுரையாளர்களுக்கு பணி நிரந்தரம், பணிப் பாதுகாப்புகளை வழங்குவதில் அரசு அலட்சியம் காட்டி வருவதில் எந்த நியாயமும் இல்லை. தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாய இளைஞர்கள், படித்து, வேலை வாய்ப்பற்ற நிலையில் தவிக்கிறார்கள்.

அவர்களை தாயுள்ளத்தோடு அரவணைத்து, உரிய பணிப் பாதுகாப்பை வழங்க வேண்டியதே உண்மையான சமூக நீதியில் கவலை உள்ள ஆட்சியின் கடமையாக இருக்க முடியும்.

இலவசங்களை வழங்கினாலே போதும், ஓட்டு குவிந்து விடும் என்று கருதிக் கொண்டு, போராடும் விரிவுரையாளர்களின் நியாயமான கோரிக்கைகளையும் போராட்டத்தையும் இந்த ஆட்சி அலட்சியப்படுத்துவது, மக்கள் நல அரசின் அணுகுமுறையாக இருக்க முடியாது.

அதிகாரப் பார்வையில் பிரச்சினையைப் பார்க்காமல் 1000 குடும்பங்களின் வாழ்க்கைப் பிரச்சினையாக இதை கருத வேண்டும். சாலைப் பணியாளர்களை நிரந்தரமாக்குவதில் இதேபோல் ஜெயலலிதா அலட்சியம் காட்டி செயல்பட்டதை எதிர்த்து தேர்தல் களத்தை சந்தித்த தி.மு.க., இப்போது, அதே போன்று விரிவுரையாளர்களை நிரந்தரமாக்குவதில் அலட்சியம் காட்டலாமா ?

விரிவுரையாளர்களின் நியாயமான போராட்டத்தை பெரியார் திராவிடர் கழகம் வரவேற்கிறது.

தலையங்கம்

# உச்சநீதிமன்றத்தின் சரியான தீர்ப்பு

*“தேசத் துரோகம்”, “தடை செய்யப்பட்ட இயக்கத்துக்கு ஆதரவு” என்ற இரண்டு மிரட்டல் ஆயுதங்களைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டில் கருத்துரிமைகளைக் குழிதோண்டி புதைத்து வருகிறார்கள் ஆட்சியாளர்கள். கடந்த காலத்தில் ஜெயலலிதா முதல்வராக இருந்த போதும் சரி; தொடர்ந்து கலைஞர் கருணாநிதி முதல்வராக வந்த பிறகும் சரி; இரண்டு ஆட்சிகளிலும் தமிழின உணர்வாளர்கள் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டார்கள். ‘தடா’ சட்டங்கள் பாய்ந்தன. ‘தடா’ சட்டம் இல்லாத நிலையில் தேசப் பாதுகாப்பு சட்டம் பாய்கிறது!*

*தடை செய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்துப் பேசுவதே ‘தேச விரோதம்’ என்று தமிழக காவல்துறை மக்களை அச்சுறுத்துகிறது. தடா சட்டப் பிரிவுகளின் கீழ் அப்படித் தொடரப்பட்ட வழக்குகளில் உச்சநீதிமன்றம் தடை செய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்துப் பேசுவது குற்றமாகாது என்று தீர்ப்பளித்த பிறகும்கூட தமிழ்நாட்டில் இரண்டு ஆட்சிகளிலுமே அடக்குமுறை சட்டங்கள் முறைகேடாகவே பயன்படுத்தப்பட்டன. இது தொடர்பாக கடந்த பிப். 8 ம் தேதி உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள மற்றொரு முக்கிய தீர்ப்பை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அசாம் அய்க்கிய விடுதலை முன்னணி என்ற தடை செய்யப்பட்ட அமைப்பில் உறுப்பினராக இருந்த இந்திரதாசு என்பவர், தடா சட்டத்தில் கைது செய்யப்பட்டு, ‘தடா’ நீதிமன்றத்தால் 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார். மேல் முறையீட்டில் உச்சநீதிமன்றம் ‘தடா’ நீதிமன்றத்தின் தண்டனையை ரத்து செய்து அவரை விடுதலை செய்துள்ளது. நீதிபதிகள் மார்க்கண்டே கட்ஜ் மற்றும் ஜியான் சுதாமிஸ்ரா ஆகியோர் வழங்கிய தீர்ப்பு குறிப்பிடத்தக்கதாகும்.*

*“தடை செய்யப்பட்ட ஒரு இயக்கத்தில் உறுப்பினராக இருப்பதே குற்றமாகிவிடாது. அவர் ஏதேனும் வன்முறை சீர்குலைப்பு நடவடிக்கைகளில் செயல்பட்டிருந்தால்தான் குற்றமாகும். சட்ட விரோத தடுப்புச் சட்டம் உள்ளிட்ட பல்வேறு சட்டங்களில் அடங்கியுள்ள சட்டப் பிரிவுகளை தனியே பிரித்துப் பார்க்காமல், அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளோடு இணைத்துத் தான் பார்க்க வேண்டும். நாட்டில் மிக உயர்ந்தது அரசியலமைப்பு சட்டம் தான். அரசியலமைப்புக்கு எதிராக எந்த சட்டத்தையும் கொண்டு வர முடியாது. அப்படி அரசியலமைப்புக்கு எதிரானதாகத் தோன்றும் எந்த சட்டமாக இருந்தாலும் அதை நாங்கள் சட்டத்துக்கு எதிரானது என்றே அறிவிக்க வேண்டும். இல்லையேல், அரசியலமைப்புக்கே குழிபறித்து அந்த சட்டத்தை நியாயப்படுத்த வேண்டும். தடா சட்டத்தின் 3(5) பிரிவு, சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 10 போன்றவை தடை செய்யப்பட்ட இயக்கத்தில் உறுப்பினராக இருப்பதே குற்றம் என்று கூறுகிறது. இந்த சட்டப் பிரிவுகள் அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளான பிரிவுகள் 19 மற்றும் 21க்கு எதிரானவையாகும். இதேபோல் இந்திய தண்டனைச் சட்டத்தில் சதிச் செயலுக்கு எதிரான பிரிவு 124(ஏ) என்பதையும், அடிப்படை உரிமைகளோடு இணைத்துத்தான் பார்க்க வேண்டும்” என்று நீதிபதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.*

*இதே போன்று கடந்த பிப்ரவரி 4 ஆம் தேதி உச்சநீதிமன்றம், இதே அசாம் விடுதலை அய்க்கிய முன்னணியில் உறுப்பினராக இருந்த அரூப்பியான் என்பவர் மீது ‘தடா’ நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ரத்து செய்தது. இந்தத் தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று மத்தியில் ஆளும் காங்கிரஸ் கட்சி ஆட்சி மட்டுமல்ல; பாரதிய ஜனதாவும், உச்சநீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தன. உச்சநீதிமன்ற நீதிபதிகள், இதைத் தள்ளுபடி செய்ததோடு, பிப்.8 ஆம் தேதி வழங்கிய தீர்ப்பில், அதை மீண்டும் உறுதி செய்துள்ளனர். தமிழ்நாட்டில் தி.மு.க.வும், அ.தி.மு.க.வும், அடக்குமுறை சட்டங்களை முறைகேடாக பயன்படுத்தத் துடிப்பதைப் போலவே “தேசிய” கட்சிகளான காங்கிரசும், பா.ஜ.க.வும் இதே கருத்துகளையே கொண்டுள்ளதை இதிலிருந்து புரிந்து கொள்ள முடியும்.*

*அன்னிபெசன்ட், திலகர் மீது தேசத் துரோக வழக்குகளைப் பதிவு செய்து, சிறையில் அடைத்த பிரிட்டிஷ் அரசின் “பிரிவி கவுன்சில், சட்டவிரோத செயல்களில் ஈடுபட வேண்டும் என்ற அவசியமில்லை. அதற்கு திட்டமிட்டாலே தேச விரோதம்” என்று கூறியது. உச்சநீதிமன்றம் பிரிட்டிஷ் ஆட்சியின் ‘பிரிவி கவுன்சில்’ கருத்தை ஏற்கத் தயாராக இல்லை என்று நீதிபதிகள் தீர்ப்பில் சுட்டிக் காட்டியுள்ளனர்.*

*ராஜீவ் காந்தி ஈழத்துக்கு இந்திய ராணுவத்தை அனுப்பி, பல்லாயிரக் கணக்கான தமிழர்களைப் படுகொலை செய்ததற்கும், தமிழ்ப் பெண்கள் மீது இந்திய ராணுவம் பாலியல் வன்முறைகளை நடத்தியதற்கும், ஈழத் தமிழர்கள் வழங்கிய தண்டனைதான், ராஜீவ் மரணம் என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி, அரசியலமைப்பு வழங்கிய கருத்துரிமையின் அடிப்படையில் பேசியதற்காக தேசிய பாதுகாப்பு சட்டத்தை தி.மு.க. ஆட்சி ஏவியதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.*

*தோழர்கள் சீமான், மணியரசன் போன்றவர்களும் இதே போன்ற அடக்குமுறைக்கு உள்ளானர்கள். உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள இந்த தெளிவான தீர்ப்பை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இப்போது தடை செய்யப்பட்ட அசாம் விடுதலை இயக்கத்தினரோடு உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் தலைநகரில் பேச்சு வார்த்தைகளைத் தொடங்கியிருப்பதாக செய்திகள் வந்துள்ளன. தடை செய்யப்பட்ட இயக்கத்தின் உறுப்பினராக இருப்பதே குற்றம் என்று கூறிக் கொண்டு, அதற்கான அடக்குமுறை சட்டங்களை உருவாக்கிக் கொண்டு, பிறகு, அவர்களுடன் பேச்சு வார்த்தையை எப்படி நடத்த முடியும்? இந்த சட்டங்களின்படி “குற்றவாளியுடன்” பேச்சு வார்த்தை நடத்தும் உள்துறை அமைச்சர் ப. சிதம்பரமும் குற்றவாளியாகி விடுவாரே!*

*நாட்டின் ஜனநாயகத்தை கேலிக் கூத்தாக்கும் இத்தகைய அடக்குமுறை சட்டங்கள், சட்டப் புத்தகத்தில் இடம் பெறுவதே அவமானமாகும்!*

# சாதி ஏற்றத்தாழ்வுகளைக் களைவதற்கு தேவை திராவிடர் அடையாளமே!

*சாதி ஒழிப்புக்கு நமக்கு இன்றும் திராவிடர் என்ற அடையாளமே தேவைப்படுகிறது. முல்லைப் பெரியாறு நீர் உரிமை கிடைத்தும், கீழ்சாதித் தமிழனுக்கு மேல்சாதித் தமிழன் தண்ணீர் தர மறுத்தால், அது எப்படி முழுமையான உரிமையாகும் என்று, விரைவில் வெளிவர இருக்கும் ‘வெங்காயம்’ திரைப்பட இயக்குநர் ராசகுமார்கேட்டார்.*

*21.1.2011 வெள்ளிக்கிழமை அன்று மாலை 6 மணிக்கு வேலூர் மாவட்டம் நெமிலி பேருந்து நிலையம் அருகில், நெமிலி ஒன்றிய கழகம் சார்பாக, தமிழர் திருநாள் பொங்கல் விழா பொதுக் கூட்டம் நடைபெற்றது. ப.திலீபன் தலைமையிலும், சி. செல்வம் முன்னிலையிலும் நடைபெற்ற இப்பொதுக் கூட்டம், பாண்டி கலைமாமணி சித்தன் செயமூர்த்தியின் தமிழிசை நிகழ்ச்சியோடு தொடங்கியது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இயக்குநர் வேலுபிரபாகரன், இயக்குநர் சங்ககிரி ராசகுமார், மக்கள் சக்தி கட்சி கன். மோகன், திருவள்ளுவர் மன்றம் தலைவர் நா. இளங்கோ ஆகியோர் உரையாற்றினர்.*

*தற்போது ‘வெங்காயம்’ என்ற திரைப்படத்தை இயக்கி வரும் இயக்குநர் சங்ககிரி ராசகுமார் தனது உரையில்:*

*நாம் பொங்கல் விழாவும், தமிழ் புத்தாண்டு விழாவும் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். பொங்கல் வைப்பதற்கு நல்ல நாள் எது ? அடுப்பு பற்ற வைக்க நல்ல நேரம் எது ? என்பது பற்றியெல்லாம் இப்போது பத்திரிகைகள் எழுத ஆரம்பித்துவிட்டன. மூட நம்பிக்கை இல்லாத, ஆபாச கதை இல்லாத ஒரே பண்டிகையான நம் பொங்கல் விழாவிலும் பார்ப்பனர்கள் நுழைந்து விட்டதால், இனி வரும் காலங்களில், நமது வீடுகளிலும், காடுகளிலும் பொங்கல் வைக்கக் கூடாது. கோவில்களில்தான் பொங்கல் வைக்க வேண்டும் என்ற நிலை வந்துவிடும். இதை கொண்டு சேர்க்கிற ஊடகங்கள் பகுத்தறிவுக்கும், முற்போக்குக்கும் எப்பொழுதும் முன்னுரிமை கொடுப்பதில்லை. மக்களை சீரழிக்கும்*

## ‘வெங்காயம்’ பட இயக்குனர் ராசகுமார் பேச்சு

*நிகழ்ச்சிகளைத் தான் ஒவ்வொரு தொலைகாட்சியும், பத்திரிகையும் பரப்பி வருகிறது. என்னுடைய தாத்தாவின் ஜாதகம், ஓலைச் சுவடியில் எழுதப்பட்டிருந்தது. எனது அப்பாவின் ஜாதகம் குறிப்பேடுகளில் எழுதப்பட்டுள்ளது. எனது ஜாதகம் கணினியில் வடிவமைக்கப்பட்டு, அச்சடிக்கப்பட்ட தாளாக இருக்கிறது. இப்பொழுதெல்லாம் இணைய தளத்தில் பிறந்த தேதியை போட்டு ஜாதகம் பார்த்துக் கொள்கிற நிலை வந்துவிட்டது. ஆனால் நாம், பகுத்தறிவு கருத்துகளை பரப்புவதற்கு, பயன்படுத்தும் அதிகபடியான யுத்தி மேடைகள்தான். அதற்கடுத்து மலிவான காகிதத்தில் அச்சடிக்கப்பட்ட நமது பத்திரிகை. இதை வைத்து என்ன செய்ய முடியும் ? இங்கு இருப்பவர்கள் எல்லாம் சாதி வெறி அற்ற, மதவெறி அற்ற பகுத்தறிவுவாதிகள் மட்டும்தான் கூடியிருக்கிறோம். நமக்கு நாமே பேசிக் கொள்வதற்கா இந்த மேடை ?*

*அந்த தள்ளாத வயதிலும் பெரியார் அன்றே சொல்லியிருக்கிறார். “இந்த மக்களிடையே மண்டி கிடக்கும் மூடநம்பிக்கைகளும், பிற்போக்குத்தனமும் பெரிய புற்றுநோய் போன்றது. சாதாரணமாக மருந்து பூசுவதோ, பத்து போடுவதோ சரி செய்யாது. மேஜர் ஆபரேசன் செய்தால்தான் அகற்ற முடியும்” என்று. நாம் பெரியார் சொன்ன மேஜர் ஆபரேசனை செய்தாக வேண்டும்.*

*இப்பொழுது இன்னொரு முக்கிய பிரச்சினை என்னவென்றால், நாம் தமிழரா ? திராவிடரா ? என்பதுதான். நமது மேடைகளுக்கு கூடும் கூட்டத்தைவிட, தமிழர் என்று சொல்லுகின்ற மேடைகளுக்கு அதிகமாக கூடும் கூட்டத்தைப் பார்த்து நமக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. தமிழர் என்ற உணர்வோடு நாம் அங்கு போய் நிற்கிறபோது, “திராவிடத்தை வீழ்த்துவோம்” என்ற சொல் நம்மை மன உளைச்சலுக்கு ஆளாக்குகிறது. ‘திராவிடர்’ என்பது அவ்வளவு மோசமான வார்த்தையா ? இந்த திராவிடர் என்ற வார்த்தை, தமிழ் தேசியத்திற்கு என்றுமே எதிராக இருந்ததில்லையே ! நமக்குள் இருக்கும் ஏற்றத் தாழ்வுகள் சரி செய்யப்பட வேண்டுமானால், நமக்குள் புகுத்தப்பட்டிருக்கும் ஆரியத்திற்கு எதிராக, இன்றைகல்ல, என்றைக்குமே ‘திராவிடர்’ என்ற அடையாளம் அவசியமாகிறது.*

*தமிழராய் ஒன்றிணைவோம் என்று சொல்லிக் கொண்டு, பார்ப்பனர்களை சேர்த்துக் கொண்டு போராடினால் என்ன நிலையை சென்றடையும் ? நமக்குள் இருக்கும் ஏற்றத்தாழ்வுகளை கலையாமல், காவிரியில் தண்ணீர் தரவில்லை. முல்லை பெரியாறில் தண்ணீர் தரவில்லை. தமிழராய் ஒன்றிணைந்து போராடலாம் என்று அழைப்பு விடுத்தால், கீழ் சாதிகாரன் ஏறும் வாகனத்தில் மேல்சாதிக்காரன் ஏற மறுப்பான். போராடி பெறுகிற தண்ணீரைகூட மேல்சாதிகாரந்தான் உரிமையோடு குடிக்க முடியும். கீழ் சாதிகாரனை கைகளை ஒட்ட சொல்லி தண்ணீர் ஊற்றுகிற நிலைதான் இருக்கும். ஆட்சியில் இருந்துகொண்டு சட்டம் இயற்றினாலும் கூட, சாதி மாற்றி திருமணமும் செய்வதோ, உணவு உட்கொள்வதோ முடியாத காரியம். சாதி என்பது ஒழிக்கப்பட வேண்டிய முக்கியமானது. காலங்காலமாக நம் மூலையில் புகுத்தப்பட்டிருக்கும் ஆரிய சிந்தனையால், நமக்குள் மண்டி கிடக்கும் சாதிய ஏற்றத்தாழ்வுகளை கலைவதற்கு திராவிடர் என்ற சொல் தான் தேவைப்படுகிறது. திராவிடர் என்ற சொல்தான் நமக்கு உரிமையை பெற்று தந்தது.*

*பெரியார் பேசுகிறபோது, அவர் மீது கற்களையும், சாணியையும், மலத்தையும் வீசுவார்கள். அதுதான் நமது கொள்கைகளுக்கு கிடைத்த பரிசு. இந்த மக்கள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்திய பெரியாரின் கருத்துகள்தான் நமக்கு தேவையாக இருக்கிறது. எவன் ஒருவன் சலசலப்பை ஏற்படுத்துகிறானோ அவன்தான் முதலில் கருப்புச் சட்டை அணிந்து வருவான். நாம் ஒரு வேலை கொள்கையில் இருந்து பின்வாங்கி விட்டோமோ என்ற எண்ணம் வருகிறது. அடுத்த ஆண்டாவது, இங்குள்ள நூறு பேர் ஒரு ஆயிரம் பேராக மாற வேண்டும். பெரியாரின் கருத்துகளை வேகமாக கொண்டு செல்ல வேண்டும் என்று பேசினார். இறுதியாக தோழர் பகலவன் நன்றி கூறினார்.*

---

### வந்த கடிதம்

*3.2.2011 ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்தில் வெளியான ‘ஒப்புதல் வாக்கு மூலம்’ என்னும் தலைப்பிலான தலையங்கம் படித்தேன். “மூடநம்பிக்கைகளில் மக்களை மூழ்க வைத்து அவர்களை சுரண்டுவதற்கு துணை போவதுதான் கேரளாவின் மார்க்சீயமா ?” என்றும், தமது வறுமைக்கும், சாதி இழிவுக்கும் “கடவுளும் மதமும் காரணம்” என்று நம்பிக் கொண்டு துன்ப துயரங்களுக்கு விரதங்களையும், பரிகாரங்களையும், தரிசனங்களையும் நோக்கி ஓடிக் கொண்டிருக்கிற மனிதர்களிடம் எப்படி புரட்சியையும், சமூக மாற்றத்தையும் கொண்டு வர முடியும் ?” என மிக சரியான கேள்வியை எழுப்பியுள்ளது.*

*“நாடு கடந்த தமிழீழ அரசு தோழமை மய்யம்” சென்னையில் தொடங்கப்பட்டுள்ள சேதி நெஞ்சில் தேனாய் இனித்தது.*

**– தங்க. சங்கரபாண்டியன், சென்னை–103.**

# கழகம் நடத்திய தமிழர் திருநாள் விழா

## தடைகளைத் தகர்த்து சுக்கம்பாளையத்தில் கழகக் கூட்டம்

பெரியார் திராவிடர் கழகத்தின் தமிழ்ப் புத்தாண்டு பொங்கல் விழா பொதுக் கூட்டம் 22.1.2011 அன்று பல்லடம் வட்டம் சுக்கம்பாளையத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிகள் காலை முதல் மாலை திருப்பூர் தியாகு தலைமையில் நடைபெற்றன. மாவட்ட தலைவர் துரைசாமி அனைவருக்கும் பொங்கல் வழங்கினார். மாலை 6 மணிக்குபொதுக் கூட்டம் க. ஆறுமுகம் தலைமையில் நடந்தது. சு. வடிவேல் வரவேற்புரையாற்ற, நீலவேந்தன் (ஆதித் தமிழர் பேரவை பொதுச் செயலாளர்), கா.சு. நாகராசு (கோவை மாவட்ட கழக செயலாளர்), கோபி. வேலுச்சாமி உரையைத் தொடர்ந்து சிற்பி ராசனின் ‘மந்திரமா ? தந்திரமா ?’ நிகழ்ச்சி நடைபெற்றது.

பொதுக் கூட்டத்திற்கு அனுமதிக்கக் கூடாது என்று பழமைவாதியான கிராம நிர்வாக அதிகாரி, துணை அதிகாரி மற்றும் இந்து முன்னணி அமைப்பைச் சார்ந்தவர்களும் பல்லடம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தனர். காவல்துறை அதிகாரிகள் பல்லடம் கழகத் தோழர் சி. விசயன் அவர்களிடம் அனுமதி மறுத்தது. ஆனால் கழகத் தோழர்கள் தடையை மீறி கூட்டம் நடத்தியே தீர்வோம் என்று கூறவே, கடும் வாக்கு வாதம் நடந்தது. இறுதியில் கடவுள் இல்லை என்றும் பேசக் கூடாது; சாதியில்லை என்றும் பேசக்கூடாது என்று காவல்துறை அதிகாரி நிபந்தனை விதித்தார். நாங்கள் பேசுவதை நீங்கள் முடிவு செய்யக் கூடாது என்று தோழர்கள் உறுதியாகக் கூறிவிட்டனர். கூட்டத்தில் சாதி ஒழிப்பும், கடவுள் மறுப்பும் அதிகமாகப் பேசப்பட்டது.

பொது மக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். இறுதியில் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டவர் களுக்கு பரிசாக 50 மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. மா. திருமூர்த்தி, சி. விசயன், கோ. ஜெகதீசு, சூரி, இராவணன், சூலூர் தமிழ்ச் செல்வி, வீரமணி, கலங்கல் வேலு, அகில் குமரவேலு, திருப்பூர் துரைசாமி, முகில்ராசு, மணிகண்டன், திருவள்ளுவர் தாய்த்தமிழ்ப் பள்ளி, வான்மதி வேலுச்சாமி, ராஜேசுக் கண்ணா, பொன்னுச்சாமி, சிவக்குமார், லட்சுமி மில்ஸ் முத்துக்குமார், பொன்னுச்சாமி உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். தோழர் மணிகண்டன் நன்றி கூறினார்.

### திருப்பூரில்

15.1.2011 அன்று திருப்பூர் வீரபாண்டி பகுதியில் தமிழர் திருநாள் விழா விளையாட்டுப் போட்டிகளுடன் சிறப்பாக கழக சார்பில் நடைபெற்றது. அமுதம் மூட்டைக் கடை தோழர் கணேசன் தலைமையில் ஆடிட்டர் இரவி (எ) பழனிச்சாமி, முத்து. மூர்த்தி, கார்த்திக் முன்னிலையில் மாவட்டத் தலைவர் சு. துரைசாமி, மடத்துக்குளம்மோகன் சிறப்புரையாற்றினர். மாநகர செயலாளர் முகில்ராசு, க. அகிலன், பாடகர் தியாகு, ஆசிரியர் சிவகாமி, செந்தில், சண். பாண்டியநாதன், சம்பூகன், தமிழ்ச் செல்வன், இராசசிங்கம் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

23.1.2011 ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை கழக சார்பாக தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் விழா நடைபெற்றது. து. சுசீலா பொங்கல் வழங்கி துவக்கி வைத்தார். சிறுவர்களுக்கும், சிறுமியர்களுக்கும், இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் என அனைவருக்கும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. சமர்பா குழுவினர்களின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கி சிறப்புரையாற்றினார். தோழர்கள் மாவட்டத் தலைவர் சு. துரைசாமி, மாநகர செயலாளர் முகில்ராசு, பல்லடம் விசயன், ஆசிரியர் சிவகாமி, தியாகு, திருப்பூர் இராவணன், கோபிநாத், நீதிராசன், ஜீவா நகர் குமார், கிளாகுளம் செந்தில் குமார், மணிகண்டன் மற்றும் திருப்பூர் பகுதி தோழர்கள், மாஸ்கோ நகர் பொது மக்களும் திரளாகக் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியை தோழர்கள் அகிலன், சம்பூகன், மாஸ்கோ நகர் புதிய தோழர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

### ஜோத்தம்பட்டியில்

15.1.2011 சனி அன்று திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், ஜோத்தம்பட்டி கிராமத்தில் கழகம் சார்பில் பொங்கல் விழா, விளையாட்டுப் போட்டிகள் மற்றும் மாலையில் பொதுக் கூட்டமும் நடைபெற்றது.

காலை 10 மணிக்கு விளையாட்டுப் போட்டிகள் தொடங்கியது. முன்னதாக விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கென குழு அமைக்கப்பட்டது. மடத்துக்குளம் ஒன்றிய துணைச் செயலாளர் மா. மோகன்குமார், காரத்தொழுவு அமைப்பாளர் மயில்சாமி, உடுமலை நகர துணை செயலாளர் சிவசங்கர், உடுமலை ஒன்றிய செயலாளர் கோ. விசுவநாதன், மடத்துக்குளம் ஒன்றிய செயலாளர் சு. சிவானந்தம், கணியூர் வெங்கடாசலம், தியாகு உள்ளிட்ட குழுவினர் விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் பணியை மேற்கொண்டனர்.

மாலை 6 மணிக்கு பொதுக் கூட்டம் தொடங்கியது. மடத்துக்குளம் ஒன்றிய துணைச் செயலாளர் மா.மோகன் குமார் தலைமை தாங்கினார். அவர் பேசும்போது, “இன்று நம்மைப் போன்ற பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் கல்வியில் முன்னேற்றமடைந்ததற்கு பெரியார்தான் காரணம்” என்று விளக்கிப் பேசினார். அவருக்குப் பின் கழகத்தின் தலைமை செயற்குழு உறுப்பினர் பொள்ளாச்சி இரா. மனோகரன், சமூகத்தில் நிலவக் கூடிய மூட நம்பிக்கைகளை விளக்கிப் பேசினார். அவரின் பேச்சை மக்கள் ஆர்வத்துடன் கேட்டுத் தெளிவு பெற்றனர். கழகப் பொதுச்செயலாளர் கோவைஇராமகிருட்டிணன், விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிப் பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்றினார். ஒரு மணி நேரத்திற்கும் மேல் அவர் ஆற்றிய உரையை மக்கள் அமைதியுடனும், ஆர்வத்துடனும் கேட்டனர்.

கோவை இளவரசன், ‘மந்திரமா தந்திரமா’ நிகழ்ச்சியை நடத்தினார்.

நிகழ்ச்சியில் திருப்பூர் மாவட்ட செயலாளர் கரு. கருமலையப்பன், பொள்ளாச்சி ந. பிரகாசு, உடுமலை நகரத் தலைவர் யாழ். நடராசன், உடுமலை நகரப் பொருளாளர் வேல் முருகன், மடத்துக்குளம் ஒன்றியத் தலைவர்ந.ப. கதிரவன், கடத்தூர் கிளை செயலாளர் அய்யப்பன், மணிகண்டன், சரவணன், கணியூர்வெங்கடாசலம், தமிழ்ச் செல்வன், உடுமலை தியாகு மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

## கோவையில் கழகத் தலைமை செயற்குழு பிப். 26, 27 இல் கூடுகிறது

பெரியார் திராவிடர் கழக தலைமை செயற்குழுக் கூட்டம் பிப். 26, 27 தேதிகளில் கோவையில் காலை 10 மணியளவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் கூடுகிறது.

பிப். 26 ஆம் தேதி முழுதும் கோவை தொடர்வண்டி நிலையம் எதிரிலுள்ள அண்ணாமலை அரங்கிலும், 27 ஆம் தேதி முழுதும் அதே பகுதியிலுள்ள திவ்யோதயா அரங்கிலும் கலந்துரையாடல் நடைபெறும்.

செயற்குழு உறுப்பினர்கள் இரு நாட்களிலும் பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

கழக அமைப்பு, செயல்பாடுகள், செயல் திட்டங்கள் பற்றி விரிவாக செயற்குழுவில் விவாதிக்கப்படும்.

செயற்குழு உறுப்பினர்கள் கழகத் தோழர் களுடன் இது பற்றி கலந்து பேசி, தங்களது கருத்துகளை எழுத்து வடிவில் கழகத் தலைவர் மற்றும் பொதுச்செயலாளர்களுக்கு பிப். 20 ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கு மாறு கேட்டுக் கொள்கிறோம்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர்களுக்கு தனியாக அழைப்புகள் அனுப்பப் படும்.

**– கோவை கு. இராமகிருட்டிணன்**
**விடுதலை இராசேந்திரன்**
**(பொதுச் செயலாளர்கள்)**

## அம்பேத்கர் திரைப்படத்தை மக்களிடம் கொண்டு சென்ற தாமிரபரணி பாண்பாட்டு அரங்கம்



பாபாசாகேப் அம்பேத்கர் ஆங்கிலத் திரைப்படத்தை 1998 ஆம் ஆண்டே தேசியத் திரைப்படக் கழகம் தயாரித்தா லும், தமிழ் மொழியாக்கம் செய்து இப்படத்தைத் திரையிட 12 ஆண்டுகள் ஆகிவிட்டன. மலையாள நடிகர் மம்முட்டியின் நடிப்பிலும், ஜாப்பர் பட்டேலின் இயக்கத்திலும் வெளியாகி, தேசிய விருது பெற்ற இப்படம் தமிழகத்து வெள்ளித் திரை களில் வெளிவர படாதபாடு படுகின்றது என்பதுதான் உண்மை. சாதியத்தின் இறுக்கமும், தீண்டாமைக் கொடுமை களின் பல்வேறு வடிவங்களும் இன்னும் உயிர்த் துடிப்போடு இருக்கின்றன என்பதற்கான சாட்சியங்களே இவை !

திருநெல்வேலி மாவட்டத்தில் பல்வேறு தலித் அமைப்புகள், மக்கள் இயக்கங்கள், சனநாயக சக்திகள் ஒருங்கிணைந்து **தாமிரபரணி பண்பாட்டு அரங்கம்** ஏற்படுத்தி, அம்பேத்கர் தமிழ்த் திரைப்படத்தை திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓட்ட வேண்டும். இயக்கங்களின் பிரதிநிதிகள் மட்டுமல்லாமல், பொதுவாக மக்களும், பள்ளி மாணவ, மாணவியரும் இப்படத்தைப் பார்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கடந்த டிசம்பர் மூன்றாம் தேதி முதலே தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டனர்.

பாளையங்கோட்டை செந்தில்வேல் திரையரங்க உரிமையாளரைத் தொடர்ந்து சந்தித்து, இது குறித்துப் பேசி அவரை இத்திரைப்படத்தை அங்கு திரையிட ஒப்புக்கொள்ள வைத்தனர். இப்படம் ஓடும் நாட்களுக்கு ஏற்பாட்டாளர்களே (தாமிரபரணி பண்பாட்டு அரங்கம்) திரையரங்கத்திற்கு முழுப் பொறுப்பு ஏற்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையின் பிறகே திரையிடுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. மாநகரின் பல இடங்களிலும் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட விளம்பரப் பதாகைகளும், எடுப்பான துண்டறிக்கைகளும் பண்பாட்டு அரங்கம் சார்பாக பரவலாக விநியோகிக்கப்பட்டது. அதன்பின் பல்வேறு தரப்புகளிலிருந்தும் இம்முயற்சிக்கு ஆதரவும், ஒத்துழைப்பும் இருந்தது. அனைவரும் எளிதாக இப்படத்தைப் பார்க்கும் வகையில் டிக்கெட்டுகளின் விலையையும் மிகக் குறைந்த அளவிலே (ரூ.20, ரூ.25, ரூ.30) நிர்ணயம் செய்து, “விற்பனைக் குரிய வியாபாரப் பொருளல்ல டாக்டர் அம்பேத்கர்” என்ற செய்தியையும் இதன் மூலம் கொண்டு செல்லப்பட்டது. பள்ளி மாணவ, மாணவியர் இப்படத்தைப் பார்ப்பதற்கு ஏதுவாக மூன்றாவது நாள் இலவசக் காட்சிகளாக ஓடியது.

சனவரி 8, சனிக்கிழமை காலை 11 மணிக்காட்சியை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தோழர் நல்லகண்ணு தொடக்கி வைத்தார். இப்படத்திற்கு தமிழக அரசு முழு வரிவிலக்கு அளிக்க வேண்டும் என்று தனது தொடக்க உரையில் கேட்டுக் கொண்டார். திருநெல்வேலி மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் இயக்கப் பொறுப் பாளர்கள், பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகளும் பொது மக்களும் திரளாக வந்திருந்து திரைப்படத்தைப் பார்த்தனர்.

ஒரு காட்சி முடிந்து மறுகாட்சி தொடங்கும்போது திரை யரங்கின் வெளியே ஏற்பட்ட வாகன நெரிசலும், திரைப் படத்தைக் காண திரண்டிருந்த பார்வையாளர்கள் கூட்டமும் சாலையிலும் பேருந்துகளிலும் பயணித்தவர்களைத் திருப்பிப் பார்க்க வைத்தது. ‘எந்திரன்’ போன்ற பிரபலமாகப் பேசப்பட்ட பட வெளியீடுகளை விஞ்சும் வகையில் செந்தில் வேல் திரையரங்கே அந்த இரு நாட்களும் பரபரப்போடு இருந்தது.

**செய்தி : எம்.ஏ. பிரிட்டோ**

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# களப்பணியில் கழகம்

### சூலூரில்

*30.1.2011* ஞாயிறு மாலை 6 மணிக்கு கோவை மாவட்டம், சூலூர் அண்ணா சீரணி மேடையில், சனவரி 30 காந்தி படுகொலை நாள் பொதுக் கூட்டம், சூலூர் ஒன்றிய கழகம் சார்பாக நடைபெற்றது. பொதுக் கூட்டத்தின் முதல் நிகழ்வாக, மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவின் இசை நிகழ்ச்சியோடு துவங்கியது. மேட்டூர் கோவிந்தராஜ் மற்றும் திருப்பூர் தியாகு ஆகியோர் பகுத்தறிவு பாடல்களையும், சாதி ஒழிப்புப் பாடல்களையும் பாடினர். தோழர் முனியப்பன் பொதுக் கூட்டத்திற்கு தலைமை ஏற்றார். சூலூர் வீரமணி, மாவட்ட துணைத் தலைவர் இரா. பன்னீர்செல்வம், கோவை ஆறுச்சாமி, திருப்பூர் மாவட்ட தலைவர் துரைசாமி, தமிழ்நாடு மாணவர் கழகம் அமைப்பாளர் ந. பன்னீர்செல்வம் ஆகியோர் உரையாற்றிய பின்பு இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினார்.

### புதுக்கோட்டையில்

*1.2.2011* செவ்வாய் மாலை 6 மணிக்கு, புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப் பட்டினம் கிழக்குக் கடற்கரைச் சாலையில், தமிழக மீனவர் படுகொலையைக் கண்டித்து பொதுக் கூட்டம் நடைபெற்றது. நாம் தமிழர் இயக்கத்தின் மணல்மேடு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் பா. சாகிர் உசேன் தலைமையில் நடைபெற்ற இப் பொதுக் கூட்டத்தில், அறந்தாங்கி ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் கா. சத்யா வரவேற்புரை ஆற்றினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் இயக்குநர் சீமான், நாம் தமிழர் இயக்க மாநில பரப்புரையாளர் திலீபன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

### மடத்துக்குளம்

*30.1.2011* ஞாயிறு அன்று மடத்துக் குளம் ஒன்றிய கலந்தாய்வுக் கூட்டம் கடத்தூரில் கதிரவன் இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கடத்தூர் கிளை செயலாளர் அய்யப்பன் தலைமை வகித்தார். மணிகண்டன் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் கடந்த மாதம் மடத்துக் குளம் ஒன்றியத்தில் நடைபெற்ற இயக்க நிகழ்வுகள் குறித்து விவாதிக்கப்பட்டது. பின் தொடர்ந்து மாதமொருமுறை கலந் தாய்வுக் கூட்டம் நடத்துவது, மடத்துக்குளம் ஒன்றியத்தில் மாதம் இரண்டு தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள் நடத்துவது உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. தோழர் சரவணன் நன்றி கூற கூட்டம் முடிவடைந்தது.

கூடட்டத்தில் ஒன்றிய தலைவர் ந.ப. கதிரவன், ஒன்றியச் செயலாளர் சு. சிவனாந்தம், துணைச் செயலாளர் மா. மோகன் குமார், அமைப்பாளர் துரை. இராஜேந்திரன், காரத் தொழுவு கிளை அமைப்பாளர் கு. மயில்சாமி, நாத்திகன் பாலு, பழனிச்சாமி, மருதராஜ், வடிவேல் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

### வில்லிவாக்கத்தில்


ஜனவரி 30 ஞாயிறு அன்று சென்னை வில்லிவாக்கம் பேருந்து நிலையம் அருகில் காந்தியார் படுகொலை நாள் விளக்கப் பொதுக் கூட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது. நிகழ்ச்சி துவக்கத்தில் தோழர் சி. அருள்தாஸ், பகுத்தறிவு பாடல்களை பாடி உற்சாகமூட்டினார். சி.ஞா.ஆதவன் தலைமையேற்க நா. பாஸ்கர் வரவேற்புரையாற்றினார். அவரை தொடர்ந்து மாவட்ட கழகத் தலைவர் ஏ. கேசவன், வேலவன், உடுமலை தமிழ்ச்செல்வன் ஆகியோர் உரையாற்றினர்.

அடுத்து வழக்கறிஞர் சு. குமாரதேவன், கழகப் பொதுச் செயலாளர் கோவை இராம கிருட்டிணன், கழக துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன் சிறப்புரையாற்றினர். தட்சிணாமூர்த்தி நன்றியுரையுடன் கூட்டம் முடிவுற்றது. நிகழ்ச்சி நடந்த இடத்தின் அருகில் தோழர்கள் வி.ஜனார்த்தனன், செல்வம் ஆகியோரின் முயற்சியில் காந்தியார் படுகொலையில் ஆர்.எஸ்.எஸ். தொடர்பை அம்பலப்படுத்தி விளக்கப் புகைப்படக் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. ஏராளமான பொதுமக்கள் பார்த்து தங்கள் செல்போன்களில் படம் எடுத்து சென்றவண்ணம் இருந்தனர். நிகழ்ச்சியில் நூற்றுக்கணக்கான பொது மக்கள் ஆரம்பம் முதல் இறுதி வரை கலையாமல் பங்கேற்றனர்.



காந்தி படுகொலை கண்காட்சியைப் பார்வையிடும் பொது மக்கள்

## பெரியார் பெருந்தொண்டர் காட்டுசாகை குப்புசாமி முடிவெய்தினார்



தனது இளமைக் காலம் முதல் பெரியார் கொள்கையை ஏற்று திராவிடர் கழகத்தில் இணைந்து தென்னாற்காடு மாவட்டத்தின் தலைவராகவும், செயலாளராகவும், பொருளாளராகவும் பின்னர்தமிழ்நாடு திராவிடர் கழகத்தின் மாநில பொருளாளராகவும் இயக்க பணியாற்றிய பெரியார் பெருந்தொண்டர் காட்டுசாகை வை. குப்புசாமி, கடந்த *7.2.2011* திங்களன்று இரவு 10.15 மணிக்கு மறைவுற்றார். *29.1.2011* அன்று பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் வடலூரில் நடைபெற்ற முத்துக்குமார் நினைவேந்தல் நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு தனது இறுதிக் காலம் வரை கொள்கை வழி வாழ்ந்தவர் காட்டுசாகை வை. குப்புசாமி .

கடலூர் சுப்பிரமணியபுரத்திலுள்ள அவரது இல்லத்தில் 8.2.2011 அன்று 3 மணிக்கு இரங்கல் கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் வே. குழந்தைவேலு, புதுவை மாநில கழகத் தலைவர் லோகு அய்யப்பன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர் திருமாறன், ம.தி.மு.க. வெளியீட்டுச் செயலாளர் வந்தியத்தேவன், பாட்டாளி மக்கள் கட்சி மாநில துணைப் பொதுச் செயலாளர் தி. திருமால்வளவன், ம.தி.மு.க. கடலூர் மாவட்டச் செயலாளர் என். ராமலிங்கம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாநில அரசியல் குழு உறுப்பினர் தடா. முருகேசன், பெரியார் திராவிடர் கழக தலைமை செயற்குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி, தி.மு.கழக பொதுக் குழு உறுப்பினர் ஜி. பாஸ்கரன், கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் இரங்கல் உரையாற்றினர்.

கூட்டத்தை திராவிடர் கழக துணைப் பொதுச் செயலாளர் துரை. சந்திரசேகரன் தொகுத்து நடத்தினார். இறுதியாக அவரது மகன் பெல்கு. இராஜன், அவரது பொது வாழ்க்கைக் குறித்து நினைவுகூர்ந்தார்.

பிறகு, காட்டுசாகை வை. குப்புசாமி அவர்களின் உடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது. தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்தும் புதுவை மாநிலத்திலிருந்தும் கழகத் தோழர்களும், கடலூர் மாவட்டத்தின் அனைத்து அரசியல் கட்சியை சார்ந்த முக்கிய பிரமுகர்களும் இதில் கலந்து கொண்டனர்.

நினைவேந்தல் படத் திறப்பு நிகழ்வு பிப்.20 ஆம் தேதி கடலூர் சுப்ரமணியபுரத்திலுள்ள அவரது இல்லத்தில் நிகழ்கிறது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் தி.மு.க. வெளியீட்டு பிரிவு செயலாளர் திருச்சி செல்வேந்திரன் உருவப் படத்தைத் திறந்து வைக்கிறார்.

## நன்கொடை

### மூத்த பெரியாரியல்வாதி ப. பூவராகவன்

மூத்த பெரியாரியல்வாதியும், செங்குட்டுவன் என்ற புனைப் பெயரில் பல பகுத்தறிவு அறிவியல் கட்டுரைகளை எழுதியவருமான ஓய்வு பெற்ற ஆசிரியர் ப. பூவராகவன் அவர்களை கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் சென்னையில் அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடினர். கழக செயல்பாடுகளை பாராட்டி, கழக வளர்ச்சிக்கு ரூ.1000 நன்கொடை வழங்கினார். சென்னை மாவட்டக் கழகத் தலைவர் உமாபதி, செயலாளர் தபசி குமரன் மற்றும் கழகத் தோழர் அன்பு தனசேகர் உடனிருந்தனர்.

### கோபி தோழர் நாகப்பன்

கோபி நகர கழகத் தலைவர் தோழர் நாகப்பன், தனது 54வது பிறந்த நாள் மகிழ்வாக (பிப்2) கோபியில் நடந்த கழகக் கூட்டத்தில் கழகத் தலைவரிடம் கழக ஏட்டுக்கு ரூ.2000 நன்கொடை வழங்கினார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்.

### கழகத் தோழர் டி.என். தமிழரசன் – டி. யுவராணி மணவிழா

சென்னை மயிலைப் பகுதி கழகத் தோழர் டி.என். தமிழரசன் (மறைந்த டி.நடேசன்-ஜெயராக்கினி ஆகியோர் மகன்) - டி. யுவராணி (மறைந்த திம்மூர் ஜி.தேவநாதன் - பேபி ஆகியோர் மகள்) ஆகியோர் வாழ்க்கைத் துணை ஏற்பு நிகழ்வு 6.2.2011 அன்று காலை 8.30 மணியளவில், சென்னை ழ்வார்பேட்டையில் சி.பி.ராமசாமி சாலையிலுள்ள சமுதாயக் கூடத்தில் கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன் தலைமையில் சிறப்புடன் நடந்தது. கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், வடசென்னை மாவட்டக் கழகத் தலைவர் கேசவன் வாழ்த்துரை வழங்கினர். கழக ஏட்டுக்கு மணமகன் ரூ.1000 நன்கொடை வழங்கினார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்.

### கழகத் தோழர் தமிழ்ச் செல்வன்–ரஞ்சிதா சாதி மறுப்பு மணவிழா

சென்னை இராயப்பேட்டை கழகத் தோழர் எம். ஜெகதீஷ் எனும் தமிழ்ச் செல்வம், எம்.பி.ஏ. (மணிவண்ணன் - பரமேஸ்வரி ஆகியோரின் மகன்), பி. அனிதா, எம்.பி.ஏ. ஆகியோரின் சாதி மறுப்பு, காதல் மண விழா பிப். 9 ஆம் தேதி காலை சென்னையில் ஹேமமாலினி திருமண மண்டபத்தில் சிறப்புடன் நடைபெற்றது. கழகத் தேழர்கள், நண்பர்கள், மண விழாவில் பங்கேற்று வாழ்த்துகளைத் தெரிவித்தனர். மணமகன் கழக ஏட்டுக்கு ரூ.3000 நன்கொடையாக கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனிடம் வழங்கினார். நன்றியுடன் பெற்றுக்கொண்டோம்.


### ந. ரமேசுகுமார் – அ. மகேசுவரி மணவிழா

*7.2.2011* திங்கள் அன்று காலை 11 மணிக்கு கொளத்தூர் பெரியார் படிப்பகத்தில், சேலம் மாவட்டம் தங்காயூர் ந. ரமேஷ்குமார் - ஈரோடு மாவட்டம் சிவகிரி ஆ. மகேசுவரி ஆகியோரது வாழ்க்கை துணை ஏற்பு விழா, ஒன்றிய தலைவர் க. ஈசுவரன் தலைமையில் நடைபெற்றது. மணமக்கள் கழகத் தலைவரை சந்தித்து மணவிழா மகிழ்வாக புரட்சிப் பெரியார் முழக்க வளர்ச்சி நிதியாக ரூ.5000 வழங்கினர். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். **(ஆர்)**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 17th February 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2042 | பிப்ரவரி 24, 2011 | புரட்சி 10 | முழக்கம் 6 | விலை: ரூ.2.50


## இவ்வளவும் ஒரே நாளில்...

*(பகவானை நம்பிப் பயணம் புறப்பட்டவர்கள் பகவானுக்கு சேவை செய்வதாக கூறிக் கொள்வோர் எவரையும் கடவுள் காப்பாற்றுவது இல்லை என்பது மறுக்க முடியாத உண்மை. ஒவ்வொரு நாளும் இதை உறுதிப்படுத்தும் நிகழ்வுகள் நடந்த பிறகும், பக்தி மடமையிலிருந்து விடுபடவே முடியாது என்று 'சத்தியம்' செய்து கொண்டு நிற்பவர்களை என்ன செய்வது? கடந்த பிப். 19 ஆம் தேதி மட்டும் ஒரே நாளில் ஏடுகளில் வந்துள்ள செய்திகள் இவை.)*

கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டை அருகே உள்ள புதுப்பேட்டையில் 'மாசி மக' திருவிழாவுக்குப் போய் 'சாமி தரிசனம் செய்து விட்டு 30 பேர் தனி வேனில் பரங்கிப்பேட்டை திரும்பியபோது குட்டியாண்டவர் கோயில் பிரதான சாலையில் வேன் ஓட்டுநர் கட்டுப்பாட்டை இழந்து மரத்தில் மோதியது. 3 பெண்கள் பலியானார்கள். வேனில் இருந்த மற்ற அனைவரும் படுகாயமடைந்து கடலூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

### அர்ச்சகருக்கு கத்திக் குத்து

காஞ்சி காமாட்சி அம்மன் கோயிலுக்கு இலவச சாப்பாடு சாப்பிடச் சென்ற ஒருவர் குடிபோதையில் இருந்ததாகக் கூறி கோயிலில் இருந்து வெளியேற்றி விட்டார்கள். ஆத்திரமடைந்த அவர், கச்சசேசுவரர் கோயில் அருகே நின்று கொண்டு, தன்னை வெளியேற்றியவர்களை திட்டிக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த காமாட்சியம்மன் கோயில் அர்ச்சகரான நடன சாஸ்திரி தட்டிக் கேட்டார். ஆத்திரமடைந்த போதை மனிதர் அருகே பூ விற்ற பெண்ணிடமிருந்த கத்தியை எடுத்து அர்ச்சகரைக் குத்தினார். படுகாயமடைந்த அர்ச்சகர் ஆபத்தான நிலையில் தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

### 'கிரிவலம்' சென்றவர்கள் மரணம்

சேலம் மாவட்டம் மல்லூர் அருகே உள்ள சந்தியூர் ஆட்டையாம்பட்டியைச் சார்ந்த நான்கு நண்பர்கள் கட்டிடத் தொழிலாளர்கள். ஒவ்வொரு மாதமும் 'பவுர்ணமி'க்கு திருவண்ணாமலை சென்று கோயிலை சுற்றி நடக்கக்கூடிய விரதமான 'கிரிவலம்' வருவார்கள். வழக்கம்போல் கடந்த 18 ஆம் தேதி பவுர்ணமிக்கு கிரிவலம் சுற்றி, 'சாமி தரிசனம்' முடித்து ஊர் திரும்புவதற்கு பேருந்தை பிடிக்க சாலையைக் கடந்தபோது நாமக்கல் நோக்கி வந்த பேருந்து, அவர்கள் மீது மோதி நான்கு பேரும் உயிரிழந்தனர்.

### சாமி ஊர்வலத்தில் மோதல்

கடலூர் மாவட்டம் கம்பளி மேடு கிராமத்தில் மாசி மகத் திருவிழா பிப்.18 ஆம் தேதி நடந்தது. அலங்கரிக்கப்பட்ட அம்மன் சிலையை கிராமத்தினர் ஊர்வலமாக எடுத்து வந்தபோது தியாக வள்ளி கிராமத்தைச் சார்ந்தவர்களுக்கும் கம்பளிமேடு கிராமத்தினருக்கும் வாய்த் தகராறு ஏற்பட்டு மோதலாக வெடித்தது. அம்மன் சிலைக்கு முன்னால் இரு கிராமத்தினரும் பயங்கர மோதலில் ஈடுபட்டதில் ஒருவர் கொல்லப்பட்டார். வீடுகள், உடைமைகள், அடித்து நொறுக்கப்பட்டன. காவல் துறை குவிக்கப்பட்டு ஆயுதம் ஏந்திய காவல்துறையினர் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டுள்ளனர்.

### மாசாணியம்மன்

திருப்பூர் மாவட்டத்தில் 'மாசாணியம்மன்' கோயில் இப்போது பெரும் வர்த்தக நிறுவனமாகிவிட்டது. சுடுகாட்டு எலும்புகளை பக்தர்கள் கடித்து விழுங்கும் காட்டுமிராண்டி சடங்கு இந்த கோயிலில் நடக்கிறது. புதுக்கோட்டை மாவட்டம் ஓடாக்கூர்கிராமத்திலிருந்து மாசாணியம்மன் தரிசனத்துக்கு 18 பேர் கடந்த 17 ஆம் தேதி இரவு வேன் ஒன்றில் சென்றனர். 18 ஆம் தேதி அதிகாலை கோவை – திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் எதிரே வந்த லாரி மீது மோதி பக்தர்கள் வந்த வாகனம் விபத்துக்குள்ளானதில் நான்கு பெண்கள் உயிரிழந்தனர்.

இவை ஒரே நாளில் நிகழ்ந்த 'பக்தி' விபத்துகள். சாமி சக்தி என்ற ஒன்று இருந்திருந்தால் தன்னை நம்பிய பக்தர்களைக் காப்பாற்றியிருக்க வேண்டுமா? இல்லையா?

*காங்கிரசின் 2 ஆண்டு வருமானம் 718 கோடி*

## தொழில் நிறுவனங்களின் பிடியில் அரசியல் கட்சிகள்

காங்கிரஸ், பா.ஜ.க., உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் ஆண்டு வருமானம், பன்னாட்டு நிறுவனங்களுக்கு இணையாக கோடிகளை தொட்டுள்ளது. தனியார் நிறுவனங்கள் போட்டிப் போட்டுக் கொண்டு, அரசியல் கட்சிகளுக்கு கோடிக் கணக்கான ரூபாயை நன்கொடையாக வாரி வழங்கியிருப்பதும் தெரிந்துள்ளது.

'அசோசியேஷன் ஆப் டெமாகிரடிக் ரிபார்ம்ஸ்' என்ற அமைப்பு, அரசியல் கட்சிகள் தாக்கல் செய்த வருமான வரிக் கணக்கு விவரங்களை, வருமான வரித் துறையிடமிருந்து, தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெற்றுள்ளது. 2007-08 மற்றும் 2008-09 ஆம் ஆண்டுகளுக்கான வருமான வரிக் கணக்குகளை இந்த அமைப்பு பெற்றுள்ளது.

இந்த இரண்டு ஆண்டுகளையும் சேர்த்து, காங்கிரஸ் கட்சி 717 கோடியே 69 லட்ச ரூபாய், பா.ஜ.க., 343 கோடியே 8 லட்சம், பகுஜன் சமாஜ் கட்சி 251 கோடியே 76 லட்ச ரூபாய் வருமானம் ஈட்டியுள்ளன.

(4 ஆம் பக்கம்)

## பார்வதியம்மாள் முடிவெய்தினார்: கழகம் இரங்கல் ஊர்வலம்




ஈழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் தாயார் பார்வதியம்மாள் (81) கடந்த 20 ஆம் தேதி காலை 6.10 மணியளவில் வல்வெட்டித் துறையில் உள்ள மருத்துவமனையில் முடிவெய்தினார். செய்தியறிந்த தமிழர்கள் உலகம் முழுதும் இரங்கல் ஊர்வலங்களையும் நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகின்றனர். பார்வதியம்மாள் கடந்த சில வருடங்களாகவே உடல்நலமின்றி இருந்து வந்தார். பார்வதி அம்மாளின் இறுதி ஊர்வலம் வல்வெட்டித் துறையில் செவ்வாய் கிழமை நிகழ்ந்தது.

விடுதலைப் போராட்டத்தைத் தொடங்கிய தமிழ் ஈழத் தேசியத் தலைவர் பிரபாகரன், இளம் வயதிலேயே குடும்பத்தை விட்டு வெளியேறி விடுதலைப் போராட்டத்தில் தலைவராகிவிட்டார். பார்வதியம்மாளுக்கு மனோகரன் என்ற மற்றொரு மகனும் இரண்டு மகளும் உள்ளனர். ஒரு மகள் கனடாவிலும், மற்றொரு மகள் சென்னையிலும் குடும்பத்தினருடன் உள்ளனர். மகன் மனோகரன் டென்மார்க்கில் உள்ளார். பார்வதியம்மாளின் கணவர் வேலுப்பிள்ளை கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அகதிகள் முகாமில் மரணத்தைத் தழுவினார். மலேசியாவில் உறவினர் வீட்டில் தங்கியிருந்த பார்வதியம்மாள், சென்னையில் சிகிச்சைப் பெற வந்தபோது இந்திய ஆட்சியாளர்கள் அவரை விமானத்திலிருந்து இறங்கவே அனுமதி மறுத்து திருப்பி அனுப்பினர். மலேசியாதிரும்பிச் சென்ற அவர், சில காலம் கழித்து இலங்கை திரும்பினார். பார்வதியம்மாள் சிகிச்சை பெற அனுமதிக்கலாம் என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதற்கு கடும் நிபந்தனைகளை மத்திய மாநில அரசுகள் விதித்த நிலையில், தன்மானத்துடன் பார்வதியம்மாள் தமிழகம் வர மறுத்துவிட்டார்.

பார்வதியம்மாள் முடிவெய்திய செய்தி வந்தவுடன் சென்னையில் பெரியார் திராவிடர் கழகம் அன்று மாலையே இரங்கல் ஊர்வலத்துக்கு ஏற்பாடு செய்தது. ஊர்வலத்துக்கு காவல்துறை அனுமதி வழங்கவில்லை. என்றாலும் திட்டமிட்டபடி ஊர்வலம் நடைபெற்றது. கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில், எம்.ஜி.ஆர். நகர் மார்க்கெட் அருகிலிருந்து ஊர்வலம் புறப்பட்டது. ஊர்வலத்தில் 200-க்கும் மேற்பட்ட தோழர்களும் தோழியர்களும் பங்கேற்றனர். ஊர்வலம் இந்திரா திரையரங்கு விஜயா திரையரங்கு, காசி திரையரங்கு, உதயம் திரையரங்கு சாலைகள் வழியாக அண்ணா நெடுஞ்சாலையை கடந்து கலைஞர் கருணாநிதி சாலை வழியாக மீண்டும் ஊர்வலம் புறப்பட்ட பகுதிக்கு வந்து சேர்ந்தது. ஒரு மணி நேரம் நடந்த இந்த ஊர்வலத்தில் அன்னையாருக்கு வீரவணக்கம் செலுத்தும் ஒலி முழக்கங்களை தோழர்கள் உணர்ச்சியுடன் எழுப்பி வந்தனர். இறுதியில் அன்னையார் படத்துக்கு மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டது. இரங்கல் நிகழ்வில் விடுதலை சிறுத்தைகள், மாநில கலை இலக்கிய பேரவை துணை செயலாளர் செ.கி. வேந்தன், ம.தி.மு.க. பகுதி செயலாளர் வை.கோ.ரவி, கலைஞர் கருணாநிதி நகர் ம.தி.மு.க. வட்ட செயலாளர் இலை. சங்கர், 121வது வட்ட மாமன்ற உறுப்பினர் இரா. வெங்கடேசன், தி.மு.க. தொழிற்சங்கத் தலைவர் முத்து மாரியப்பன், பெரியார் திராவிடர் கழகத் தோழர் அன்பு தனசேகர், கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் இரங்கல் உரையாற்றினர். காஞ்சி மக்கள் மன்றத்தைச் சார்ந்த தோழர்கள் மகேசு, ஜெர்சி, மகாலட்சுமி மற்றும் பெரியார் திராவிடர் கழக செயல்வீரர்கள் அண்ணாமலை, ஜெயசீலன், தஞ்சை தமிழன், பி. பல்லரசு, தபசி குமரன், இரா. உமாபதி, எ. கேசவன், செ. அன்பு, சுகுமாறன் உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டனர். தலைநகரில் நடந்த முதல் இரங்கல் ஊர்வலமாக இது அமைந்தது.

## தலையங்கம்

### பார்ப்பன பன்னாட்டு கொள்ளை

*பார்ப்பன - பன்னாட்டு கூட்டுக் கொள்ளைக் காடாக இந்தியா மாறி விட்டது. இங்கே நடப்பது மக்களாட்சியல்ல; உண்மையான மக்களாட்சி தத்துவத்தை பார்ப்பனியத்தால் செரிமானம் செய்து கொள்ள முடியாது. எனவே மக்கள் நாயகத்தை பார்ப்பன மயமாக்குவதற்கு அவர்கள் புதிய புதிய வியூகங்களை வகுத்து செயல்படுத்துகிறார்கள்.*

*பிரதமர் மன்மோகன் சிங்கின் பொருளாதாரக் கொள்கை பார்ப்பன நாயகத்துக்கு வலிமையான அடித் தளமாகிவிட்டது. அண்மையில் ஊடகங்களின் ஆசிரி யர்கள் குழு ஒன்றுக்கு பிரதமர் பேட்டி அளித்துள்ளார்.*

*ஊடகங்கள் - பார்ப்பன பன்னாட்டு பெரும் நிறுவனங்களுக்கு ஆதரவாக செயல்படுகின்றன என்று கூறுவதைவிட, அவர்களாலே நடத்தப்படுகின்றன என்று கூறுவதுதான் சரி. எனவே, பிரதமர் மன்மோகன் சிங்கிடம் அவர்கள் முன் வைத்த கேள்விகளும், பார்ப்பன பன்னாட்டு நலன் சார்ந்தவைகளாகவே இருந்தனவே தவிர, மக்களை முன்னிறுத்தவில்லை.*

*ஸ்பெக்டம் - அலைக்கற்றை ஊழலில் பெரும் பணத்தை சுருட்டியவர்கள் இந்த பன்னாட்டு நிறுவனங்கள்தான். அந்த நிறுவனங்கள் மீது சட்டம் பாயவில்லை. மாறாக இந்த கொள்ளையை மூடி மறைக்க ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் ஏல முறையைப் பின்பற்றாமல், 'முதலில் வந்தவர்களுக்கு முதல் உரிமை' என்ற கொள்கையைப் பின்பற்றியதையே தவறு என்று இந்த பார்ப்பன - பன்னாட்டு ஊடகங்கள் கருத்துரு வாக்கம் செய்கின்றன. அரசாங்கம் ஏல முறையில் ஒதுக்கீடு செய்யவில்லை. என்பது உண்மைதான். ஆனால், ஒதுக்கீட்டு உரிமையைப் பெற்ற பன்னாட்டு நிறுவனங்கள், தங்கள் ஒதுக்கீட்டு உரிமையை சந்தையில் ஏலத்துக்கு விற்று, பணத்தை பல மடங்கு வாரி சுருட்டிக் கொண்டு விட்டார்கள். ஒதுக்கீடு உரிமையை மட்டுமல்ல, அமைச்சர் பதவிகளையும்கூட இந்த பன்னாட்டுக் கும்பலே 'ஏலம்' எடுத்தது என்பதையே நீராராடியா உரையாடல்களிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது.*

*பெரும் பணக்காரர்கள், தொழில் நிறுவனங்கள் சட்டவிரோதமாக சுவிஸ் உள்ளிட்ட வெளிநாட்டு வங்கிகளில் குவித்து வைத்துள்ள பணத்தை வெளியே கொண்டு வருவது பற்றியோ, அவர்களின் பெயர்ப் பட்டியலை வெளியிட வேண்டுமென்றோ, இந்த ஊடக பார்ப்பனியவாதிகள் பிரதமரிடம் கேள்வி கேட்க வில்லை. இப்படி வெளிநாடுகளில் முதலீடு செய்துள்ள தால் இந்தியாவுக்கு நாள் ஒன்றுக்கு ஏற்படும் இழப்பு ரூ.240 கோடி என்று ஒரு சர்வதேச பொருளாதார ஆய்வு நிறுவனம்* (Global Financial Integrity) *கூறி யுள்ளது.*

*பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு விட்டனர். பன்னாட்டு நிறுவனங் களுக்கு 70 லட்சம் கோடி வரை வரி தள்ளுபடிகளையும் வரிச் சலுகைகளையும் வாரி வழங்குகிறார்கள். அப்பாவி மக்களையும், மனித உரிமைப் போராளிகளை யும், அகதிகளாக அடைக்கலம் தேடி வந்தவர்களையும் அடக்கி ஒடுக்கும் சட்டங்களைப் போட்டுக் கொண்டு அதே நேரத்தில் பன்னாட்டு நிறுவனங்கள் கொள்ளை யடிக்க கதவு திறந்துவிடும் ஆட்சிதான் இங்கே நடக்கிறது. பட்டினியால் பாதிக்கப்படும் 84 நாடுகளில் 67வது இடத்தில் நிற்கிறது இந்தியா.* (Global Hunger Index) *கனிம வளங்கள் சுரண்டப்படுகின்றன. சுற்றுச் சூழல் சூறையாடப்படுகிறது. சில்லறை விற்பனை யிலும் பன்னாட்டு நிறுவனங்கள் நுழைந்து விட்டன. பங்குதாரர்கள் என்ற போர்வையோடு நுழைந்து கொண்டிருந்த பன்னாட்டு நிறுவனங்கள், நேரடியாகவே 51 சதவீதம் தொழில் முதலீடுகளை செய்ய மன்மோகன் சிங் முடிவெடுத்துவிட்டார்.*

*இதற்கு மாநில அரசுகளிடம் கண்துடைப்புக்காக கருத்து கேட்கிறது மன்மோகன் சிங் ஆட்சி. தி.மு.க. ஆட்சி இதற்கு சம்மதித்துவிட்டது. ஆக, இந்தியாவின் சுதந்திரத்தில் 51 சதவீதம் அன்னியர்களிடம் தாரை வார்க்க திட்டம் தயாராகி விட்டது. பன்னாட்டு நிறுவனங்களோடு பார்ப்பன மேலாதிக்கம் மேலும் கொழுக்கிறது. தமிழர்கள் பார்ப்பன-இந்திய அடிமை யாக்கப்படுகிறார்கள்!*

*இந்த பன்னாட்டு அடிமை தேசத்தில் தமிழன் வாழும் நிலை தொடரத்தான் வேண்டுமா என்ற கேள்வி எழும் நேரம் வந்து விட்டது!*

# ஊடகங்கள் ஊதி விடும் கிரிக்கெட்

***உலக கோப்பை கிரிக்கெட் போட்டி தொடங்கிவிட்டது. பார்ப்பனர்களும் ஊடகங் களும் 'கிரிக்கெட்' விளையாட்டினை விளையாட்டு என்ற எல்லையைத் தாண்டி சந்தைப் பொருளாதாரமாக்கி அரசியலாக்கி விட்டனர். ஏனைய விளையாட்டுகளின் சிறப்புகள் இருட்டடிக்கப்பட்டுவிட்டன. பார்ப்பனர்கள் கிரிக்கெட்டை உயர்த்திப் பிடிப்பது ஏன்? 2003 ஆம் ஆண்டு உலக கிரிக்கெட் போட்டியின்போது 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வெளியிட்ட கட்டுரை இது. இன்றைய சூழ்நிலைக்கும் பொருந்தி வருவதால் மீண்டும் வெளியிடுகிறோம்.***

பிரிட்டிஷ் பிரபுக்கள் குளிர் காய்வதற்கான நாள் முழுதும் சூரிய ஒளியில் நிற்பதற்குக் கண்டுபிடித்த விளையாட்டுதான் கிரிக்கெட். எனவேதான் அய்ந்து நாள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அதைத் தொடர்ந்து பார்சிகளும், இதில் ஆர்வம் காட்டத் தொடங்கினர். பிரிட்டிஷாருடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள இப்படி ஒரு நல்ல வாய்ப்பு இருப்பதைத் தாமதமாக உணர்ந்த பார்ப்பனர்கள், அதை பிடித்துக் கொண்டு விட்டனர். ஆஹிஷ் நந்தி என்பவர், கிரிக்கெட்டையும், இந்து மதத்தையும் ஒப்பிட்டு, இது இந்திய விளையாட்டு என்று எழுதியிருக்கிறார்.

பார்ப்பனர்களை கிரிக்கெட் இழுத்ததற்கு மற்றொரு காரணம் - ஹாக்கி, கால்பந்து, வாலிபால், சடுகுடு போல அரைக்கால் சட்டைப் போட்டுக் கொண்டு விளையாட வேண்டிய அவசியமில்லை. முழுக்கால் சட்டைப் போட்டுக் கொண்டே கிரிக்கெட் விளையாடலாம்.

இதை எல்லாம் விட மிக முக்கியக் காரணம் - மற்ற விளையாட்டுகளைப் போல், ஒருவரை ஒருவர் தொட்டுக் கொண்டு விளையாட வேண்டிய அவசியம் இதில் இல்லை. இடித்துத் தள்ளவோ ஒருவர் மீது ஒருவர் உராசிக் கொள்ளவோ தேவை இல்லை. எனவே, தீண்டாமைக் கொள்கையைக் கைவிடாமல் விளையாட லாம். பந்தின் லாவகத்தைக் கணக்கிட்டு மட்டையை சுழற்ற வேண்டிய மூளைக்கான வேலைதான் தேவை. இது பார்ப்பனர்களுக்கு மிகவும் எளிது. அதோடு மற்ற விளையாட்டுகளைப்போல் பத்தோடு பதினொன்றாக இல்லாமல் தன்னை மய்யப்படுத்திக் கொள்ள முடியும்.

கவாஸ்கர் போன்றவர்கள் இப்படித்தான் தங்களை சாதனையாளர்களாகக் காட்டிக் கொண்டனர். இவர்களின் தனிப்பட்ட சாதனையாக்கிக் கொண்டார் களே தவிர, அணியின் சாதனையாக மாற்றவில்லை. வேகப் பந்து வீச்சாளராக பார்ப்பனர்கள் தங்களது திறமையைக் காட்டவில்லை. காரணம் - அதற்கு அதிகமாக வியர்வை சிந்த வேண்டும். இதனால் தான் பார்ப்பனர்கள் பலர் பேட்ஸ்மேன்களாக பரிணமித்த அளவுக்கு, பவுலர்களாக அதிலும் வேகப்பந்து வீச்சாளர்களாக திறமையைக் காட்டவில்லை.

1950 முதல் 1990 கள் வரை நடந்த போட்டிகளில் (டெஸ்ட் மேட்ச்) சராசரியாக 6 பார்ப்பனர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். சில நேரங்களில் இந்த எண்ணிக்கை 9 ஆகவும் இருந்திருக்கிறது. 11 பேர் கொண்ட அணியில் பார்ப்பனரல்லாதவர்களுக்கு இரண்டு இடங்கள் மட்டுமே தரப்பட்டதும் உண்டு.

இந்திய டெஸ்ட் கிரிக்கெட் என்பது 1970களின் இறுதி வரை 'ஸ்பின் பவுல'ர்களின் ஆதிக்கமாகவே இருந்தது. இந்தப் பார்ப்பனக் கோட்டையைத் தகர்த்தவர் - கபில்தேவ் என்ற பார்ப்பனரல்லாதவர்தான். அவர்தான் வேகப்பந்து வீச்சாளராக விளையாடி - உலகத் தரத்தில், ஒரு விளையாட்டாளரானார். கபிலின் வருகையும், ஒரு நாள் கிரிக்கெட் போட்டியும் தான் இந்திய கிரிக்கெட்டின் பார்ப்பன முகத்தை மாற்றியாக வேண்டிய நெருக்கடியை உருவாக்கின.

பிறகு ஸ்ரீநாத், வெங்கடேஷ் பிரசாத், அகர்கர் போன்ற பார்ப்பனர்கள் கூட வேகப்பந்து வீச்சில் திறமை காட்டத் தொடங்கியதற்குக் காரணம், கபில்தேவ் வருகைதான்.

அய்ந்து நாள் டெஸ்ட் போட்டிகள் அதிகமாக விளையாடப்பட்டு வந்த காலத்தில் கவாஸ்கர் போன்ற பார்ப்பனர்கள் ஒரு சதம் அடிப்பதற்கு 2, 3 நாட்களைக் கூட எடுத்துக் கொள்வார்கள். எத்தனை ஓட்டங்கள் என்பதைவிட எவ்வளவு நேரம் களத்தில் நிலைத்து நின்றார் என்பதுதான் பெருமையாகக் கருதப்பட்டது. இப்படி நிலைத்து நிற்பவர்கள், ஆபத்தான கட்டத்தில் 'டிரா' என்ற கவசத்தைப் பயன்படுத்தி தோல்வியி லிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும். கவாஸ்கர், கெய்க்வாட், யஷ்பால், சர்மா போன்ற பார்ப்பனர்கள் இந்த தந்திரத்தைத்தான் பல நேரங்களில் கடை பிடித்துள்ளனர்.

இந்திய கேப்டன் சவுரவ் கங்குலி, ஒரு வங்காளப் பார்ப்பனர். சுறுசுறுப்பு இல்லாதவர் என்றும், பலமுறை கோட்டை விட்டவர் என்றும் ரசிகர்களால் விமர்சிக்கப் படுபவர். கிரிக்கெட் வல்லுனர்கள், அவரது விளையாட்டைக் கடுமையாகக் குறை கூறுகிறார்கள். ஆனாலும் அவருக்கு வாய்ப்புகள் தரப்படுகிறது. வேகப்பந்து வீச்சாளராக ஸ்ரீநாத் எனும் பார்ப்பனர் - ஒரு சைவ உணவாளர். ஆச்சாரப்படி அசைவம் சாப்பிட மாட்டார். ஆனாலும் பந்து வீச்சுத் திறனை அதிகரிக்க மாமிசம் சாப்பிட வேண்டும் என்று பயிற்சியாளர் அறிவுறுத்திய பிறகு அசைவமாகி விட்டார்.

5 நாள் போட்டிக்கு தான் பார்ப்பனர்கள் சரிப்படு வார்கள். ஒரு நாள் போட்டிக்கான சுறுசுறுப்பான உடல்வாகு அவர்களுக்கு இல்லை. இப்போது உலகக் கோப்பைக்கான இந்திய அணியில் சவுரவ் கங்குலி, ராகுல் டிராவிட், சச்சின் டெண்டுல்கர், ஸ்ரீநாத், கும்ப்ளே, அகர்கர் ஆகிய ஆறு பார்ப்பனர்கள் இடம் பிடித் துள்ளனர்.

இந்திய அணியில் தலித்துகளுக்கு எப்போதுமே இடம் கிடையாது. வினேன் காம்ப்ளி என்ற மீனவர் சமுதாயத்தைச் சார்ந்த ஒருவர் மட்டும் இருக்கிறார். இது தவிர, பல்வங்க் பலூ என்ற தலித் வீரரை மட்டும் இந்திய அணிக்கு தேர்ந்தெடுத்தனர். அவரையும்கூட, களத்தில் இறக்கிவிடாமல், அரங்கத்தில் உட்கார வைத்தே திருப்பி அனுப்பி விட்டார்கள்.

கேரளாவிலிருந்து வந்த டினு யோகானன், தடகள வீரருக்கு உரிய உடல்கட்டு கொண்டவர். இவரது தந்தை ஆசிய விளையாட்டுப் போட்டியில் பதக்கம் வென்றவர். நல்ல விளையாட்டுக் குடும்பத்தில் வந்த இவரை, மும்பை பார்ப்பனர் அகர்கருக்காக, பலிகடாவாக்கிவிட்டது. இந்திய கிரிக்கெட் அணி என்று கேரள கிரிக்கெட் ரசிகர்கள் கொதித்துப் போயிருக்கிறார்கள்.

இந்திய அணியில் தமிழக கிரிக்கெட் வீரர்களுக்கு உரிய இடம் தருவதில்லை என்ற குற்றச்சாட்டும் உண்டு. அதே நேரத்தில் தமிழ்நாட்டில் அய்யர் - அய்யங்கார் பிரச்னை பெரிதாக இருக்கிறதாம். எஸ்.வி.டி. சாரி, வெங்கட்ராகவன், ஸ்ரீகாந்த், ராமன், சடகோபன் ரமேஷ் என்று அய்யங்கார்கள் தான் தமிழகத்தில் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். சிவராமகிருஷ்ணன், வி.வி.குமார் என்ற இருவர் மட்டும்தான் அய்யர்கள் என்கிறது சேப்பாக்க கிரிக்கெட் வட்டாரம்.

*(2003 ஆம் ஆண்டு வெளிவந்த இந்த கட்டுரை யில் கூறப்பட்ட கருத்துகளில் இப்போது பெரிய மாற்றம் எதுவும் இல்லை. அதே நிலைதான் நீடிக்கிறது.)*

---

## குழந்தைகள் உரிமை: ம.பி. மாநிலத்தில் நடக்கும் பார்ப்பன கூத்து

ம.பி. மாநில அரசு குழந்தைகள் உரிமைகளுக்கான குழு ஒன்றை அமைத்துள்ளது. இந்தக் குழுவின் தலைவராக இருப்பவர். தலைமை பெண் நீதிபதி ஷீலா கண்ணா, ம.பி. மாநிலத்தில் 60 சதவீத குழந்தைகள் ஊட்டச் சத்து குறைந்தவர்கள். இவர்களுக்காக அரசு நிதி ஒதுக்கீடு செய்து திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய நிலையில் குழந்தைகள் உரிமைகளுக்கான குழுத் தலைவர் அதற்காக கூறியுள்ள பரிந்துரை கடும் எதிர்ப்புக்குள்ளாகியுள்ளது.

"ஒவ்வொரு குழந்தைகள் நலன் மய்யத்திலும் ஒரு பார்ப்பன சோதிடரையோ அல்லது அர்ச்சகரையோ நியமிக்க வேண்டும். குழந்தைகளின் சோதிடத்தைப் பார்த்து அந்தக் குழந்தை எதிர்காலத்தில் சிறந்தவர்களாக வரக் கூடிய வாய்ப்புண்டா என்று சோதிடத்தின் அடிப்படையில் அந்தப் பார்ப்பனர் மதிப்பிட ண்டும். அப்படி சிறந்தவர்களாக வருவார்கள் என்று பார்ப்பனர் பரிந்துரைக்கும் குழந்தைக்கு மட்டும் அரசு உரிய சிகிச்சை வழங்கி உதவிட வேண்டும். மற்ற குழந்தைகள் பற்றி கவலைப்படத் தேவையில்லை" என்று கூறியிருக்கிறார். இதற்கு சமுக சேவை அமைப்புகள், மனித உரிமை அமைப்புகளிடமிருந்து கடும் எதிர்ப்புகள் எழுந்துள்ளன. குழந்தைகள் உரிமைகளுக்கான தேசிய ஆணையத் தலைவர் சாந்தா சின்கா, குழந்தைகள் உரிமைக்கான மய்யத்தின் தலைவர் பார்த்தி அலி ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

எதிர்ப்புக்குப் பிறகு நீதிபதி, தாம் அப்படி ஏதும் எழுத்து வடிவில் தெரிவிக்கவில்லை என்று மறுத்துள்ளார். குழந்தைகள் உரிமைகள் தொடர்பாக நடந்த விவாதத்தின் போது நீதிபதி ஷீலா கண்ணா, இக்கருத்தை முன் வைத்துள்ளார் என்று குழந்தைகளுக்கான தேசிய மனித உரிமை ஆணையம் கூறியுள்ளது. நாட்டின் தலைமை நீதிபதிகளாக இத்தகைய சாதிவெறி மூடநம்பிக்கையுள்ள பார்ப்பனர்கள் இருப்பது வெட்கக் கேடு அல்லவா ? இத்தகைய நீதிபதிகளிடமிருந்து கிடைக்கும் தீர்ப்புகள் எத்தகையதாக இருக்கும் ?

## தேர்தல் “வேண்டுதல்கள்” வரம் கேட்கும் தலைவர்கள்

ஆட்சியில் காங்கிரஸ் பங்கு பெற வேண்டும், தங்களுக்கு சீட் கிடைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கையை வலியுறுத்தி, புனேயில் உள்ள ஷீரடி சாய்பாபா கோவிலில், அகில இந்திய காங்கிரஸ் உறுப்பினர் கார்த்தி சிதம்பரம், விஸ்வநாதன் எம்.பி. உள்ளிட்ட 20 பேர் சிறப்பு பூஜை நடத்தினர். சீட் வரம் வேண்டி திருப்பதியில் தனது குடும்பத்தினருடன் அருள் அன்பரசு எம்.எல்.ஏ. மொட்டை அடித்து வழிபட்டார்.

ஆட்சியை பிடிக்க வேண்டும், மீண்டும் மூன்றாவது முறை தமிழக முதல்வராக பதவி ஏற்க வேண்டும் என்பதற்காக திருச்சி திருவரங்கம் ரங்கநாதசாமி கோயிலில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா சாமி கும்பிட்டார். தஞ்சாவூரில் உள்ள பிரசித்திப் பெற்ற அம்மன் கோவிலில் ஜெயலலிதாவின் தோழி சசிகலா சாமி கும்பிட்டார்.

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் சமீபத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள ஆண்டாள் கோவிலில் சாமி கும்பிட்டார். சென்னை காளிகாம்பாள் கோவிலில், குடும்பத்தினருடன் யாகம் நடத்தினார்.

தமிழக காங்கிரஸ் கட்சியிலுள்ள பிரமுகர்களும் தங்களுக்கு சீட் கிடைக்க வேண்டும். ஆட்சியில் காங்கிரஸ் பங்கு பெற வேண்டும் உள்ளிட்ட வேண்டுதலை வலியுறுத்தி, சிறப்பு பூஜை நடத்தும் பணிகளை துவக்கியுள்ளனர்.

கடந்த சட்டசபை தேர்தலில் முன்னாள் மத்திய அமைச்சர் ஒருவர் தேர்தலில் வெற்றி பெறக் கூடாது என்பதற்காக எதிர் அணியினர் கோவிலில் வழிபட்டனர். மறைந்த காங்கிரஸ் எம்.எல்.ஏ., போளூர் வரதன் செங்கம் தொகுதி பக்கமே வரவில்லை என்ற குற்றச்சாட்டை தெரிவித்து, எதிர் அணியினர் சாமி கும்பிட்டு கிடா வெட்டி கறி சோறு சாப்பிட்டார்களாம்.

தற்போது அகில இந்திய காங்கிரஸ் உறுப்பினர் கார்த்தி சிதம்பரம், கடந்த 15-ம் தேதி சென்னையிலிருந்து விமானம் மூலம் புனேவுக்கு சென்றார். அவருடன் காஞ்சிபுரம் எம்.பி. விஸ்வநாதன், முன்னாள் எம்.பி. வள்ளல் பெருமான், அகில இந்திய காங்கிரஸ் உறுப்பினர் சிரஞ்சீவி, முன்னாள் இளைஞர் காங்கிரஸ் தலைவர் மயூரா ஜெயக்குமார், திருப்பூர் துணை மேயர் செந்தில் உட்பட 20 பேர் சென்றனர். புனேயில் இருந்து கார் மூலம் சீரடி சாய்பாபா கோவிலுக்குச் சென்றனர்.

மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் அணியை சேர்ந்த அனைவருக்கும் தேர்தலில் போட்டியிட சீட் கிடைக்க வேண்டும். காங்கிரஸ் கூட்டணி ஆட்சி அமைய வேண்டும். காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் அமைச்சராக வேண்டும் என்ற வேண்டுதலுடன் சிறப்பு பூஜையை நடத்தினர். இந்த சிறப்பு பூஜை கார்த்தி சிதம்பரம் தலைமையில் நடந்தது.

அதேபோல் சோளிங்கர் தொகுதி எம்.எல்.ஏ., அருள் அன்பரசு தனது மனைவி, மகள், இரு மகன்களுடன் திருப்பதிக்கு சென்றார். காங்கிரஸ் தலைமையில் கூட்டணி ஆட்சி அமைய வேண்டும். படித்த இளைஞர்களுக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்க வேண்டும்.

தனக்கும் தொகுதி கிடைப்பதற்கு எந்த இடையூறும் இருக்க கூடாது, தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி பிள்ளை குட்டிகளுடன் சேர்த்து அருள் அன்பரசு மொட்டை அடித்துள்ளார்.

சென்னை அண்ணாநகரை சேர்ந்த முன்னாள் இளைஞர் காங்கிரஸ் தலைவர் சி.டி. மெய்யப்பன் கடந்த மூன்று முறை தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கிடைக்காமல் ஏமாற்றம் அடைந்துள்ளார்.

இந்த முறை ஏமாறக் கூடாது என்றும், தனக்கு தொகுதி வரம் கேட்டு திருச்செந்தூர் கோவிலில் சாமி கும்பிட்டு வந்துள்ளார். சீட் வரம் வேண்டி காங்கிரசார் டில்லி செல்வதற்கு முன், கோவில் குளங்களையும் சுற்றி பரபரப்பை ஏற்படுத்தி வருகின்றனர்.

‘தினமலர்’ பார்ப்பன நாளேடே இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

# நாடாளுமன்ற ஒப்புதல் பெறாமலே ‘தாரை’ வார்க்கப்பட்ட கச்சத் தீவு

*(தகவல் தொழில்நுட்பத் துறையினர் தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலைக் கண்டித்து 19.2.2011 அன்று சென்னை சோழிங்கநல்லூரில் நடத்திய உண்ணாநிலைப் போராட்டத்தில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரையின் விரிவாக்கம்.)*

தமிழர்களுக்கு சொந்தமான கச்சத் தீவு இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்டது. தமிழரின் இறையாண்மைக்கு எதிரான இந்தியப் பார்ப்பன ஆட்சியின் தேச விரோத நடவடிக்கையாகும். மீன் வளம் நிறைந்த கச்சத் தீவு பறி போனதினால் தமிழர்களின் மீன் வள உரிமை பறி போய் மீனவர்களின் குருதியும், சிங்கள கப்பல் படையினால் கடலில் ஓடுகிறது. தமிழரின் இறையாண்மையில் தலையிட்டு தமிழர்களுக்கு துரோகம் இழைத்த காங்கிரசுக்கு தேச பக்தியை போற்றும் தார்மீக உரிமை கிடையாது.

பார்ப்பன ஏடான ‘இந்து’ தமிழ்நாட்டில் சிங்கள அரசின் தூதுவராக செயல்பட்டுக் கொண்டு, ஈழ தமிழர்களுக்கும், அவர்களின் நியாயமான உரிமைப் போராட்டத்துக்கும் எதிராக நஞ்சைக் கக்கி வருகிறது. இந்து நாளேடு “கச்சத் தீவு பிரச்னை முடிந்து விட்ட ஒன்று” என்ற தலைப்பில் தலையங்கம் ஒன்றை தீட்டியது.

“இந்தியாவும், இலங்கையும் கச்சத் தீவு பிரச்சினை முடிந்துவிட்ட பிரச்சினையாகவே கருதினாலும் தமிழ்நாட்டில் உள்ள மாநில கட்சிகள் கச்சத் தீவை மீட்க வேண்டும் என்று அவ்வப்போது வலியுறுத்தி வருகிறார்கள். தமிழக மீனவர்கள் தங்களது பிரச்சினைக்கும் கச்சத் தீவுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்கிறார்கள். அவர்கள், சிறீலங்கா கடற்பரப்புக்குள் தங்கு தடையின்றி மீன் பிடிப்பதற்கு உரிமை வேண்டும் என்று கேட்கிறார்கள்.

இறையாண்மையுள்ள ஒரு தேசமான இலங்கை, இந்த உரிமையை வழங்க வேண்டும் என்ற கேள்விக்கே இடமில்லை. இந்திய அரசுக்கும் அதைக் கேட்கும் உரிமை இல்லை.” (‘இந்து’ ஜூன் 22, 2009) என்று ஆணவத்தோடு பார்ப்பனத் திமிரோடு பச்சையாக தமிழக மீனவர்களுக்கு எதிராக எழுதியது ‘இந்து’ நாளேடு.

தமிழகத்தின் ஆட்சி எல்லைக்கு உட்பட்ட ஒரு பகுதியை இலங்கைக்கு ‘தாரை’ வார்க்கப்பட்டதைக் கண்டிக்க முன் வராத ‘இந்து’ பார்ப்பன ஏடு, இலங்கையின் இறையாண்மையாகிவிட்டதாகக் கூறி கச்சத் தீவை தமிழர்கள் கேட்க என்ன உரிமை இருக்கிறது என்று எழுதுகிறது.

இவர்களுக்கு அவர்கள் முன் வைக்கும் சட்ட வாதங்களின் அடிப்படையிலேயே நாம் பதில் சொல்ல முடியும்.

இலங்கைக்கு கச்சத் தீவு வழங்கப்பட்டதற்கு இதுவரை நாடாளுமன்றத்தின் ஒப்புதலே பெறப்படவில்லை. நாடாளுமன்றத்தில் ஒப்புதல் பெற்றதால் தான். கச்சத் தீவு வழங்கப்பட்டது, சட்டப்படி செல்லும். இதன் வரலாற்றை நாம் பின்னோக்கிப் பார்க்க வேண்டும்.

இந்திய தேசிய காங்கிரஸ் ஆட்சி நேரு பிரதமராக இருந்த காலத்தில் இருந்தே கச்சத் தீவு பிரச்னையில் அலட்சியம் காட்டி வந்திருக்கிறது.

- **1955** ஆம் ஆண்டு கச்சத் தீவில் இலங்கைக் கப்பல் படை போர்ப் பயிற்சிகளை நடத்தியது. இந்தியா ‘கண்டனம்’ தெரிவித்ததோடு நிறுத்திக் கொண்டது. தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.
- இந்தியாவிடமிருந்து கடுமையான எதிர்ப்புகள் இல்லை என்பதைத் தெரிந்து கொண்ட இலங்கை அரசு மீண்டும் **1956** இல் கடற்படை பயிற்சியைத் தொடர்ந்தது. “இரு நாட்டுத் தூதர்களும் பேசி முடிவு காணும் வரை பயிற்சியை ஒத்திப் போடுமாறு” இந்தியா வேண்டுகோள் விடுத்தது. அப்போது கச்சத் தீவு தமிழ்நாட்டுக்கு உரியது என்று, இந்திய அரசு கூறவில்லை. “பயிற்சியை ஒத்தி வைக்கிறோம்; ஆனால் கச்சத் தீவு எங்களுடையது” என்று, இலங்கை அரசு கூறியது.
- **1956** இல் நாடாளுமன்றத்தில் திருச்சி நாடாளுமன்ற உறுப்பினர், பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்த அனந்தன் நம்பியார், இப்பிரச்னையை எழுப்பினார். அப்போது பிரதமர் நேரு, “இந்த சின்னஞ்சிறு தீவுக்காக இரு நாடுகளும் போராட வேண்டும் என்ற கேள்விக்கே இடமில்லை. கச்சத் தீவுக்கு இலங்கை உரிமை கோருவதால் இந்தியாவின் தன்மானம் ஒன்றும் இழந்து போய்விடவில்லை. இலங்கை நமது அண்டை நாடு; நாம் அந்நாட்டுடன் உறவுடன் இருக்கவே விரும்புகிறோம்” என்றே அலட்சியமாக பதில் கூறினார்.
- மீண்டும் **1968** இல் கச்சத் தீவுக்கு இலங்கை உரிமை கோரியது. அப்போது நாடாளுமன்றத்திலும் இப்பிரச்சினை எழுப்பப்பட்டது. பிரதமராக இருந்த இந்திரா காந்தி, “இராமநாதபுரம் சேதுபதி மன்னர் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியாக கச்சத் தீவு இருந்திருக்கிறதா என்பது பற்றி விவரம் கேட்டுள்ளோம்” என்று பதில் கூறினார்.
- இந்தியாவின் வெளியுறவுத் துறை துணை அமைச்சராக இருந்த பி.ஆர். பகத், “கச்சத் தீவு இந்தியா-இலங்கை இரு நாடுகளுக்கும் உரியது அல்ல” என்று பச்சையாக பொய் பேசினார். நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் இந்த பதிலைக் கேட்டு வெட்கம்; வெட்கம் என்று குரல் எழுப்பினர்.
- கச்சத் தீவு பிரச்சினையில் தமிழர்களின் உரிமைகளை அலட்சியப்படுத்திய காங்கிரஸ் ஆட்சி, **1974** இல் இலங்கைக்கு தாரை வார்க்க முன் வந்தது. இதற்கான அரசியல் பின்னணியையும் நாம் கருதிப் பார்க்க வேண்டும்.
- **1971** ஆம் ஆண்டில் பாகிஸ்தானுக்கு எதிராக இந்திய ராணுவத்தை அனுப்பி, வங்க தேசத்தை தனியாகப் பிரிக்க, பிரதமர் இந்திரா பாகிஸ்தானில் தலையிட்டார். அதை விரும்பாத அமெரிக்கா இந்தியாவை அச்சுறுத்த ‘எண்டர்பிரைஸ்’ என்ற அணு ஆயுதம் தாங்கிய கப்பலை கொல்கத்தா நகரைத் தாக்கும் திட்டத்தோடு இந்தியப் பெருங்கடலுக்குள் அனுப்பியது. அப்போது இந்தியாவுக்கு ஆதரவாக சோவியத் ரசியா களமிறங்கத் தயாரானது. அதனால் அமெரிக்கா பின்வாங்கியது. இந்தியப் பெருங்கடல் பரப்பை ராணுவ மோதலுக்கு பயன்படுத்தினால், பெரும் கேடுகள் உருவாகிவிடும் என்பதால் அய்.நா. தலையிட்டது. இந்தியப் பெருங்கடலில் நின்று கொண்டோ அல்லது கடலுக்கு மேல் பறந்து கொண்டோ எந்த நாடும் கடல் ஓரப் பகுதி நாடுகளை அச்சுறுத்தக் கூடாது என்று அய்.நா. தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.
- இந்தியாவுக்கு வடக்கே பாகிஸ்தான், சீனாவும் உள்ளன. கிழக்கும் மேற்கும் உள்ள கடல் பகுதிகளினால் இந்தியாவுக்கு அதிக ஆபத்துகள் இல்லை. இந்தியாவுக்கு தெற்கே உள்ள ஒரே தரைப் பகுதி இலங்கை தான். வங்க தேச விடுதலைக்குப் பிறகு பாகிஸ்தான், இலங்கையில் விமானத் தளம் ஒன்றை அமைக்க முயற்சிகளை மேற்கொண்டது. வங்க தேசப் போரின் போது இலங்கை பாகிஸ்தானுக்கு ஆதரவாகவே செயல்பட்டது. இந்த சூழ்நிலையில் இலங்கையில் பாகிஸ்தான் விமான தளம் அமைப்பதைத் தடுக்க, பிரதமராக இருந்த இந்திரா, இலங்கை பிரதமர் சிறீமாவோ, பண்டார நாயகாவிடம் சமரசம் பேசத் தொடங்கினார். “கச்சத் தீவை இலங்கைக்கு தந்து விட்டால், பாகிஸ்தான் விமான தளத்துக்கு இடம் தரமாட்டோம்” என்று சிறீமாவோ பண்டார நாயகா பேரம் பேசினார். தமிழ்நாட்டின் ஆட்சியைக் கலந்து பேசாமலே கச்சத் தீவை ஒப்படைக்க இந்திரா சம்மதித்தார். இரு பிரதமர்களும் கூடிப் பேசினர். தமிழகத்தின் கச்சத் தீவை இலங்கைக்கு ஒப்படைக்கும் ஒப்பந்தத்தில் **20.6.1974** இல் புதுடில்லியில் இந்திராவும், **28.6.1974** இல் கொழும்பில் சிறீமாவோ, பண்டார நாயகாவும் கையெழுத்திட்டனர். அந்த ஒப்பந்தம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் **(23.7.1974)** அன்றைய வெளியுறவுத் துறை அமைச்சர் சுரவன்சிங் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தார். அறிக்கை சமர்ப்பிக்க எழுந்த உடனேயே தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாஞ்சில் மனோகரன், இரா. செழியன், பி.கே.எம். மூக்கையா தேவர், எஸ்.எம். முகம்மது ஷெரீப் எதிர்ப்பு தெரிவித்து, வெளி நடப்பு செய்துவிட்டனர். அப்போது தமிழகத்தைச் சார்ந்த **38** பேர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தனர். தி.மு.க.வும், இந்திரா காங்கிரசும் கூட்டணி அமைத்து தேர்தலை சந்தித்து தமிழகத்தின் அனைத்து தொகுதிகளையும் கைப்பற்றி இருந்தன. தி.மு.க.வும், பிற கட்சிகளும் எதிர்த்த போது, காங்கிரஸ் உறுப்பினர்கள் எதிர்ப்பு எதுவும் தெரிவிக்காமல், துரோகத்துக்கு துணை நின்றனர்.

*(4 ஆம் பக்கம்)*

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# பொய் வழக்கில் கைதான தோழர்களை கொளத்தூர் மணி கோவை சிறையில் சந்தித்தார்

15.3.2011 செவ்வாய் கிழமை மாலை 6 மணிக்கு திருப்பூர் பழைய பேருந்து நிலையம் அருகிலுள்ள அரிசி கடை வீதியில், ஊத்துக்குளி அருந்ததியர் மக்கள் பாதுகாப்பு கூட்டியக்கம் சார்பாக, இரயில் தண்டவாளத்தில் கல் வைத்ததாக பொய் வழக்கில் கைது செய்யப்பட்ட தோழர்கள் காந்தி, பரமேஸ்வரன் ஆகியோர் மீது போடப்பட்டுள்ள தேசிய பாதுகாப்புச் சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியும், திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி ஒன்றியத்திற்குட்பட்ட அருந்ததியர் பகுதிகளில் காவல்துறை நடத்திய அத்துமீறலை கண்டித்தும், கண்டனப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. ஒடுக்கப்பட்ட விடுதலை முன்னணி கனல் தலைமை ஏற்றார். சமத்துவ முன்னணி பொதுச் செயலாளர் கார்க்கி, தமிழர் விடுதலை இயக்கம் ஒருங்கிணைப்பாளர் வெண்மணி, புரட்சிகர விடுதலை முன்னணி வள்ளுவராசன், ஆதித் தமிழர் விடுதலை முன்னணி மாநில அமைப்பாளர் கோவை இரவிக்குமார், மனித நேய மக்கள் கட்சி மாநில செயலாளர் கோவை செய்யது, கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர். தோழர்கள் மீது போடப்பட்ட தேசிய பாதுகாப்பு சட்டத்தை ரத்து செய்ய வேண்டும்.

அருந்ததியர் பகுதிகளில் அத்துமீறலை நடத்திய காவல்துறையினரை பணி இடை நீக்கம் செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் ஊத்துக்குளி அருந்ததியர் மக்கள் பாதுகாப்பு கூட்டியக்கம் சார்பாக, அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக, முதற்கட்டமாக இரயில் நிறுத்தப் போராட்டமும், தொடர்ந்து பல்வேறு போராட்டங்களும் நடத்தப்படும் என கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிவித்துள்ளார்.

காவல் துறையினர் அத்துமீறி நடந்து கொண்ட அருந்ததியினர் பகுதியான ஊத்துக்குளி அருகே உள்ள அனைப்பாளையம் கிராமத்திற்கு கழகத் தலைவர் 9.2.2011 அன்று காலை 9 மணிக்கு நேரடியாக சென்று, பாதிக்கப்பட்ட மக்களிடம் விசாரித்தார். உடன் திருப்பூர் மாவட்ட தலைவர் துரைசாமி, திருப்பூர் முகில்ராசு, பல்லடம் விசயன், கிளாகுளம் செந்தில் உட்பட பல தோழர்கள் சென்றனர். அன்று பிற்பகல் 2 மணிக்கு கோவை மத்திய சிறைக்குச் சென்று கைது செய்யப்பட்ட தோழர்களான காந்தி, பரமேஸ்வரன் ஆகியோரை கழகத் தலைவர் சந்தித்தார். தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் ந. பன்னீர்செல்வம், கழக வழக்கறிஞர் மதுசூதனன் ஆகியோரும் சென்றிருந்தனர்.

### மதுரை உயர்நீதிமன்றத்தில் தமிழுக்காக போராடிய வழக்கறிஞர்களுக்கு பாராட்டு விழா

12.2.2011 சனிக் கிழமை மாலை 7 மணிக்கு, மதுரை, செல்லூர் 60 அடி சாலையில், உயர்நீதிமன்றத்தில் தமிழுக்காக போராடிய வழக்கறிஞர்களுக்கு பாராட்டு விழா மற்றும் தமிழ்ப் புத்தாண்டு விழா பொதுக் கூட்டம், மதுரை மாநகர் மாவட்ட கழகம் சார்பாக நடைபெற்றது. மாவட்ட அமைப்பாளர் மு. தமிழ்பித்தன் தலைமையேற்றார். மாவட்டத் தலைவர் அ.பெரியசாமி முன்னிலை வகித்தார். மாவட்டச் செயலாளர் பி. விடுதலை சேகர் வரவேற்றுப் பேசினார். வழக்கறிஞர் பெரியார் வேந்தன், தமிழ்மொழியின் பெருமைகள் பற்றிப் பேசினார். வழக்கறிஞர் கு.ஞ. பகத்சிங் தாய்மொழியின் அவசியம் பற்றியும், நீதிமன்றத்தில் தமிழில் பேசினால்தான், வாதிகளாலும், பிரதிவாதிகளாலும், நீதிபதிகளுக்கு முழுமையாக தெளிவு படுத்த முடியும் என்பதை பற்றியும் பேசினார்.

தூத்துக்குடி பால் பிரபாகரன், பெரியார் திருக்குறள் மாநாடு நடத்தியது. பெயருக்கு முன்னால் தலைப்பெழுத்தை பெரியார் தமிழில் போடச் சென்னது, புலவர் குழந்தை, இராவண காவியம் எழுதியது, பெரியார் இயக்கம், கோவில் கருவறையில் தமிழ் மொழி வேண்டும் என போராடுவது, தாய்மொழியின் அவசியம் கருதி பெரியார் இயக்கங்கள் தாய்த் தமிழ் பள்ளிகள் நடத்துவது போன்றவற்றை எடுத்துக் கூறினார். உயர்நீதிமன்றத்தில் தமிழில் வாதாடும் உரிமைகேட்டு போராடிய வழக்கறிஞர்கள் கு.ஞ. பகத்சிங், பா. ஸ்டாலின், ராசேந்திரன், பெரியார் வேந்தன் ஆகியோருக்கு சிறப்புச் செய்து, பாராட்டி, கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். இறுதியாக தோழர் வெண்மணி நன்றி கூறினார்.

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

மார்க்சிஸ்ட் கட்சி 122 கோடியே 53 லட்ச ரூபாய், சமாஜ் வாடி கட்சி 71 கோடியே 30 லட்சம், தேசிய வாத காங்கிரஸ் 57 கோடியே 40 லட்சம், ராஷ்டிரிய ஜனதா தளம் 6 கோடியே 20 லட்ச ரூபாய் வருமானம் ஈட்டியுள்ளன.

தேசிய கட்சிகளில் மிகவும் குறைவாக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இரண்டு ஆண்டுகளிலும் சேர்த்து இரண்டு கோடியே 40 லட்ச ரூபாய் வருமானம் ஈட்டியுள்ளது. 2007-08 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2008-09 ஆம் ஆண்டில் பி.எஸ்.பி. யின் வருமானம் 161 சதவீதமும், தேசியவாத காங்கிரஸ் வருமானம் 130 சதவீதமும், காங்கிரஸ் வருமானம் 125 சதவீதமும் உயர்ந்துள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வருமானம் மட்டும், 2007-08 ஆம் ஆண்டைவிட 2008 - 09 ஆம் ஆண்டில் 6.45 சதவீதம் குறைந்துள்ளது. காங்கிரஸ் கட்சி கூப்பன்களை விற்பனை செய்ததன் மூலம் மட்டும், 598 கோடி ரூபாய் வருமானம் ஈட்டியுள்ளது.

அரசியல் கட்சிகளின் ஆண்டு வருமானம், பன்னாட்டு நிறுவனங்களுக்கு இணையாக கோடிகளை தொட்டிருப்பது பொது மக்களை ஆச்சரியப்பட வைக்கிறது.

இந்த இரு ஆண்டுகளில் பா.ஜ., 297 கோடியே 70 லட்ச ரூபாயும், பி.எஸ்.பி., 202 கோடியே 94 லட்ச ரூபாயும், காங்கிரஸ் 72 கோடியே 9 லட்ச ரூபாயும் நன்கொடையாக பெற்றுள்ளன.

பகுஜன் சமாஜ் கட்சி, ஒருவரிடமிருந்தும் 20 ஆயிரத்திற்கும் அதிகமாக நன்கொடை பெறாத நிலையிலும், அக்கட்சி பெற்ற மொத்த நன்கொடையின் மதிப்பு 202 கோடி ரூபாய்க்கும் அதிகமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2009 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி நிலவரப்படி, அதிக சொத்துக்கள் உடைய கட்சி காங்கிரஸ். இக்கட்சிக்கு, 611 கோடியே 77 லட்ச ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள் உள்ளன. இதையடுத்து, பி.எஸ்.பி., கட்சிக்கு 286 கோடியே 15 லட்ச ரூபாய் மதிப்பிலும், பா.ஜ.வுக்கு 260 கோடியே 70 லட்ச ரூபாய் மதிப்பிலும் சொத்துக்கள் உள்ளன.

அரசியல் கட்சிகளுக்கு பல்வேறு தனியார் நிறுவனங்கள், நன்கொடையாக கோடிக் கணக்கான ரூபாய் பணத்தை வாரி வழங்கி யுள்ளன.

பாரத் எலெக்டோரல் டிரஸ்ட் அதிகபட்சமாக 18 கோடி ரூபாயை கட்சிகளுக்கு நன்கொடையாக அளித்துள்ளது. இந்நிறுவனம், காங்கிரஸ் கட்சிக்கு 11 கோடி ரூபாயும், பி.ஜே.பி.க்கு 6 கோடி ரூபாயும் வழங்கியுள்ளது.

இதற்கு அடுத்தபடியாக, டாரன்ட் பவர் லிமிடெட் நிறுவனம், காங்கிரஸ், பி.ஜே.பிக்கு தலா 4 கோடியே 50 லட்ச ரூபாயும், தேசியவாத காங்கிரஸ் கட்சிக்கு 1 கோடி ரூபாயும் அளித்துள்ளது.

ஜெனரல் எலெக்டோரல் டிரஸ்ட் 7 கோடியே 76 லட்ச ரூபாயும், வீடியோகான் இன்டஸ்டிரியல் லிமிடெட் நிறுவனம் 7 கோடியே 50 லட்ச ரூபாயும், அதானி அண்டு முந்த்ரா போர்ட் அண்டு எஸ்.இ.இசட். லிமிடெட் நிறுவனம் 6 கோடி ரூபாயும் கட்சிகளுக்கு நன்கொடை வழங்கியுள்ளன.

---

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

- தி.மு.க. உறுப்பினர்கள் 22 பேர்; காங்கிரஸ் 9; இந்திய கம்யூனிஸ்ட் 4; பார்வர்டு பிளாக் 1; முஸ்லீம் லீக் 1. ஒரிசாவிலிருந்து சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட பி.கே. தேவ் மற்றும் ஜனசங்கத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட வாஜ்பாய் ஆகியோர் கூட, கச்சத் தீவு தமிழகத்துக்கே உரியது என்று பேசினர். ஆனால், காங்கிரஸ் உறுப்பினர்களோடு சேர்ந்து கொண்டு தமிழக கம்யூனிஸ்ட் உறுப்பினர்களும் எதிர்ப்புக் குரல் கொடுக்கவில்லை என்பது துயரமான வரலாறு. கம்யூனிஸ்ட் உறுப்பினர் எம். கல்யாணசுந்தரம் கச்சத்தீவு ஒப்பந்தத்தை வரவேற்பதாகக் கூறி, மீனவர் பிரச்சினையில் மட்டும் வினாவை எழுப்பினார்.
- அப்போது நாடாளுமன்றத்தில் பேசிய வெளியுறவுத் துறை அமைச்சர் சுவரன்சிங், ‘‘தற்போது இரு நாட்டு மீனவர்களும் அனுபவித்து வரும் மீன் பிடிக்கும் உரிமையும், அங்குள்ள அந்தோணியார் கோயில் விழாவுக்கு பயணம் செய்யும் உரிமையும் எதிர்காலத்தில் முழுமையாகக் காப்பாற்றப்படும் என்றும் 1921 ஆம் ஆண்டு கொழும்பு ஒப்பந்தப்படி கச்சத் தீவுக்கு மேற்கே எல்லைக்கோடு நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும் தமிழக மீனவர்கள் இலங்கை மீனவர்கள் போலவே கச்சத் தீவைச் சுற்றியும் மீன் பிடித்து வருகின்றனர். அந்த உரிமை தொடர்ந்து காப்பாற்றப்படும்’’ என்றும் உறுதி அளித்தார்.
- 1921 ஆம் ஆண்டு சென்னை மாகாணம் மற்றும் இலங்கை பிரிட்டிஷ் அதிகாரிகள் கச்சத் தீவு எல்லையை இலங்கையோடு இணைத்து ஒரு ஒப்பந்தம் நிறைவேற்றி, அதை ஒப்புதலுக்கு பிரிட்டிஷ் அரசுக்கு அனுப்பி வைத்தனர். பிரிட்டிஷ் ஆட்சி அதற்கு ஒப்புதல் வழங்கவில்லை. அன்னிய ஆட்சி என்று கூறப்பட்ட பிரிட்டிஷ் ஆட்சியே கச்சத் தீவை இலங்கைக்கு வழங்கும் முடிவை ஏற்காத போது, இந்தியாவை ஆண்ட காங்கிரஸ் ஆட்சி, இந்த துரோகத்தை இழைத்தது.
- 1974 ஆம் ஆண்டு ஒப்பந்தம் கூட தமிழக மீனவர்கள் கச்சத் தீவில் மீன் பிடிக்கும் உரிமையை வலியுறுத்தியது.

  ஒப்பந்தத்தின் விதி 5 - ‘‘இந்திய மீனவர்களும், வழிபாட்டுக்குச் செல்லும் பயணிகளும் கச்சத் தீவுக்கு இது நாள் வரை வந்து போனது போல் வந்து போகவும், கச்சத் தீவை அனுபவிப்பதற்கும் முழு உரிமை உடையவர்கள். இதற்காக சிங்கள அரசிடமிருந்து பயண ஆவணங்களோ நுழைவுக்கான அனுமதியோ பெற வேண்டியது இல்லை’’ என்று கூறியது.
- 1974 இல் வழங்கப்பட்டிருந்த இந்த உரிமை, 1976 இல் பறிக்கப்பட்டு விட்டது. 1976 இல் இந்திராவின் காங்கிரஸ் ஆட்சி, நாட்டில் அவசர நிலையை பிரகடனம் செய்து, அடிப்படை உரிமைகளைப் பறித்திருந்த காலம். அப்போது இந்தியாவின் வெளியுறவு செயலாளர் கேவல் சிங் என்ற அதிகாரியும், இலங்கை வெளியுறவு செயலாளராக இருந்த டபிள்யூ.டி. ஜெயசிங்கே என்ற அதிகாரியும், கடிதங்களை பரிமாறிக் கொண்டு ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கி, தமிழர்கள் கச்சத் தீவில் மீன் பிடிக்கும் உரிமையைத் தடுத்து நிறுத்தி விட்டனர்.

இரு நாட்டின் பிரதமருக்கு இடையே உருவான ஒப்பந்தத்தில் வழங்கப்பட்டிருந்த உரிமையை இரு மாநில அதிகாரிகள் உருவாக்கிய ஒப்பந்தத்தில் பறித்து விட்டனர் !

கச்சத் தீவை வழங்குவதற்கு இருநாட்டு பிரதமர்களும் செய்து கொண்ட ஒப்பந்தம், நாடாளுமன்றத்தில் அறிக்கையாக முன் வைக்கப்பட்டதே தவிர, வாக்கெடுப்பு நடத்தி நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறவில்லை என்பதே உண்மை ! எனவே சட்டப்படியாக கச்சத் தீவு இலங்கைக்கு வழங்கப்படவில்லை. இதே அடிப்படையில் உச்சநீதிமன்றத்தில் ஜெயலலிதா தொடர்ந்த வழக்கும் நிலுவையில் உள்ளது. பார்ப்பன ‘இந்து’ நாளேடுகள் இந்த வரலாற்று உண்மைகளை மறைத்து சிங்களர்களின் குரல் ஒலிப்பதை தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும். கச்சத் தீவு தமிழர்களுக்கே உரிமையானது என்பதற்கு ஏராளமான வரலாற்றுச் சான்றுகள் உண்டு !

அவை அடுத்த இதழில்.

---

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 24th February 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.